நடப்பு நிகழ்வுகள் தொகுப்பு

ஜனவரி - டிசம்பர் 2025
பகுதி - 2

1. பல்வேறு ஆணையங்களின் தலைவர்கள்

தலைவர், நிதி ஆயோக் (NITI Aayog)	பிரதமர் (நரேந்திர மோடி)
துணைத் தலைவர், நிதி ஆயோக்	சுமன் பெரி
தலைமை நிர்வாக அதிகாரி (CEO), நிதி ஆயோக்	பி.வி.ஆர். சுப்பிரமணியம்
தலைவர், தேசிய மருத்துவ ஆணையம்	டாக்டர் அபிஜித் சந்திரகாந்த் ஷேத்
தலைவர், மத்தியப் பணியாளர் தேர்வாணையம் (UPSC)	டாக்டர் அஜய் குமார்
தலைவர், 22-வது சட்ட ஆணையம்	ரிதுராஜ் அவஸ்தி
தலைவர், தேசிய மகளிர் ஆணையம்	விஜயா கிஷோர் ரஹத்கர்
தலைவர், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்	ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர்
தலைவர், பணியாளர் தேர்வாணையம் (SSC)	S. கோபாலகிருஷ்ணன்
தலைவர், மத்திய ஊதியக் குழு	ரஞ்சனா பிரகாஷ் தேசாய்
தலைவர், 16-வது நிதிக் குழு	அரவிந்த் பனகாரியா
தலைவர், போட்டி ஆணையம்	ஸ்வானீத் கவுர்
தலைவர், தேசிய பழங்குடியினர் ஆணையம்	அந்தர் சிங் ஆர்யா
தலைவர், தேசிய ஆதிதிராவிடர் ஆணையம்	கிஷோர் மக்வானா
தலைவர், தேசிய மனித உரிமைகள் ஆணையம்	V.S. ராமசுப்பிரமணியன்
தலைவர், தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்	-
தலைவர், தேசிய சிறுபான்மையினர் ஆணையம்	-
தலைவர், அணுசக்தி ஆணையம்	அஜித் குமார் மொஹந்தி
தலைவர், காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம்	மனோஜ் குமார்

2. 20வது ஜி20 உச்சிமாநாடு 2025

- நிகழ்வு நாள்: நவம்பர் 22-23, 2025
- இடம்: ஜோகன்னஸ்பர்க், தென்னாப்பிரிக்கா (ஆப்பிரிக்கக் கண்டத்தில் நடைபெறும் முதல் ஜி20 உச்சிமாநாடு)
- கருப்பொருள்: ஒற்றுமை, சமத்துவம் மற்றும் நிலைத்தன்மை
- தலைவர்: சிரில் ரமபோசா (தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதி)

- நிகழ்ச்சி நிரல் மற்றும் முக்கியப் பகுதிகள்

  - அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, நிலையான தொழில்மயமாக்கல், காலநிலை மீள்திறன், உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் சமூக நீதி ஆகியவை முன்னுரிமைகளாக இருந்தன.

- **முக்கிய முடிவுகள்**

  - ஒற்றுமை, சமத்துவம் மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் 122 பத்திகள் கொண்ட பிரகடனம்
  - புதிய தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய அணுகல், பொறுப்பான மற்றும் வெளிப்படையான செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம்
  - காலநிலை மீள்திறன், பசுமைத் தொழில்மயமாக்கல், ஆற்றல் மாற்றம் ஆகியவற்றுக்கு ஆதரவு.
  - வறுமையைக் குறைக்கவும், நிலையான வளர்ச்சியை ஆதரிக்கவும் பலதரப்பு வளர்ச்சி வங்கிகளை வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாடு

- **இந்தியாவின் முக்கிய முன்மொழிவுகள்**

  - உலகளாவிய பாரம்பரிய அறிவுக் களஞ்சியம், ஜி20-ஆப்பிரிக்கா திறன் பெருக்கி முயற்சி உலகளாவிய போதைப்பொருள்-பயங்கரவாத எதிர்ப்பு கூட்டணி.

- உலகளாவிய சுகாதாரப் பதிலளிப்புக் குழு, திறந்த செயற்கைக்கோள் தரவுக் கூட்டாண்மை.

G20 என்றால் என்ன?

- இது உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளை உள்ளடக்கிய ஒரு சர்வதேச மன்றமாகும். இதில் உலகப் பொருளாதாரம், நிதி மற்றும் மேம்பாடு தொடர்பான விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படுவதோடு, தேவையான மாற்றங்களைச் செய்வதற்காக உறுப்பு நாடுகள் இணைந்து செயல்படுகின்றன.
- இதில் 19 உறுப்பு நாடுகள் உள்ளன. (அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவூதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆப்பிரிக்க ஒன்றியம்.

3. இந்தியாவில் நான்கு புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள்

- இந்திய அரசு, நவம்பர் 21, 2025 முதல் நான்கு புதிய தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்தியுள்ளது. இவை, ஏற்கனவே உள்ள 29 தொழிலாளர் நலச்சட்டங்களுக்குப் பதிலாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- ஊதியச் சட்டம், 2019 நோக்கம்: ஊதியம், ஊதியக் கட்டமைப்பு, குறைந்தபட்ச ஊதியம், சரியான நேரத்தில் ஊதியம் வழங்குதல், போனஸ் வழங்குதல் போன்றவற்றை ஒருங்கிணைத்தல்.
- தொழில் உறவுகள் சட்டம், 2020, நோக்கம்: தொழில்துறை உறவுகள், தொழிலாளர் - நிர்வாக உறவுகள், தொழிற்சங்கங்கள், பணியாளர்களைப் பணியமர்த்தல், பணிநீக்கம் செய்தல், தகராறுகளைத் தீர்த்தல் போன்றவற்றை நவீனமயமாக்குதல்.
- சமூகப்பாதுகாப்புக் குறியீடு, 2040, நோக்கம்: சமூகப் பாதுகாப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, பிளாட்.்பார்ம் அல்லது கிக் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புச்சாரா துறை தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல்.
- ஓஎஸ்எச் (**OSH**) சட்டம் 2020: பணிசார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பனிச்சூழல் நிலைமைகள் ஆகியவற்றின்மீது கவனம் செலுத்கிறது.

முக்கிய அம்சங்கள்

தலைப்புகள்	முக்கிய மாற்றங்கள் அல்லது பயன்கள்
ஊதியங்கள் மற்றும் ஊதியக் கட்டமைப்பு	குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஊதியத்தை உரிய நேரத்தில் கட்டாயமாக வழங்குதல், ஊதியத்தில் சமத்துவம், பாகுபாடு பாராமை.
வேலை பாதுகாப்பு மற்றும் ஒப்பந்த, தற்காலிக, இணையத் தளப் பணியாளர்கள் மற்றும் அமைப்புசாராத் துறைக்கான பாதுகாப்பு	தற்காலிகப் பணியாளர்கள், தளப் பணியாளர்கள், அமைப்புசாரா துறைப் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் இப்போது சமூகப் பாதுகாப்பு, வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவற்றின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.
பணியிடப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல்	பணியிடப் பாதுகாப்பு, சுகாதார வசதிகள், வேலை நேரம், விடுப்பு மற்றும் பிற முக்கிய நிபந்தனைகளுக்கான புதிய விதிகள்
தொழில்துறை உறவுகள் மற்றும் முதலாளி-தொழிலாளர் பிணக்குத் தீர்வு	தொழிலாளர் மற்றும் முதலாளிகள் இருவருக்கும் தெளிவான விதிகள், தகராறுகளைத் தீர்ப்பதற்கான வேகமான மற்றும் வெளிப்படையான வழிமுறைகள், குறிப்பிட்ட கால வேலைவாய்ப்பு நிலைத்தன்மை மற்றும் உற்பத்தித் திறன்
எளிய, ஒருங்கிணைந்த மற்றும் நவீனத் தொழிலாளர் சட்ட அமைப்பு	முந்தைய 29 தொழிலாளர் சட்டங்கள் தற்போது 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன, விதிகள்

	எளிமையாக்கப்பட்டு, புரிந்துகொள்ள எளிதாக உள்ளன.
வணிகம் மற்றம் முதலீட்டிற்கு உகந்த தொழிலாளர் சூழல்	புதிய விதிகள், ஆள்சேர்ப்பு, பணியிட மேலாண்மை, உற்பத்தித் திறன் மற்றும் தொழில்துறை வளர்ச்சி நிலைமைகளை மேம்படுத்துவதன்மூலம் வணிகம் செய்வதை எளிதாக்குவதை ஊக்குவிக்கின்றன.

4. யுவா அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு (YUVA AI for ALL) முயற்சி

- நவம்பர் 2025இல் தொடங்கப்பட்டது
- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் இந்தியா செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.
- நோக்கம்: இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அடிப்படைப் புரிதலையும் கல்வியையும் பிரபலப்படுத்துவது, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே செயற்கை நுண்ணறிவு குறித்த அறிவைப் பரப்புவது.
- பாடத்தின் கால அளவு மற்றும் வடிவம்: சுய கற்றல் அடிப்படையிலான இணையவழிப் பாடம், மொத்தம் சுமார் 4.5 மணி நேரம். நிஜ வாழ்க்கை இந்திய உதாரணங்கள் இதில் அடங்கும், இது கற்றலை எளிமையாகவும், சுவாரஸ்யமாகவும் தொடர்புடையதாகவும் ஆக்குகிறது.
- யார் விண்ணப்பிக்கலாம்: மாணவர்கள் (பள்ளி மற்றும் கல்லூரி), இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் (பணியில் உள்ள வல்லுநர்கள் மற்றும் ஆர்வமுள்ள எந்தவொரு குடிமகனும் - முன் செயற்கை நுண்ணறிவு அல்லது கோடிங் அறிவு தேவையில்லை.
- பாட மொழி: கற்றலை எளிமையாகவும், நடைமுறைக்கு ஏற்றதாகவும் மாற்றுவதற்காக, இந்தப் பாடத்திட்டம் இந்தியச் சூழலை உள்ளடக்கியுள்ளது. இப்பாட நெறி ஆங்கிலம், இந்தி என எந்தத் தளம் ஆதரிக்கிறதோ அந்த மொழியில் இருக்கலாம்.

5. 56வது IFFI 2025

- நாள்: நவம்பர் 20-28
- நடத்துபவர்: பனாஜி (கோவா)
- கவனம் செலுத்தும் நாடு: ஜப்பான்
- கூட்டாளர் நாடு: ஸ்பெயின்
- சிறப்பம்ச நாடு: ஆஸ்திரேலியா
- இந்த முறை தொடக்க விழாவானது, பாரம்பரிய உள்ளரங்க விழாவிற்குப் பதிலாக, ஒரு பிரம்மாண்டமான திருவிழா பாணியிலான அணி வகுப்புடன் நடைபெற்றது.
- திரையிடப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட திரைப்படங்கள்: இந்த ஆண்டு உலகம் முழுவதிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் சுமார் 270க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் பெறப்பட்டன. இதில் 84 நாடுகளைச் சேர்ந்த திரைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- சிறப்புத் திரையிடல்களில் 13 உலக அளவிலான முதல் திரையிடல்கள், 4 சர்வதேச அளவிலான முதல் திரையிடல்கள் மற்றும் 46 ஆசிய அளவிலான முதல் திரையிடல்கள் ஆகியவை அடங்கும்.
- புதுமைகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்
- திரைப்படம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்ட முதலாவது "சினிமா ஏஐ ஹாக்கத்தான்" இந்த ஆண்டில் நடைபெற்றது.
- WaVES Bazaar/WaveX Startup Zone - Platform for AVGC-XR (அனிமேஷன், விஎப்எக்ஸ் கேமிங், காமிக்ஸ், எக்ஸ் ஆர்) மற்றும் பொழுதுபோக்குத் துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கான ஒரு தளம் ஆகும்.

6. ஐசிசி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை 2025

- 2025 நவம்பர் 2 அன்று, நவி மும்பையில் நடைபெற்ற போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியைத் தோற்கடித்து, இந்திய மகளிர் கிரிக்கெட் அணி தனது முதலாவது ஐசிசி மகளிர் ஒரு நாள் உலகக் கோப்பையை வென்றது.

7. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம்

- நாட்டின் 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், 2025 அக்டோபர் 27 அன்று, "சிறப்புத் தீவிரத் திருத்தத்தை" தேர்தல் ஆணையம் அறிவித்தது.

- **சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்த அறிமுகம்**

  - ✓ வாக்காளர் பட்டியலைப் புதுப்பிப்பதற்கான ஒரு சிறப்புச் செயல்முறை
  - ✓ பொதுவான திருத்தச் செயல்முறையைவிட மிகவும் தீவிரமான ஒரு செயல்முறை
  - ✓ வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பதன்மூலம் வாக்காளர் பட்டியல்களைச் சரிபார்த்தல்.

- **நோக்கங்கள்**

  - ✓ தூய்மையான மற்றும் நம்பகமான வாக்காளர் பட்டியலின்மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் நடைபெறுவதை உறுதி செய்தல்.
  - ✓ இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் அல்லது இரட்டைப் பதிவு கொண்ட வாக்காளர்களைப் பட்டியலிலிருந்து நீக்குதல்
  - ✓ இது, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950இன் பிரிவு 21(3)-இன் கீழும், இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 324-இன் கீழும் மேற்கொள்ளப்படுகிறது.

8. GSAT-7R-இந்தியாவின் மிக அதிக எடையுள்ள தகவல் தொடர்பு செயற்கைக் கோள்

- **செலுத்துதல்:** GSAT-7R (CMS-03) இஸ்ரோ அமைப்பால், 2025ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் தேதி, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.
- **நோக்கம்:** இந்தியக் கடற்படைக்காக வடிவமைக்கப்பட்ட, அதிநவீனத் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் இது ஆகும். கடற்படை, கடலோரக் காவல்படை மற்றும் பிற பாதுகாப்புப் படைகளுக்குப் பாதுகாப்பான மற்றும் அதிவேகத் தகவல் தொடர்பு வசதியை இது வழங்குகிறது.

- **சிறப்பம்சங்கள்**
  - ✓ செலுத்து வாகனம் LVM3-M5
  - ✓ செயற்கைக்கோள் எடை: சுமார் 4400 கிகி ஆகும்.
  - ✓ திட்டக் காலம்: 15 ஆண்டுகள்
  - ✓ மாற்றீடு: GSAT-7R ஆனது, GSAT-7 (ருக்மிணி) செயற்கைக்கோளுக்கு மாற்றாகச் செயல்படுகிறது.

9. LVM3-M5 செலுத்து வாகனம்

- முழுப்பெயர்: Launch Vehicle Mark-3 (LVM3)
- புனைப்பெயர்: "பாகுபலி ராக்கெட்" - இந்தியாவின் மிகவும் சக்தி வாய்ந்த ஏவு வாகனம்

10. UNFCCC காலநிலை மாற்ற மாநாடு 2025 (COP30)

- COP30 என்றால் என்ன? இது ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றத்திற்கான அடிப்படைக் கூட்டமைப்பின் (United Nations Framework Convention on Climate Change) 30-வது திட்டமாகும்.
- இடம் மற்றும் தேதிகள்: பெலெம், பிரேசில், நவம்பர் 20 முதல் 29 வரை, 2025.

- **முக்கிய நோக்கங்கள்**
  - ✓ பாரிஸ் ஒப்பந்த இலக்குகளுக்கு இணங்க, உலகளாவிய காலநிலை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல்.
  - ✓ முதலாவது, "உலகளாவிய இருப்பு மதிப்பீட்டின்" (Global Stocktake) முடிவுகளின் அடிப்படையில், புதிய மற்றும் வலுவான காலநிலை உத்திகளை வகுத்தல்.
  - ✓ ஆற்றல் மாற்றம், வனப் பாதுகாப்பு, வேளாண் சீர்திருத்தம், காலநிலைத் தயார்நிலை கொண்ட நகரங்கள் மற்றும் காலநிலை நிதியளிப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்.

- **COP30 இன் முக்கிய கருப்பொருள்கள் - நிகழ்ச்சி நிரல்**
  - ✓ COP30 இன் கருப்பொருள், "பாரிஸ் ஒப்பந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதை" மையமாகக் கொண்டுள்ளது.
  - ✓ தூய ஆற்றல், தொழில் மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கு மாறுதல்
  - ✓ காடுகள், பெருங்கடல்கள் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்தல்
  - ✓ வேளாண்மை மற்றும் உணவு அமைப்புகளில் சீர்திருத்தம்
  - ✓ காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறன்கொண்ட நகரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு.
  - ✓ சமூக மற்றும் மனித மேம்பாடு
  - ✓ காலநிலை நிதியளிப்பு, தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாடு.

- UNFCCC: 1992ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மாநாடு (United Nations Framework Convention on Climate Change), காலநிலை அமைப்பில் மனிதர்களால் ஏற்படும் ஆபத்தான குறுக்கீடுகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.

11. 8வது மத்திய ஊதியக் குழு (8th Central Pay Commission)

- உருவாக்கம்: 8வது மத்திய ஊதியக்குழுவானது, இந்திய அரசின் நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையால், 2025ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி முறையாக அமைக்கப்பட்டது.
- தலைவர்: நீதியரசர் ரஞ்சனா பிரகாஷ் தேசாய்
- பகுதிநேர உறுப்பினர்: பேராசிரியர் புலக் கோஷ்
- உறுப்பினர்-செயல்: பங்கஜ் ஜெயின்

- **வரம்பும் நோக்கங்களும்**
  - ✓ பாதுகாப்புப் பணியாளர்கள், அகில இந்தியப் பணி அலுவலர்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசப் பணியாளர்கள் உள்ளிட்ட மத்திய அரசு ஊழியர்களின் ஊதியங்கள், படிகள் மற்றும் வசதிகளை மறுஆய்வு செய்தல்.
  - ✓ ஒரு பகுத்தறிவு மிக்க, திறமையான மற்றும் செயல்திறன் சார்ந்த ஊதியக் கட்டமைப்பை உறுதி செய்தல்.

- **காலக்கெடு மற்றும் அறிக்கை**
  - ✓ அறிக்கையை 8 மாதங்களுக்குள் (ஜூன் 2027-க்குள்) இறுதி செய்தல்
  - ✓ அறிக்கை ஜனவரி 2026 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **முந்தைய மத்திய ஊதியக் குழுக்கள்**
  - ✓ முதலாவது குழு (1947), 2வது குழு (1957), 3வது குழு (1973), 4-வது குழு (1983), 5-வது குழு (1994), 6-வது குழு (2006), 7-வது குழு (2014)

12. லக்னோ "சமையற்கலை நகரம்" (City of Gastronomy)

- உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டின் 43-வது அமர்வின்போது, அக்டோபர் 3, 2025 அன்று இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- நோக்கம்: லக்னோவின் செழுமையான "அவதி" (Awadhi) சமையல் மரபைச் சிறப்பிப்பதே இதன் நோக்கமாகும்.
- முக்கிய உணவுகள்: கெபாப்கள், பிரியாணி, கோர்மா, ஷீர்மால் போன்றவை
- இந்தியாவின் நிலை: உணவுக்கலைக்காக அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது நகரமாக லக்னோ திகழ்கிறது. 2009-இல் ஐதராபாத் முதன்முதலில் அங்கீகரிக்கப்பட்டது.

- **யுனெஸ்கோ படைப்பாற்றல் நகரங்களின் வலையமைப்பு (UNESCO Creative Cities Network -UCCN)**
  - ✓ தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 2004
  - ✓ நோக்கம்: நிலையான நகர்ப்புற வளர்ச்சிக்காகப் படைப்பாற்றலை மேம்படுத்துதல்.
  - ✓ வகைகள்: 8 முக்கிய துறைகள் - கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலைகள், வடிவமைப்பு, திரைப்படம், உணவுக்கலை, இலக்கியம், ஊடகக் கலைகள், இசை கட்டிடக்கலை.
  - ✓ 2025ஆம் ஆண்டின் புதிய சேர்க்கை: கட்டிடக்கலை ஒரு புதிய வகையாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
  - ✓ தற்போதைய நிலை: 100-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 408 நகரங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

- **யுனெஸ்கோ படைப்பாற்றல் நகரங்களின் வலையமைப்பில் இந்தியாவின் தற்போதைய நிலை**
  - ✎ ஜெய்ப்பூர் - கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலைகள் (2009)
  - ✎ வாரணாசி - இசை (2015)
  - ✎ சென்னை - இசை (2017)
  - ✎ மும்பை - திரைப்படம் (2019)
  - ✎ ஸ்ரீநகர் - கைவினை மற்றும் நாட்டுப்புறக்கலைகள் (2021)
  - ✎ ஹைதராபாத் - உணவுக்கலை / சமையல்கலை (2019)
  - ✎ குவாலியர் - இசை (2023)
  - ✎ கோழிக்கோடு - இலக்கியம் (2023)
  - ✎ லக்னோ - உணவுக்கலை மற்றும் சமையல்கலை (2025)

13. 46வது ஆசியான் உச்சி மாநாடு (ASEAN)

- இடம்: கோலாலம்பூர், மலேசியா
- நாள்: மே 26-27, 2025
- தலைவர்: அன்வர் இப்ராஹிம் (மலேசியப் பிரதமர்)
- கருப்பொருள்: ASEAN matters: உள்ளடக்கிய தன்மை மற்றும் நிலைத்தன்மை

- **பிரதமர் நரேந்திர மோடி உரை**
  - ✓ காலநிலை நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிப்பு
  - ✓ புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதில் முக்கியத்துவம்.
  - ✓ அக்டோபர் 26, 2025 அன்று காணொலி வாயிலாக நடைபெற்றது.
  - ✓ இந்தியா- ஆசியான் கூட்டாண்மை மற்றும் 'உலகளாவிய தெற்கு' (Global South) நாடுகளின் பங்கை வலியுறுத்தியது.
  - ✓ 'கிழக்கு நோக்கிய கொள்கை' (Act East Policy)-யின் பொருந்துதலைச் சுட்டிக்காட்டியது.
  - ✓ கடல்சார் பாதுகாப்பு மற்றும் 'நீலப்பொருளாதாரம்' ஆகியவற்றின்மீது அழுத்தம்.

14. நோபல் பரிசுகள்

- முந்தைய ஆண்டில் மனிதகுலத்திற்குப் பெரும் நன்மையை அளித்த தனிநபர்களுக்கு நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

- **நோபல் பரிசு பற்றிய ஒரு அறிமுகம்**
  - ✓ டைனமைட்டைக் கண்டுபிடித்த ஆல்பிரட் நோபல், தனது மரபுச் சிறப்பைப் போற்றும் வகையில் இப்பரிசை நிறுவினார்.
  - ✓ முதன்முதலாக 1901-ஆம் ஆண்டில் (5 பிரிவுகளில்) வழங்கப்பட்டது. ஆறாவது பிரிவாக பொருளாதாரம் 1968-ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது.
  - ✓ மறைவுக்குப் பிந்தைய விருதுகள் வழங்கப்படுவதில்லை.

- **இந்தியாவில் நோபல் பரிசு சாதனைகள்**

  - ✓ **நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர்: இரவீந்திரநாத் தாகூர் (இலக்கியம் 1913)**
  - ✓ **நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியப் பெண்மணி: அன்னை தெரசா – அமைதி (1979).**

- **பிரிவுகள்**

1. **வேதியியல்**
   - ✓ பெயர்: சுசுமு கிடகாவா (ஜப்பான்). ரிச்சர்ட் ராப்சன் (ஆஸ்திரேலியா), உமர் எம். யாகி (அமெரிக்கா)
   - ✓ தலைப்பு: உலோக-கரிம கூட்டமைப்புகளின் உருவாக்கம்.

2. **இயற்பியல்:**
   - ✓ பெயர்: ஜான் கிளார்க் (இங்கிலாந்து), மைக்கேல் எச் டிடவோரெட் (பிரான்ஸ்), ஜான் எம். மார்டினிஸ் (அமெரிக்கா).
   - ✓ தலைப்பு: மின் சுற்றுகளில் பேரளவு குவாண்டம் இயந்திரவியல் சுரங்க விளைவு (macroscopic quantum mechanical tunneling) மற்றும் ஆற்றல் குவாண்டமாக்கத்தைக் கண்டறியதல்.

3. **உடலியல் (மருத்துவம்)**
   - ✓ பெயர்: மேரிஇ. புரூண்கோ (அமெரிக்கா).. ∴பிடிரட் ராம்ஸ்பெல் (அமெரிக்கா), ஷிமோன் சகாகுச்சி (ஜப்பான்)
   - ✓ தலைப்பு: நோயெதிர்ப்பு மண்டல ஒழுங்குமுறைக்கு இன்றியமையாத ஒழுங்குபடுத்தும் T-செல்கள் (Research on Regulatory T cells) மற்றும் FOXP3 மரபணு குறித்த ஆராய்ச்சி.

4. **இலக்கியம்:**
   - ✓ பெயர்: லாஸ்கோ கிராஸ்னஹோர்காய் (ஹங்கேரி)
   - ✓ புகழ்பெற்ற படைப்புகள்: சாடாண்டாங்கோ, வார் அண்ட் வார், சியோபோ தெர் பிலோ, தி மெலன்கலி ஆ.∴ப் ரெசிண்டன்ஸ்

5. **அமைதி:**
   - ✓ பெயர்: மரியா கொரிணா மச்சாடோ (வெனிசுலா)
   - ✓ தலைப்பு: ஜனநாயக உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் அரசியல் சுதந்திரத்திற்காகப் பரிந்து பேசுதல்.

6. **பொருளாதாரம்:**
   - ✓ பெயர்: ஜோயல் மோகிர் (அமெரிக்கா), பிலிப் அஜஸியான் (பிரான்ஸ்), பீட்டர் ஹவ்விட் (கனடா)
   - ✓ தலைப்பு: புதுமையாக்கத்தால் உந்தப்படும் பொருளாதார வளர்ச்சியையும், நீண்ட காலச் செழிப்பைத் தக்கவைக்கும் சூழல்களையும் விளக்குதல்.

15. பிரதமரின் தன் தான்ய கிரிஷி யோஜனா (PM Dhan-Dhanya Krishi Yojana)

- ஜூலை 2025இல் மத்திய அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- 2025-26ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் முதல்முதலில் அறிவிக்கப்பட்டது.
- தொடக்கம்: அக்டோபர் 2025
- கால அளவு: ஆறு ஆண்டுகள் (2025-26 முதல்)
- நோக்கம்: இந்திய விவசாயத்தை உருமாற்றுவதும், விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பதும் ஆகும்.

- **இலக்கு:**
  - ✓ 100 பின்தங்கிய மாவட்டங்களில் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், சிறந்த நீர்ப்பாசனம், சேமிப்பு, கடன் வசதி மற்றும் நிலையான வேளாண் நடைமுறைகள் மீது கவனம் செலுத்துதல்.

- **விருப்பார்ந்த மாவட்டங்கள் திட்டம் (ADP)**
  - ✓ 2018-ஆம் ஆண்டில் இந்திய அரசால் முதன் முதலில் தொடங்கப்பட்டது.
  - ✓ நோக்கம்: மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள 112 மாவட்டங்களின் ஒட்டுமொத்த மேம்பாடு.

- எதிர்பார்க்கப்படும விளைவுகள்: ஏறத்தாழ 1.7 கோடி விவசாயிகளுக்கு நேரடிப் பயன்.
- முக்கிய கவனம்: சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, உள்கட்டமைப்பு மேம்பாடு, பொருளாதார வாய்ப்புகள்.
- மாவட்டத் தேர்வுக்கான அளவுகோல்கள்: குறைந்த உற்பத்தித் திறன், குறைந்த பயிர்ச் செறிவின்மை, கடன் வசதி கிடைப்பதில் உள்ள குறைபாடுகள், நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், சமச்சீர் பிரதிநிதித்துவம்: ஒவ்வொரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்திலிருந்தும் குறைந்தது ஒரு மாவட்டமாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

16. முப்படைகளின் ராணுவப் பயிற்சிகள் 'திரிசூல் 2025'

- **நாட்கள்**
  - ✓ 30அக்டோபர் - 13 நவம்பர், 2025

- **பயிற்சிப் பகுதிகள்**
  - ✓ குஜராத் (சர் க்ரீக்)
  - ✓ ராஜஸ்தானின் பாலைவனப் பகுதிகள்
  - ✓ வடக்கு அரபிக் கடல
  - ✓ ஏற்பாட்டாளர்: இந்திய கடற்படை

- **பங்கேற்கும் படைகள்**
  - ✓ இந்தியா இராணுவம் (தெற்குப் படைப்பிரிவு)
  - ✓ இந்தியக் கடற்படை (மேற்குப் படைப்பிரிவு)
  - ✓ இந்திய விமானப்படை (தென்மேற்குப் படைப்பிரிவு).

- **நோக்கங்கள்:**
  - ✓ கூட்டு செயல்பாட்டு நடைமுறைகளைச் சோதித்தல்.
  - ✓ முப்படைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்
  - ✓ பல களச் செயல்பாடுகளுக்கான. வலையமைப்பை மையமாகக் கொண்ட கட்டளை ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
  - ✓ கூட்டு உளவு, கண்காணிப்பு மற்றும் உளவு அறிதல் நடைமுறைகள், மின்னணுப் போர் மற்றும் இணையவழிப் போர்த் திட்டங்களைச் சரிபார்த்தல்.

- **சர் க்ரீக் (About Sir Creek)**
  - ✓ சதுப்புநில முகத்துவாரப் பகுதி (கட்ச், குஜராத் மற்றும் சிந்து, பாகிஸ்தான்).

- ✓ அரபிக்கடலுடன் சங்கமிக்கும் இடமாகச் செயல்படுகிறது.
- ✓ நீளம் சுமார் 96 கிமீ.

- **சர்ச்சை**
- **இந்திய பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினை**
  - ✓ இந்தியா தனது எல்லையை மத்திய கால்வாய் வரை கருதுகிறது.
  - ✓ பாகிஸ்தான் கிழக்குக் கரை நெடுகிலும் உள்ள எல்லையை உரிமை கோருகிறது.

- **முக்கியத்துவம்**
  - ✓ முக்கியத்துவம் வாய்ந்த கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடல் எல்லை
  - ✓ மேற்குக் கடற்படைக் கட்டளையின்கீழ் உள்ள முக்கிய கண்காணிப்புப் பகுதி
  - ✓ மீன்வளம் மற்றும் பிற கடல் வளங்கள் நிறைந்தது.
  - ✓ பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் கடலோரச் சூழல் மண்டல சமநிலைக்கு இன்றியமையாதது.

17. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி (ஜி.எஸ்.டி 2.0)

எளிதாக்கப்பட்ட ஜிஎஸ்டி கட்டமைப்பு

- தற்போதைய நான்கு அடுக்கு முறை (5%, 12%, 18%, 28%) இரண்டு அடுக்குமுறையாக எளிமையாக்கப்பட்டது.
  - ✓ அத்தியாவசியப் பொருட்களுக்கு 5 விழுக்காடு ஜிஎஸ்டி (தகுதி விகிதம்)
  - ✓ இதரப் பொருட்களுக்கு 8 விழுக்காடு ஜிஎஸ்டி (நிலையான விகிதம்)
  - ✓ புகையிலை மற்றும் பான் மசாலா போன்ற ஆடம்பர, தீங்கு விளைவிக்கும் மற்றும் தகுதியற்ற பொருட்களுக்கு 40 விழுக்காடு ஜிஎஸ்டி

- **அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிச்சலுகை**
  - ✓ சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள்: 0% ஜிஎஸ்டி
  - ✓ UHT பால், பனீர் மற்றும் இந்திய ரொட்டி போன்ற அத்தியாவசியப் பொருட்கள். 0% ஜிஎஸ்டி நுகர்வோர் பொருட்கள்.
  - ✓ சிறிய கார்கள், தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள், சிமெண்ட் மற்றும் வாகன உதிரிபாகங்கள் மீதான ஜிஎஸ்டி, 28 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.
  - ✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள்மீதான ஜிஎஸ்டி 5 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

- **மருத்துவம் மற்றும் சுகாதார உபகரணங்கள்**
  - ✓ உயிர்காக்கும் 33 மருந்துகளுக்கான ஜிஎஸ்டி 2 விழுக்காட்டிலிருந்து 0 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.
  - ✓ புற்றுநோய் மற்றும் அரிய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய மருந்துகளுக்கு 0 விழுக்காடு ஜிஎஸ்டி

- **வணிக வசதி மற்றும் தகராறு தீர்வு**
  - ✓ சரக்கு மற்றும் சேவை வரி மேல்முயீட்டுத் தீர்ப்பாயம் அமைப்பதற்கான ஏற்பாடு

- **ஜிஎஸ்டி என்றால் என்ன?**
  - ✓ 2017ஆம் ஆண்டின் 101வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
  - ✓ ஒரே நாடு, ஒரே வரி என்ற கொள்கையின் அடிப்படையில்.

- **நன்மைகள் இவற்றை உள்ளடக்கயது:**
  - ✓ குறைக்கப்பட்ட போக்குவரத்துச் செலவு

- ✓ தானியங்கு உள்ளீட்டு வரி வரவு
- ✓ ரூ.2 கோடி வரை விற்று முதல் கொண்ட சிறு வணிகங்களுக்கு ஆண்டு வருமான அறிக்கை தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு.

- **முழுமையாகத் தானியங்கிமுறைப்படுத்தப்பட்ட பணம் திருப்பியளிப்புச் செயல்முறை**
  - ✓ இந்தியாவில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதன்மீதான ஒரு விரிவான மறைமுக வரி.

- **ஜிஎஸ்டி-2.0 யின் இதர அம்சங்கள்**

- போலி பில்லிங், தவறான ஐடிசி கோரிக்கைகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைக் கண்டறிந்து, விரைவான பணம் வழங்கல் மற்றும் பணத்தைத் திரும்ப அளிப்பதற்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வைப் பயன்படுத்துதல்.

- கொள்முதல் மற்றும் விற்பனை விலைப்பட்டியல்களைத் தானாக ஒப்பிட்டுப் பார்த்து, கோரிக்கை இல்லாத வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை உறுதி செய்தல்.

18. இந்திய துணை குடியரசுத் தலைவர் தேர்தல்

- **சி.பி. இராதாகிருஷ்ணன் இந்தியாவின் 5-வது துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

- **முக்கிய தகவல்கள்**
  - ✓ ஆகஸ்ட் 2025இல் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர் பதவி விலகினார்.
  - ✓ செப்டம்பர் 9, 2025 அன்று நடைபெற்ற துணைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் சிபி. இராதாகிருஷ்ணன், எதிர்கட்சி வேட்பாளர் பி. சுதர்ஷன் ரெட்டியைத் தோற்கடித்து, இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- **தேர்தல் முடிவுகள்**
  - ✓ சிபி. இராதாகிருஷ்ணன் 452 வாக்குகள்
  - ✓ பி. சுதர்ஷன் ரெட்டி 300 வாக்குகள்.

- **சி.பி. இராதாகிருஷ்ணன் வாழ்க்கை வரலாறு**
  - ✓ பிறப்பு: அக்டோபர் 20, 1957
  - ✓ பிற்நத இடம்: திருப்பூர், தமிழ்நாடு
  - ✓ ஜார்க்காண்ட், தெலுங்கானா, புதுச்சேரி மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பணியாற்றியவர்.
  - ✓ தொழில் வேளாண் வல்லுநர் மற்றும் தொழிலதிபர்
  - ✓ கோயம்பத்தூர் தொகுதியிலிருந்து இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

- **முக்கிய உண்மைகள் (இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்)**

  - ✓ குடியரசுத் துணைத் தலைவர், இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த அரசியலமைப்புப் பதவியை வகிக்கிறார்.
  - ✓ மாநிலங்களவையின் அலுவல்வழித் தலைவராகவும் பணியாற்றுகிறார்.
  - ✓ பதவிக்காலம் 5 ஆண்டுகள்
  - ✓ தேர்வாளர் குழு: மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும்.
  - ✓ தகுதி: குறைந்தபட்சம் 35 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

19. 25வது எஸ்சிஓ (SCO) உச்சி மாநாடு 2025

- சீனாவில் நடைபெற்ற 25வது எஸ்சிஓ உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

- **முக்கிய அம்சங்கள்**
  - ✓ இடம்: தியான்ஜின், சீனா
  - ✓ நாள்: 2025 ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1 வரை
  - ✓ தலைமைப் பொறுப்பு: சீனா (2024-25ஆம் ஆண்டிற்கு)
  - ✓ கருப்பொருள்: ஷாங்காய் உணர்வைப் பேணுதல், எஸ்சிஓ-வின் முன்னேற்றப் பயணம்.
  - ✓ பிரகடனம்: உறுப்பு நாடுகள் 'தியான்ஜின் பிரகடன'த்தில் கையெழுத்திட்டன.
  - ✓ புதிய கூட்டாளி நாடு: லாவோஸ் ஒரு கூட்டாளி நாடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
  - ✓ அடுத்த உச்சி மாநாடு (2026) கிர்கிஸ்தானால் நடத்தப்படவுள்ளது.

- **எஸ்சிஓ-வின் வரலாறு**
  - ✓ ஏப்ரல் 26, 1996 அன்று 'ஷாங்காய் ஐந்து' என்ற பெயரில் தொடங்கப்பட்டது.
  - ✓ நோக்கம்: சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது.
  - ✓ எஸ்சிஓ-வின் உருவாக்கம்: ஜூன் 5, 2001 (உஸ்பெகிஸ்தான் இணைந்ததன் மூலம் ''ஷாங்காய் ஐந்து' அமைப்பானது எஸ்சிஓ-ஆக உருமாறியது)
  - ✓ புதிய உறுப்பினர்கள்: இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் 2017-இல் இணைந்தன.
  - ✓ ஈரான் 2023-இல் இணைந்தது
  - ✓ பெலாரஸ் 2024இல் இணைந்தது.

20. சுதர்ஷன் சக்ரா திட்டம் (Mission Sudarshan Chakra)
இந்தியாவின் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்பு

- **நோக்கம்:**
  - ✓ இஸ்ரேலின் அயர்ன் டோம் அமைப்பின் அடிப்படையில் ஒரு உள்நாட்டு வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குதல்.
  - ✓ தேசிய பாதுகாப்புக் கவசத்தை விரிவுபடுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் நவீனமயமாக்குவதன்மூலம் இந்தியாவின் தடுப்பு மற்றும் தாக்குதல் திறன்களை வலுப்படுத்துதல்.
  - ✓ .இந்த அமைப்பு இந்தியாவின் பல அடுக்கு ஏவுகணைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும்.

- **பாதுகாப்பு முன்னுரிமைப் பகுதிகள்**
  - ✓ முக்கியத்துவம் வாய்ந்த பொதுமக்கள் மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் (மருத்துவமனைகள், இரயில்வேக்கள் போன்றவை) பாதுகாப்பு
  - ✓ வான், தரை மற்றும் கடல் முழுவதும் நாடு தழுவிய பாதுகாப்புக் கவசம்

- **சிறப்பம்சங்கள்**
  - ✓ 2035ஆம் ஆண்டிற்குள் இத்திட்டம் நிறைவுபெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
  - ✓ உள்நாட்டு ஆராய்ச்சி. மேம்பாடு மற்றும் உற்பத்தி
  - ✓ மேம்பட்ட கண்காணிப்பு, இணையப் பாதுகாப்பு மற்றும் பௌதீகக் கட்டமைப்புகளின் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்தத் திட்டம்.

- **இராணுவம் சாராத நன்மைகள்**
  - ✓ தரைப்படை வீரர்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக அமைகிறது.
  - ✓ எதிரிகளின் சாத்தியமான தாக்குதல்களுக்கு எதிரான ஒரு தடுப்புச் சக்தியாகச் செயல்படுகிறது.
  - ✓ பாதுகாப்புத் துறையின் நவீனமயமாக்கலில் தற்சார்பை ஊக்குவிக்கிறது.

- **முடிவுரை:** 'மிஷின் சுதர்ஷன் சக்கரம்' என்பது இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றின் ஒரு கலவையைப் பிரதிபலிக்கிறது.

21. பிரதமரின் விக்சித் பாரத் ரோஜ்கார் யோஜனா (PM Viksit Bharat Rozgar Yojana)

- 79-வது சுதந்திர தினத்தின்போது பிரதமரால் அறிவிக்கப்பட்டது.
- நோக்கம்: அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவித்தல்
- .இலக்கு: 2 ஆண்டுகளில் 3.5 கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- முக்கிய கவனம்: முதன்முறையாகப் பணியில் சேர்பவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்.
- ஒருங்கிணைப்பு அமைச்சகம்: தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்.

- **முக்கிய அம்சங்கள்**
- வேலையளிப்போர்: ஒரு புதிய ஊழியருக்கு மாதம் ஒன்று ரூ 3000 வரை.
- புதிய ஊழியர்கள்: இரண்டு தவணைகளாக ரூ.15,000 வரை
- தகுதி பெறும் ஊழியர்கள்: மாதம் ஒன்றுக்கு ரூ.25,000 வரை ஊதியம் ஈட்டுபவர்கள்
- மொத்த செலவினம்: ரூ.1,99,446 கோடி.

- கால அளவு: 1 ஆகஸ்ட் 2025 முதல் 31 ஜூலை 2027 வரை

- **நோக்கமும் முக்கியத்துவமும்:**

  - ✓ உற்பத்தித் துறையை மேம்படுத்துகிறது.
  - ✓ வேலையின்மை விகிதத்தைக் குறைக்கிறது
  - ✓ பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

22. நிசார் (NISAR) செயற்கைக்கோள்

- முழுப்பெயர்: நாசா-இஸ்ரோ செயற்கைத் துளை ரேடார் (NASA-ISRO Synthetic Aperture Radar)
- உருவாக்கியது: நாசா மற்றும் இஸ்ரோ இணைந்து
- திட்ட வகை: புவி கண்காணிப்புத் திட்டம்
- ஏவுதளம்: சதீஷ் தவான் விண்வெளி மையம், ஸ்ரீஹரிகோட்டா
- ஏவுவாகனம்: ஜிஎஸ்எல்வி-எப்16

- திட்டத்தின் நோக்கம்: புவியின் மேற்பரப்பில் ஏற்படும் மிகச்சிறிய மற்றும் மெதுவான மாற்றங்களைக் கண்காணித்தல்.

- **திட்டக் கூறுகள்:**
  - ✓ **L-Band SAR (நாசாவால் உருவாக்கப்பட்டது) – உயிரித்திரள் மற்றும் நில மாற்றங்களைப் பயில்வதற்குப் பயனுள்ளது.**
  - ✓ **S-Band SAR** (இஸ்ரோவால் உருவாக்கப்பட்டது)- பயிர்கள், ஈர நிலங்கள் மற்றும் மேற்பரப்பு அம்சங்களைக் கண்காணிப்பதற்கு ஏற்றது.

- **சிறப்பம்சங்கள்:**
  - ✓ எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றது: மேகமூட்டம் அல்லது மழைக்காலச் சூழல்களிலும் தரவுகளைச் சேகரிக்க இயலும்.
  - ✓ படமெடுக்கும் வீச்சு 240 கிமீ அகலம்.

23. **திரிபுவன் கூட்டுறவுப் பல்கலைக்கழகம்**
இந்தியாவின் முதல் கூட்டுறவுப் பல்கலைக்கழகம்

- ✓ குஜராத்தின் ஆனந்த் நகரில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.
- ✓ முக்கியத்துவம்: இந்தியாவில் முதல் தேசிய கூட்டுறவுப் பல்கலைக்கழகம்

- **பல்கலைக் கழகத்தின் பெயர்**
  - ✓ திரிபுவன்தாஸ் கிஷிபாய்படேல்- அமுல் நிறுவனத்தின் நிறுவனர்.
  - ✓ நோக்கம்: கூட்டுறவு மேலாண்மை, நிதி மற்றும் சட்டம் போன்ற துறைகளில் சிறப்புக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின்மூலம் கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துதல்.
  - ✓ பயிற்சி இலக்கு: 5 ஆண்டுகளில் 2 மில்லியனுக்கும் அதிகமான தொழில் வல்லுநர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

- **கவனம் செலுத்தும் முக்கிய பகுதிகள்**
  - ✓ கூட்டுறவு மேலாண்மை
  - ✓ கணக்கியல் மற்றும் நிதி
  - ✓ சந்தைப்படுத்தல் மற்றும் கிராமப்புற மேம்பாடு
  - ✓ கூட்டுறவுச் சட்டம்.

- **அரசியலமைப்புச் சட்ட விதிகள்**
  - ✓ ஷரத்து 19(1)(C) சட்டத் திருத்தத்தின்மூலம் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் உரிமையை ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரித்தல்.
  - ✓ ஷரத்து 43B, கூட்டுறவுச் சங்கங்களின் தன்னிச்சையான உருவாக்கம், தன்னாட்சி, ஜனநாயகக் கட்டுப்பாடு மற்றும் தொழில்முறை மேலாண்மை ஆகியவற்றை ஊக்குவித்தல்.

24. **சீனாப் இரயில் பாலம்**
இந்தியாவின் மிக உயரமான இரயில் பாலம்

- **ஜூன் 2025இல் பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது.**
- **கட்டுமானம் மற்றும் வடிவமைப்பு கொங்கண் இரயில்வே கழகம்**

- **முக்கிய சிறப்பம்சங்கள்**
  - ✓ உயரம்: ஆற்றின் மட்டத்திலிருந்து 359 மீட்டர்கள் (ஈபிள்) கோபுரத்தைவிட 35 மீட்டர்கள் அதிகம்)
  - ✓ நீளம்: 7,357 கிமீ.
  - ✓ முக்கிய வளைவின் நீளம்: 467 மீட்டர்கள் (இந்தியாவிலேயே மிக நீளமானது)
  - ✓ இரயிலின் வேகம் மற்றும் வடிவமைப்பு ஆயுட்காலம்: இரயில்கள் மணிக்கு 200 கிமீ வேகத்தில் செல்லக்கூடியவை. 120 ஆண்டுகள் நிடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
  - ✓ காற்று மற்றும் நிலநடுக்க எதிர்ப்புத் திறன்: மணிக்கு 260 கிமீ வரையிலான வேகத்தில்வீசும் காற்றையும், பெரும் நிலநடுக்கத்தையும் தாங்கும் திறன் கொண்டது.
  - ✓ வெடிப்புத் தடுப்புத் திறன் 40 டன் டிஎன்டி வெடிமருந்துக்கு இணையான வெடிப்புகளைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
  - ✓ வெப்பநிலை தாங்கும் திறன்: -20 டிகிரி செல்சியஸ் வரையிலான மிகக்குறைந்த வெப்பநிலையையும் தாங்கக் கூடியது.
  - ✓ மதிப்பிடப்பட்ட செலவு: ரூ.2,400 கோடி
  - ✓ முக்கியத்துவம்: காஷ்மீருக்கும் இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் இடையே ஆண்டு முழுவதும் இரயில் இணைப்பு வசதியை வழங்குகிறது.

25. சர்வதேச பெரும்பூனைக் கூட்டமைப்பின் முதல் பொதுக் கூட்டம்

- நாள்: 6, ஜூன் 2025
- இடம்: புது தில்லி
- தலைவர்: பூபேந்திர யாதவ்
- முதல் தலைமை இயக்குநர்: எஸ்.பி. யாதவ்

- **நோக்கம்:** சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகத்தைத் தடுத்தல், இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாத்தல் மற்றும் பெரிய பூனை இனங்கள்மீது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைக் குறைத்தல்.

- **சர்வதேச பெரும் பூனைக் கூட்டமைப்பு**
  - ✓ மார்ச் 2024இல் நிறுவப்பட்டது.
  - ✓ தலைமையகம்: இந்தியா
  - ✓ இந்தியாவின் தலைமையின்கீழ், ஏழு பெரிய பூனை இனங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது.
  - ✓ உள்ளடங்கிய இனங்கள்: புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, சிவிங்கிப்புலி, ஜாகுவார், பூமா.
  - ✓ இந்த அமைப்பின் உறுப்பு நாடுகள் (6): இந்தியா, வங்கதேசம், பூட்டான், எகிப்து, கென்யா, மலேசியா, நேபாளம், நைஜீரியா போன்றவை
  - ✓ இந்தியாவில், இதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாக 'தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம்' (National Tiger Conservation Authority) செயல்படுகிறது.

- **முக்கியத்துவம்:**
  - ✓ இந்த விலங்குகளைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பு
  - ✓ பகிரப்பட்ட நிபுணத்துவம் மற்றும் சுகவாழ்வை மேம்படுத்துதல்
  - ✓ எல்லை தாண்டிய வேட்டையாடுதலைக் கையாளுதல்.

26. இந்தியாவின் முதல் மின்னணுக் கழிவு மறுசுழற்சிப் பூங்கா

- தேசியத் தலைநகர் பிரதேச டெல்லி அரசின் சுற்றுச்சூழல் அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.
- இடம்: ஹோலம்பி கலான், டெல்லி
- நோக்கம்: மின்னணுக் கழிவுகளின் அறிவியல்பூர்வமான மேலாண்மை மற்றும் சுழற்சி
- மாதிரி: பொது-தனியார் கூட்டாண்மை அடிப்படையிலானது.

மின்னணுக்கழிவு மறுசுழற்சி பூங்காவின் முக்கிய அம்சங்கள்

- ஆண்டுக்கு 5000 டன் மின்னணுக் கழிவுகளை (6 வகைக் கழிவுகள் உட்பட) மறுசுழற்சி செய்யும் இலக்குத் திறன்
- சேகரிப்பு, பிரித்தல், மறுசுழற்சி மற்றும் புனரமைப்பிற்கான தனித்ததனி வசதிகள்
- தொழிலாளர்களுக்கான திறன் பயிற்சி மையம்.

முக்கியத்துவம்:

- பசுமை வேலைவாய்ப்புகளின் அதிகரிப்பு
- முறையற்ற மின்னணுக் கழிவுகளை அகற்றுவதைக் குறைப்பதன்மூலம் சுற்றுச்சூழல் நிலைத் தன்மை

27. 2025 தி ஹேக் நேட்டோ உச்சி மாநாடு

நிகழ்வு

- நாள்: ஜூன் 24-25, 2025 (32 உறுப்பு நாடுகள் உட்பட)
- இடம்: தி ஹேக், நெதர்லாந்து.
- முக்கியத்துவம்: நெதர்லாந்தால் நடத்தப்படும் முதல் நேட்டோ உச்சி மாநாடு.

- புதிய பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே (பதவிக்காலம் தொடக்கம்)
- சிறப்பு விருந்தினர்: வொலோடிமிர் ஜெலென்ஸ்கி (உக்ரைன் அதிபர்)

முக்கிய நிகழ்ச்சி நிரல்

- உறுப்பு நாடுகள் அனைத்தும் தங்கள் பாதுகாப்பு மற்றும் காவல் துறைக்கான செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 விழுக்காடு வரை உயர்த்திக் கொள்ள ஒப்புக் கொண்டன.
- இவற்றில் 3.5 விழுக்காடு இராணுவ ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களுக்காகவும், 1.5 விழுக்காடு இணையப் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சிக்காகவும் ஒதுக்கப்படும்.

கூட்டுப் பாதுகாப்பு (ஷரத்து 5)

- நேட்டோ சாசனத்தின் (வாஷிங்டன் ஒப்பந்தம்) 5வது பிரிவு மீண்டும் வலியுறுத்தப்பட்டது. 'ஒருவர் மீதான தாக்குதல் என்பது அனைவர் மீதான தாக்குதலாகும்''
- நேட்டோவை மேலும் வலிமையானதாகவும், நியாயமானதாகவும் மற்றும் அதிக தாக்கும் திறன் கொண்டதாகவும் மாற்றுவதில் கவனம் செலுத்துதல்.

28. ஜி7 அமைப்பின் 51வது கூட்டம்

நிகழ்வு

- நாள்: ஜூன் 5-7, 2025
- இடம்: கான்மோர் - கனனாஸ்கிஸ், அல்பெர்ட்டா, கனடா
- முக்கியத்துவம்: கனனாஸ்கில் இரண்டாவது முறையாக நடத்தப்படுகிறது (முதன்முதலில் 2002இல் நடைபெற்றது).
- தலைவர்: மார்க் கர்னே (கனடா பிரதமர்)
- சிறப்பு விருந்தினர்: பிரதமர் மோடி

முக்கிய நிகழ்ச்சி நிரல்

- உலகளாவிய மோதல்கள்
- இஸ்ரேல்-ஈரான் போர் (இஸ்ரேலின் தற்காப்புக்கு ஆதரவளித்தல்)
- உக்ரைன் - ரஷ்யா மோதல் (ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைனுக்கு ஆதரவளித்தல்)
- மனிதாபிமான உதவி மற்றும் அகதிகள் பாதுகாப்பு

பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

- உலகப்பொருளாதார நிலைத்தன்மைக்கு முக்கியத்துவம் (பணவீக்கம், பொருளாதார மந்தநிலை, விநியோகச் சங்கிலிப் பாதுகாப்பு)
- டிஜிட்டல் மாற்றம் (வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பு)
- ஆற்றல் பாதுகாப்பு (புதுப்பிக்கத்தக்க மூலங்கள் மற்றும் பசுமை ஹைட்ரஜன் மீது கவனம்)
- காலநிலை மாற்றம் (நிகர பூஜ்ஜிய இலக்குகள்)
- சைபர் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு (குவாண்டம் கணினி)

ஜி7 அமைப்பு பற்றி

- 1975-ஆம் ஆண்டு பிரெஞ்சு அதிபர் வலேரி ஜிஸ்கார்ட் டி எஸ்டெய்ங் அவர்களால் நிறுவப்பட்டது.
- முதல் கூட்டம்: 1976
- விரிவாக்கம்: 1998இல் கனடாவும், 1998இல் ரஷ்யாவும் இணைந்தன.
- ரஷ்யா வெளியேற்றம் 2014-ல் (கிரிமியா இணைப்பிற்குப் பிறகு)

- **உறுப்பு நாடுகள் (வளர்ச்சியடைந்த பொருளாதாரங்கள்)**

அமெரிக்கா	ஜெர்மனி
கனடா	பிரான்ஸ்
இங்கிலாந்து	இத்தாலி
ஜப்பான்	

29. ஆக்சியம்-4 (AX-4) பயணம்

ஏவுதல் தேதி: 25, ஜூன் 2025

பயணத்தின் கண்ணோட்டம்

- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஒரு தனியார் விண்வெளிப் பயணம்
- ஏவுதல் வாகனம்: ஸ்பேஸ்எக்ஸ் ∴பால்கன் 9 ராக்கெட்
- பயணத்தின் காலம்: ஏவப்பட்டதிலிருந்து 44 நாட்கள்
- ஏவுதளம்: கென்னடி விண்வெளி மையம், ப்ளோரிடா, அமெரிக்கா

குழு உறுப்பினர்கள்

- தளபதி பேக்கி விட்சன் (அமெரிக்கா)
- சுபான்ஷு சுக்லா (இந்தியா)
- ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி- விஸ்னீவ்ஜஸ்கி (போலந்து)
- டிபோர் கபு (ஹங்கேரி)

திட்டத்தின் நோக்கங்கள்

- நுண் ஈர்ப்பு விசைச் சூழலில், உயிரித் தொழில்நுட்பம், இயற்பியல் அறிவியல் மற்றும் மருத்துவ ஆய்வுகள் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

இந்தியாவிற்கான முக்கியத்துவம்

- ககன்யான் திட்டத்திற்கான (2027) ஆயத்தப் பணிகளில், இந்தியா-அமெரிக்கா இடையிலான விண்வெளி ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

சர்வதேச விண்வெளி நிலையம்

- பூமியிலிருந்து 370 முதல் 460 கிமீ உயரத்திலுள்ள தாழ்பூமி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள, மனிதர்கள் வசிக்கக்கூடிய ஒரு செயற்கைக்கோள்.
- **முக்கிய கூட்டாளிகள்** ஐரோப்பிய விண்வெளி முகமை, நாசா, ஜாக்ஸா (ஜப்பான்), சிஎஸ்ஏ (கனடா) மற்றும் ராஸ்கோஸ்மாஸ் (ரஷ்யா) ஆகும்.
- **இதன்** முதல் பாகம் 1998-ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்தியாவின் பங்களிப்பு

- சுபான்ஷு சுக்லா இந்தத் திட்டத்தில் விமானியாகப் பணியாற்றி, பல நுண்குருத்துவச் சோதனைகளை மேற்கொண்டார். இது இந்தியாவின் வரவிருக்கும் ககன்யான் திட்டத்திற்கு மதிப்புமிக்க அனுபவத்தை வழங்கியது.

30. டிரக்கோமா ஒழிப்புக்கான உலக சுகாதார அமைப்பின் சான்றிதழ் - இந்தியா

- 78-வது உலக சுகாதார சபைக் கூட்டத்தில், உலக சுகாதார நிறுவனம், இந்தியாவிற்கு 'டிரக்கோமா' நோயை முற்றிலும் ஒழித்ததற்கான சான்றிதழை வழங்கியது.
- நாள்: மே 9, 2025
- பெற்றவர்: சுகாதாரம் மற்றும் குடும்பல நல அமைச்சகம், இந்தியா.
- 'தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் (நேபாளம் மற்றும் மியான்மருக்குப் பிறகு) டிரக்கோமா நோயை ஒழித்த மூன்றாவது நாடாக இந்தியா திகழ்கிறது.

இந்தியா 'டிரக்கோமா- முற்றிலும் இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டதற்கான செயல்முறை

- 2017ஆம் ஆண்டு இந்தியா தொற்றுநோயான 'டிரக்கோமா'விலிருந்து விடுபட்டதாக அறிவிக்கப்பட்டது.
- 2019-2024 இந்தியாவின் அனைத்து மாவட்டங்களிலும் டிரக்கோமா பாதிப்புகள் குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- அக்டோபர் 2024 இந்தியாவில் டிரக்கோமா நோய் இனி ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

டிரக்கோமா பற்றி

- டிரக்கோமா என்பது 'கிளாமிடியா டிரக்கோமேடிஸ்' என்னும் பாக்டீரியாவால் ஏற்படும், எளிதில் பரவக்கூடிய ஒரு கண்நோயாகும்.
- அறிகுறிகள் மற்றும் விளைவுகள்: கண்கள் சிவத்தல், கண்ணீர் வடிதல், கண் வலி, ஒளி கூச்சம், கண் பார்வை இழப்பு
- பரவும் முறை: பாதிக்கப்பட்ட கண்கள் அல்லது மூக்கிலிருந்து வரும் திரவங்களைச் சுமந்து செல்லும் ஈக்கள் போன்ற உயிரினங்கள் மூலமாகவும், நேரடித் தொடர்பு மூலமாகவும் இது பரவுகிறது.
- முக்கியத்துவம்: இது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு, கண்பார்வை இழப்பைத் தடுக்கவும் உதவுகிறது.

31. ஆபரேஷன் சிந்தூர் (Operation Sindoor)

பின்னணி

- ஏப்ரல் 22, 2025: பஹல்காம் தாக்குதல் (26 பேர் கொல்லப்பட்டனர்)
- ஏப்ரல் 30, பாகிஸ்தானிய விமானங்கள் அனைத்திற்கும் இந்தியா தனது வான்வெளியை மூடியது.
- மே 5, இந்தியாவில் குடிமைப் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சிகள் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

நடவடிக்கையின் தொடக்கம்

- மே 6-7, பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாதத் தளங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
- மே 7-8 பாகிஸ்தானின் பதிலடித் தாக்குதல் ('Bunyan-al-Marsoos' நடவடிக்கையின்கீழ்)
- மே 10, DGMO-வால் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

நோக்கங்களும் இலக்குகளும்

- பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதற்காக
- பயங்கரவாதிகளின் உள்கட்டமைப்பை மட்டுமே குறித்து, துல்லியமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
- பின்வருவன உள்ளிட்ட பயங்கரவாதக் குழுக்களின் 9 தளங்கள் துல்லியமாகக் குறிவைத்து அழிக்கப்பட்டன.

    - ✓ லஷ்கர்-இ-தொய்பா
    - ✓ தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட்
    - ✓ ஜெய்ஷ்-இ- முகமது

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள்

- SCA-LP குரூஸ் ஏவுகணை, கமிகேஸ்ட ட்ரோன்கள், ஹேம்மர் ஏவுகணை, ர.ஃபேல் போர் விமானங்கள், பிரம்மோஸ் ஏவுகணை, எஸ்-400 ஏவுகணை மற்றும் ஆகாஷ் ஏவுகணை

இராணுவ நடவடிக்கை

- இந்திய இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவை முழுமையான ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு, இந்தியாவின் வளர்ந்து வரும் கூட்டு இராணுவத் திறனை வெளிப்படுத்தின.
- 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்த விளக்கவுரையை கர்னல் சோஃபியா குரைஷி மற்றும் விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் வழிநடத்தினர்.
- இந்திய முப்படைகளான இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கை இதுவாகும்.

32. பாம்பன் பாலம்

- தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாம்பன் பாலம், ராமேஸ்வரம் தீவை (பாம்பன் தீவு) இந்தியாவின் பிரதான நிலப்பகுதியான மண்டபத்துடன் இணைக்கிறது.
- இது இந்தியப் பொறியியல் துறையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் நவீன காலச் சாதனையாகத் திகழ்கிறது.
- 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் தேதி (ராம நவமி அன்று), நாட்டின் முதல் 'செங்குத்து உயர்வு இரயில் பாலத்தை' அதாவது, புதிய பாம்பன் பாலத்தை, பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

- அமைவிடம்: பாக் ஜலசந்தியின் குறுக்கே அமைந்துள்ள இது ராமேஸ்வரம் தீவை மண்டபத்துடன் இணைக்கிறது.
- மொத்த நீளம் சுமார் 2.07 கி.மீ
- செலவு சுமார் ரூ.2,550 கோடி முதல் ரூ.2700 கோடி வரை.
- வடிவமைப்பு: இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு இரயில் பாலம்
- கட்டுமானம்: இரயில் விகாஸ் நிகாம் லிட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது.
- செங்குத்து தூக்கு இடைப்பகுதி 72.5 மீட்டர் நீளமுள்ள ஒரு தூக்கு இடைப்பகுதியைக் கொண்டுள்ளது. கப்பல்கள் கீழே கடந்து செல்ல ஏதுவாக, இப்பகுதியை செங்குத்தாக 47 மீட்டர் உயரம் வரை உயர்த்த முடியும்.

பாம்பன் பாலத்தின் முக்கியத்துவம்

- பண்பாட்டு மற்றும் சமய முக்கியத்துவம்: இலட்சக்கணக்கான யாத்திரீகர்கள் இராமநாதசுவாமி கோவிலுக்குச் செல்வதை இது உறுதி செய்கிறது.
- மூலோபாய முக்கியத்துவம்: இந்தியாவின் நிலப்பகுதிக்கும் பாம்பன் தீவுக்கும் இடையே பாதுகாப்பான விரைவான மற்றும் தடையற்ற இரயில் இணைப்பை இது வழங்குகிறது.
- பொறியியல் அற்புதம்: சீற்றமிக்க கடல்கள், புயல்கள் மற்றும் நில அதிர்வு நடவடிக்கைகளைத் தாங்கும் வகையில், அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இது கட்டப்பட்டுள்ளது.

33. ஆற்று டால்பின் கணக்கெடுப்பு அறிக்கை

- 2025ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் தேதி, உலக வனவிலங்கு தினத்தை முன்னிட்டு, பிரதமர் மோடி முதலாவது தேசிய ஆற்று டால்பின் கணக்கெடுப்பு அறிக்கையை வெளியிட்டார்.

- **இந்தக் கணக்கெடுப்பின் முக்கிய அம்சங்கள்**

- இந்தக் கணக்கெடுப்பு, முக்கிய நதிகளின் கரையோரம் அமைந்துள்ள 8 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- கங்கை, பிரம்மபுத்திரா, யமுனை, கோதாவரி மற்றும் பிற நதிகள் உள்ளிட்டவற்றில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மொத்தம் 7,109 கி.மீ நீளமுள்ள நதிப் பகுதிகள் கணக்கெடுக்கப்பட்டன.
- நீர் வாகனங்கள், ட்ரோன்கள் மற்றும் பிற அறிவியல் கருவிகளின் உதவியுடன் இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- **இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய கண்டுபிடிப்புகள்**

- மொத்தமாக மதிப்பிடப்பட்ட டால்பின்களின் எண்ணிக்கை, 6,327 (கங்கை,-பிரம்மபுத்திரா படுகை: 6,322, பிற நதிகள் 5)

- முக்கிய நதிகளில் உள்ள டால்பின்களின் எண்ணிக்கை
  - ✓ **கங்கை** 2,397

- ✓ **பிரம்மபுத்திரா** 2,220
- ✓ **யமுனை** 3
- ✓ **கோதாவரி** 712

- **முக்கிய நதிகளில் டால்பின்களின் பரவல்**

  - ✓ கங்கை ஆறு 3,274
  - ✓ பிரம்மபுத்திரா ஆறு 2,414
  - ✓ யமுனை ஆறு 3
  - ✓ கோதாவரி ஆறு 584
  - ✓ பிற ஆறுகள் 412

34. சமுத்ராயன்: மத்ஸ்யா-6000

- 'மஸ்த்யா-6000' என்பது இந்தியாவிலேயே உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மனிதர்களை ஏற்றிச் செல்லக்கூடிய முதல் ஆழ்கடல் நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- ஆழ்கடலை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்ட, இந்தியாவின் இலட்சியத் திட்டமான 'சமுத்ராயன் இயக்கம்'-இன் முதன்மையான வாகனமாக இது திகழ்கிறது.

- **தற்போதைய நிலை**
- ஆகஸ்ட் 6ஆம் தேதி, இந்தியக் கடற்படையின் தளபதி ஜதித்நத்தாபால் சிங் (ஓய்வு) அவர்கள், 5,002 மீட்டர் ஆழம் வரை வெற்றிகரமாக நீரில் மூழ்கிச் சென்றார்.

- **தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள்**
- ஆழ்கடலில் நிலவும் மிக அதிக அழுத்தம் மற்றும் கடும் குளிரான சூழலைத் தாங்கும் வகையில் 'மத்ஸ்யா-6000' பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **ஆழம் செல்லும் திறன் 6,000 மீட்டர்கள் (6 கிமீ)**

- **கட்டமைப்பு: டைட்டானியம் கலவையால் செய்யப்பட்ட 2.1 மீட்டர் விட்டம் கொண்ட கோள வடிவக் கூடு.**
- பணியாளர் கொள்ளளவு 3 நபர்கள் (ஒரு விமானி மற்றும் இரண்டு விஞ்ஞானிகள்)
- உயிர் காப்ப அமைப்பு.

- **முக்கிய அம்சங்கள்**

திட்டம்	சமுத்ராயன்
ஒருங்கிணைப்பு அமைச்சகம்	புவி அறிவியல் அமைச்சகம்.
உருவாக்கிய நிறுவனம்	தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) சென்னை.

- **நோக்கம்:** ஆழ்கடலில் 6,000 மீட்டர் ஆழத்திற்கு மூன்று நபர்களை அழைத்துச் சென்று, பல உலோக மாங்கனீசு முடிச்சுகள் மற்றும் கோபால்ட் மேலோடுகள் போன்ற கடல்சார் கனிம வளங்களை ஆய்வு செய்தல். அத்துடன் ஆழ்கடல் பல்லுயிரியலைப் பயிலுதலும்.

35. Z-Mohr சுரங்கம்

- பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 13, 2025 அன்று **Z-Mohr** சுரங்கப்பாதையைத் திறந்து வைத்தார்.

முக்கிய அம்சங்கள்

- அமைவிடம்: ககன்கிரை சோனமார்குடன் (கந்தர்பால், ஜம்மு காஷ்மீர்) இணைக்கிறது.
- நீளம் 6.5 கிமீ

முக்கியத்துவம்

- ஸ்ரீநகர் லே நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இருவழிப் பாதை கொண்ட ஒரு சுரங்கம்.
- இது 8,650 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- ரூ.2,400 கோடி செலவில் கட்டப்பட்டது.
- தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகத்தால் (National Highways and Infrastructure Development Corporation Limited) உருவாக்கப்பட்டது.

முக்கியத்துவம்

- இது விரிவான 'ஜோஜி லா சுரங்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது லடாக்கிற்கு ஆண்டு முழுவதும் போக்குவரத்து இணைப்பை வழங்குகிறது. இதன்மூலம் இராணுவ நடவடிக்கைகளும், பொது மக்கள் பயணம் மேற்கொள்வதும் எளிதாக உள்ளது.

36. மகாகும்பமேளா 2025

- 2025ஆம் ஆண்டின் மகா கும்பமேளா, உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜில், 2025 ஜனவரி 3 முதல் பிப்ரவரி 26 வரை நடைபெற்றது.
- தோற்றம்: 'கும்பம்' என்ற சொல் 'கும்பகம்' என்பதிலிருந்து உருவானது. இந்து புராணங்களின்படி, இது 'அமிர்தம்' (சாகாவரம் அளிக்கும் தேன்)' நிரம்பிய ஒரு கலசத்தைக் குறிக்கிறது.

கும்பமேளா பற்றிய தகவல்கள்

கும்பமேளா ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் பின்வரும் நான்கு இடங்களில் நடத்தப்படுகிறது.

- ஹரித்வார்: கங்கை நதிக்கரை
- உஜ்ஜைன்: ஷிப்ரா நதிக்கரை
- நாசிக்: கோதாவரி நதிக்கரை
- பிரயாக்ராஜ்: கங்கை, யமுனை மற்றும் புராணங்களில் குறிப்பிடப்படும் சரஸ்வதி ஆகிய நதிகளின் சங்கமத்தில்.

கும்பமேளாவின் வகைகள்

- பூர்ண கும்பம்: ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் நடத்தப்படுகிறது.
- அர்த்த கும்பம்: ஒவ்வொரு 6 ஆண்டுகளுக்கு ஒருமுறையும், ஹரித்வார் மற்றும் பிரயாக்ராஜ் ஆகிய இடங்களில் நடத்தப்படுகிறது.
- மகாகும்பம்: 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரயாக்ராஜில் மட்டுமே நடத்தப்படுகிறது.
- மாக கும்பம்: பிரயாக்ராஜில் ஒவ்வொரு ஆண்டும் 'மாக' மாதத்தில் (ஜனவரி-பிப்ரவரி) நடத்தப்படுகிறது.

நிர்வாகம் மற்றும் மேலாண்மை

- யாத்ரீகர்களின் வசதிக்காக ஒரு கைப்பேசிச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- பாதுகாப்பு மற்றும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, செயற்கை நுண்ணறிவு மற்றும் ட்ரோன்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன.

மகா கும்பமேளா 2025இன் முக்கியத்துவம்

- இது உலகின் மிகப்பெரிய சமயக் கூட்டமாகும். இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் புனித நதிகளின் புனித நீராடினர்.

37. தேசிய மஞ்சள் வாரியம்

- நாள்: ஜனவரி 4, 2025
- அறிவித்தவர்: பியூஷ் கோயல்
- தலைமையகம்: நிஜாமாபாத், தெலுங்கானா
- ஒருங்கிணைப்பு அமைச்சகம்: வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம்

நோக்கம்

- மஞ்சள் உற்பத்தி, பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துதல்
- விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.

கட்டமைப்பு

- தலைவர்: மத்திய அரசால் நியமிக்கப்படுபவர்
- உறுப்பினர்கள்: பல்வேறு துறைகளின் பிரதிநிதிகள்
- செயலாளர், வர்த்தகத் துறையால் நியமிக்கப்படுபவர்

இந்தியாவின் நிலை

- மஞ்சள் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் உலகின் மிகப்பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- உலகளாவிய மஞ்சள் உற்பத்தியில் 80 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்களிப்பை இந்தியா கொண்டுள்ளது.

38. MGNREGA திட்டத்திற்குப் புதிய பெயர்

- ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாக, ஒன்றிய அரசு 2025 டிசம்பர் 12 அன்று, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் பெயரை 'பூஜ்ய பாபு கிராமின் ரோஜ்கார் கியாரண்டி யோஜனா' என மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்தது.
- இந்தத் திட்டம் முதலில் 'தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் 2025 என்ற பெயரில் தொடங்கப்பட்டது. பின்னர் இது. 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

39. தீபாவளி: யுனெஸ்கோவின் அருவப் பண்பாட்டுப் பாரம்பரியப் பட்டியலில் இடம் பிடித்தது.

- 'ஒளித் திருவிழாவான' தீபாவளி, 2025 டிசம்பர் 10 அன்று, யுனெஸ்கோவின் 'மனிதகுலத்தின் அருவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் பிரதிநிதித்துவப் பட்டியலில்' (UNESCO's Representative List of the Intangible Cultural Heritage of Humanity) சேர்க்கப்பட்டது.
- புதுதில்லியிலுள்ள செங்கோட்டையில் நடைபெற்ற யுனெஸ்கோவின் அருவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கு இடையேயான குழுவின் 20-வது அமர்வின்போது, ஒரு முக்கியக் கூட்டத்தில் இந்த முடிவு ஏற்கப்பட்டது.
- யுனெஸ்கோவின் அருவப் பண்பாட்டுப் பாரம்பரியப் பட்டியலில் இடம்பெறும் கௌரவத்தைப் பெறும் 16வது இந்தியப் பாரம்பரியமாகத் தீபாவளி திகழ்கிறது.

40. பிரதமர் அலுவலகம் 'சேவா தீர்த்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது

- பிரதமர் நரேந்திர மோடி, 2025 டிசம்பர் 2 அன்று, பிரதமர் அலுவலகத்தை 'சேவா தீர்த்' என்று பெயர் மாற்றம் செய்வதாக அறிவித்தார்.
- பிரதமரின் இல்லத்திற்கு அருகில் புதிதாகக் கட்டப்படவுள்ள புதிய பிரதமர் அலுவலக வளாகம் தற்போதுள்ள 'நிர்வாகக் கூடம்' அமைப்பிற்கு மாற்றாக அமையும.
- காலனித்துவ ஆட்சியின் சின்னங்களிலிருந்து விலகி, பொதுச் சேவை மற்றும் தேசிய நலன் சார்ந்த மனபபான்மையை வளர்ப்பதே இந்தப் பெயர் மாற்றத்தின் முக்கிய நோக்கமாகும்.

41. ராஜ்பவன், லோக் பவன் என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது

- இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் ராஜ்பவன்களுக்கும் 'லோக் பவன்' எனப் பெயர் சூட்டுவதற்கான அறிவிப்பு 2025 டிசம்பர் 1 அன்று வெளியிடப்பட்டது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களின்பேரில் இந்த மாற்றம் உடனடியாக அமல்படுத்தப்பட்டுள்ளது.
- 'அதிகாரம் என்பது இன்பத்திற்கோ அல்லது சிறப்புரிமைக்கோ அல்ல, மாறாக பொறுப்புக்கும் சேவைக்கும் உரியது' என்பதே இதன் செய்தி ஆகும்.

42. 'டிஜிட்டல் கைது' மோசடி குறித்து நாடு தழுவிய விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

- 'டிஜிட்டல் கைது' மோசடி குறித்து நாடு தழுவிய அளவில் விசாரணை நடத்துமாறு மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு 2025 டிசம்பர் 1 அன்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மோசடி பற்றி

- இணைவழி மிரட்டல் கும்பல்: இதில் மோசடிக்காரர்கள் சட்ட அமலாக்க அல்லது நீதித்துறை அதிகாரிகளாக நடித்து, கைது செய்வதாக மிரட்டிப் பாதிக்கப்பட்டவர்களைப் பணம் அனுப்பும்படி கட்டாயப்படுத்துகின்றன.

43. ஒவ்வொரு கைப்பேசிச் செயலியிலும் புதிய 'சஞ்சார் சாத்தி இணையப் பாதுகாப்புச் செயலி' இருக்கும். Every Phone will have a New 'Sanchar Saathi' Cyber Security App

- **ஆணை என்ன?** இந்தியாவில் விற்கப்படும் ஒவ்வொரு கைப்பேசியிலும், அதன் புதிய 'சஞ்சார் சாத்தி'இணையப் பாதுகாப்புச் செயலியை முன்கூட்டியே நிறுவுமாறு அனைத்து ஸ்மார்ட்போன் உற்பத்தியாளர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.
- இந்த ஆணை இந்திய அரசின் தொலைத் தொடர்புத் துறையால், டிசம்பர் 4, 2025 அன்று வெளியிடப்பட்டது.

- **நன்மைகள்:** கைப்பேசியில் பயன்படுத்தப்படும் ஐஎம்இஐ எண்ணின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்க 'கம்யூனிகேஷன் பார்ட்னர் ஆப்' பயன்படுத்தப்படும்.

44. நிலத்தடி நீர் தர அறிக்கை 2025 வெளியிடப்பட்டது

- வெளியீட்டுத் தேதி: நவம்பர் 2025 இறுதி
- மத்திய நிலத்தடி நீர் வாரியத்தால் வெளியிடப்பட்டது
- முக்கியத்துவம்: கிராமப்புற குடிநீருக்கு நிலத்தடி நீரே முதன்மை ஆதாரமாக இருப்பதால், பொது சுகாதாரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

- **முக்கிய கண்டுபிடிப்புகள்**

  - ✓ மாதிரிகளில் 28 விழுக்காட்டிற்கும் அதிகமானவற்றில், ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்புகளுக்கு மேல் மாசுகள் (நைட்ரேட், ∴புளூரைடு, யுரேனியம்) இருந்தன.
  - ✓ குறிப்பாக வடமேற்கு இந்தியாவில் யுரேனிய மாசுபாடு ஒரு முக்கியப் பிரச்சினையாக இருந்தது.

45. சோலார் இரண்டாம் கட்டத் தொடக்கம் (SoLAR Phase II)

- சர்வதேச நீர் மேலாண்மை நிறுவனம் மற்றும் சுவிஸ் மேம்பாடு மற்றும் ஒத்துழைப்பு முகமை ஆகியவற்றால் வெளியிடப்படது.
- நோக்கம்: வேளாண்மை மீள்தன்மைக்கான சூரியப் பாசனம்' என்ற இந்த பெரிய பல-நாடுகள் திட்டமானது, இந்தியா, பங்களாதேஷ், கென்யா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் விவசாயத்தில் சமூகம் உள்ளடக்கிய மற்றும் காலநிலை மீள்தன்மை கொண்ட சூரிய ஏற்றலை ஏற்றுக்கொள்வதை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சூரிய சக்தியால் இயங்கும் விவசாயத்திற்கான நிலையான மற்றும் சமமான அணுகலை உறுதி செய்வதே இதன் குறிக்கோள் ஆகும்.

46. டெக்ஸ் ராம்ப்ஸ் (Tex –RAMPS) திட்டம் அங்கீகரிக்கப்பட்டது

- திட்ட காலம்: 2025-26 முதல் 2030-31 வரையிலான நிதியாண்டுகளுக்கு, மொத்தம் ரூ.305 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய இந்தத் திட்டம், 'வரவிருக்கும் காலக்கட்டத்திற்கு ஏற்றவாறு' வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முக்கியத்துவம்: இந்தியாவின் ஜவுளித் துறைக்கு வலுவூட்டும் வகையில், ஆராய்ச்சி, தரவுகள் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை இத்திட்டம் ஒருங்கிணைக்கும்.

47. இந்திய இணைய நிர்வாக மன்றம் (India Internet Governance Forum) 2025

- நாள்: நவம்பர் 27-28, 2025
- இடம்: இந்தியா ஹேபிடாட் செண்டர், புதுதில்லி
- பதிப்பு: ஐந்தாவது
- கருப்பொருள்: அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான 'விக்சித் பாரத்' (வளர்ச்சியடைந்த இந்தியா) உருவாக்க இணைய நிர்வாகத்தை முன்னெடுத்தல்.
- அறிமுகம்: இந்தியாவில் இணையத்தின் எதிர்கால திசை குறித்து விவாதிக்கவும், அது தொடர்பான முக்கியக் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை அடையாளம் காணவும் உதவும் ஒரு தளம்.

48. பிரதமரின் ∴பசல் பீமா யோஜனாவின் விரிவாக்கம் (Expansion of Pradhan Mantri Fasai Bima Yojana)

- வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் இழப்பு மற்றும் நெற்பயிர்கள் நீரில் மூழ்குவதால் ஏற்படும் இழப்புகள் ஆகியவை குறித்த விவாதங்கள் இதில் இடம் பெற்றன.
- தொழில்நுட்பம் சார்ந்த இழப்பீட்டுக் கோரிக்கைகளை விரைவாகத் தீர்க்க, தொலையுணர்வு ஸ்மார்ட்போன்கள் மற்றும் ட்ரோன்கள் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.
- கட்டாய அறிவிப்பு விவசாயிகள் தங்கள் பயிர் இழப்பை புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படங்களுடன் இணைத்து, பயிர் காப்பீட்டுச் செயலி வாயிலாக 72 மணி நேரத்திற்குள் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும்.

49. அடிப்படை கால்நடை பராமரிப்புப் புள்ளி விவரங்கள் (Basic Animal Husbandry Statistics) 2025

- நாள்: நவம்பர் 26, 2025
- வெளியீடு: மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம்
- முக்கியத்துவம்: இது கால்நடை மற்றும் பால்வளத்துறை குறித்த விவரிவான தரவுகளை வழங்குகிறது.
- பால் உற்பத்தி: உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- 2024-25ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த பால் உற்பத்தி 247.87 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

50. சர்வதேச மாநாடு கோ-ஆப் கும்ப் 2025 இன் தொடக்க விழா (Inauguration of the International Conference - Co-Op Kumbh 2025)

- தொடங்கி வைத்தவர்: மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா
- நிகழ்வு தேதி: நவம்பர் 10, 2025
- இடம்: விக்யான் பவன், புதுதில்லி

- ஏற்பாடு செய்த அமைப்பு: தேசிய நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் கூட்டமைப்பு (National Federation of Urban Co-operative Banks and Credit Societies)
- நோக்கம்: டிஜிட்டல் மாற்றங்கள் மற்றும் புதுமைகள் குறித்து விவாதிப்பதன்மூலம் கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துதல்.

- **முக்கிய விளைவுகள்**

✓ தில்லி பிரகடனம் 2025 (Delhi Declaration 2025) ஏற்றுக்கொள்ளப்பட்டது

✓ 'ஷாகர் டிஜி பே' மற்றும் 'ஷாகர் டிஜி லோன்' ஆகிய செயலிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

51. தேசிய நகர்ப்புற மாநாடு 2025

- இடம்: யுஷோபூமி, புதுதில்லி (8-9, நவம்பர், 2025)
- கருப்பொருள்: நிலையான நகர்ப்புற மேம்பாடு மற்றும் நல்லாட்சி
- நோக்கம்: 'வளர்ச்சியடைந்த இந்தியா 2047' என்னும் இலக்கை அடைவதற்காக, நகர்ப்புறப் புத்தாக்கம், முதலீடு மற்றும் நிர்வாகம் குறித்து விவாதித்தல்.

- **முக்கிய முன்னெடுப்புகள்**

✓ குப்பைமேடு சீரமைப்புத் திட்டம் (Dumpsite Remediation Programme): செப்டம்பர் 2026-க்குள் 'குப்பைமேடுகள் அற்ற நிலை' என்னும் இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டது.

✓ நகர்ப்புற முதலீட்டுச் சாளரம் (Urban Investment Window): நிலையான நகர்ப்புற உள்கட்டமைப்புக்கு ஆதரவளிக்கிறது.

✓ IIRS சங்கலன் செயலி புவியியல் தகவல் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு அலைபேசிச் செயலி ஆகும்.

✓ அறிவு மேலாண்மை அலகு (Knowledge Management Unit): வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால், தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனத்தில் (National Institute of Urban Affairs) நிறுவப்பட்டது.

52. இந்தியாவின் முதல் பழங்குடியினர் சார்ந்த டிஜிட்டல் அருங்காட்சியகம்

- திறப்பு: 2025 நவம்பர் 1 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது.
- இடம்: நவா ராய்ப்பூர் (அடல் நகர்), சதீஷ்கர்
- நோக்கம்: பழங்குடியின வீரர்களுக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் உரிய துணிச்சல், அவர்கள் நடத்திய கிளர்ச்சிகள் மற்றும் அவர்களின் வீர வரலாறுகளைப் பறைசாற்றுவதே இதன் நோக்கமாகும்.
- சிறப்பம்சங்கள்: ஊடாடும் தொழில்நுட்பம் (interactive technology) மற்றும் BFX திரைகளின் பயன்பாடு, 14 முக்கிய பழங்குடியினக் கிளர்ச்சிகளின் சித்தரிப்புகளைக் காட்சிப்படுத்தும் டிஜிட்டல் இலைகள் ஆகியவை இதில் இடம் பெற்றுள்ளன. :

53. கடல்சார் மீன்வளக் கணக்கெடுப்பு (Marine Fisheries Census) 2025

- கால அளவு: 2025 நவம்பர் 3 முதல் டிசம்பர் 18 வரை.
- முக்கியத்துவம்: இந்தியாவின் முதலாவது முழுமையாக டிஜிட்டல்மயமாக்கப்பட்ட கணக்கெடுப்பு: இது வியாஸ் பாரத் மற்றும் வியாஸ் சூத்ரா போன்ற மொபைல் செயலிகள் வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது.
- நோக்கம்: நாட்டின் கடல்சார் மீன்வளத் துறை குறித்த விரிவான தரவுகளைச் சேகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- வரம்பு: இந்தக் கணக்கெடுப்பு 13 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அமைந்துள்ள 5000க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் 12 இலட்சம் (1.2 மில்லியன்) மீனவக் குடும்பங்களை உள்ளடக்கியுள்ளது.

54. ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல்

- விவாதம்: மத்திய அமைச்சரவை, 2025 நவம்பர் 12 அன்று, ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- கால அளவு: 2025-26 நிதியாண்டு முதல் 2030-31 நிதியாண்டு வரை (6 நிதியாண்டுகள்)
- நோக்கம்: உலகளாவிய ஏற்றுமதிச் சூழலில் இந்தியாவை மேலும் போட்டித்தன்மை மிக்கதாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.
- மொத்த ஒதுக்கீடு: ரூ.25,060 கோடி.
- செயல்படுத்துதல்: இத்திட்டமானது பின்வரும் இரண்டு துணைத் திட்டங்கள் வாயிலாக செயல்படுத்தப்படும்:
- ஏற்றுமதி மேம்பாடு வட்டி மானியம், ஏற்றுமதி காரணிச் சேவை மற்றும் கடன் உத்தரவாதங்கள் போன்ற குறைந்த செலவிலான வர்த்தக நிதியுதவிகளை வழங்குகிறது.
- ஏற்றுமதி வழிகாட்டுதல் தரச் சான்றளிப்பு, வர்த்தக முத்திரை உருவாக்கம், பொதியிடுதல் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்றல் உள்ளிட்ட நிதியல்லாத உதவிகளை வழங்குகிறது.

55. கஜகஸ்தான் ஆபிரகாம் ஒப்பந்தங்களில் இணைகிறது

- நவம்பர் 2025-இல் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அவர்களால் இது குறித்த பேச்சுவார்த்தை அறிவிக்கப்பட்டது.
- நோக்கம்: இஸ்ரேலுக்கும் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை இயல்புநிலைக்குக் கொண்டுவருதல்.

56. இந்தியா – போட்ஸ்வானா சிறுத்தை இடமாற்ற ஒப்பந்தம்

- 'சிறுத்தைத் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ், போட்ஸ்வானாவிலிருந்து எட்டு சிறுத்தைகளை இந்தியாவிற்கு இடமாற்றம் செய்வது குறித்த பேச்சுவார்த்தை அறிவிக்கப்பட்டது.
- நோக்கம்: ஆப்பிரிக்க சிறுத்தைகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து, அவற்றின் இனப்பெருக்கத்தை (மக்கள் தொகையை) மீண்டும் நிலைநிறுத்துதல்
- 'சிறுத்தைத் திட்டம்' தொடங்கப்பட்ட ஆண்டு: 2022
- 2022 நமீபியாவிலிருந்து 8 சிறுத்தைகள்
- 2023: தென் ஆப்பிரிக்காவிலிருந்து 12 சிறுத்தைகள்
- செயல்படுத்தும் முகமை: தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (National Tiger Conservation Authority)

57. விக்ரம் சுற்றுவட்ட ராக்கெட் (Orbital Rocket Vikram) அறிமுகம்

- வெளியீட்டுத் தேதி: நவம்பர் 27, 2025
- ஹைதராபாத்தில் உள்ள ஸ்கைரூட்டின் இன்.்பினிட்டி வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தபோது, இந்த ராக்கெட் அறிமுகம் செய்யப்பட்டது.
- செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் செலுத்தும் திறன் கொண்ட ஸ்கைரூட்டின் முதல் சுற்றுப்பாதை ராக்கெட்டான விக்ரம்-1ஐ பிரதமர் வெளியிட்டார்.
- முக்கியத்துவம்: விக்ரம்-1 என்பது இந்தியாவின் முதல் தனியார் சுற்றுப்பாதை ராக்கெட் ஆகும். இது செயற்கைக்கோள்களை புவியின் தாழ் சுற்றுப்பாதையில் செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

58. மாஹே உள்நாட்டு நீர்மூழ்கிக் எதிர்ப்புப் போர்க்கப்பல் (Mahe Indigenous Anti-Submarine Warship)

- கலந்துரையாடல்: 24 நவம்பர் 2025 அன்று, உள்நாட்டுப் போர்க்கப்பலான 'மாஹே' மும்பையில் கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- வேகம்: 25 நாட்ஸ் வரை

- நீளம்: 78 மீட்டர்
- கட்டுமானம்: கொச்சின் கப்பல் கட்டும் தளம்
- முக்கியத்துவம்: மாஹே அதன் வகையிலான எட்டு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க்கப்பல்களில் முதலாவதாகும்.

59. சன்கேட்ச்சர் திட்டம் (Project Suncatcher)

- கலந்துரையாடல்: நவம்பர் 2025-ல் கூகிளால் ஒரு விண்வெளி ஆராய்ச்சித் திட்டமாக அறிவிக்கப்பட்டது.
- நோக்கம்: பூமி சார்ந்த தரவு மையங்களின் ஆற்றல் மற்றும் நீர் நுகர்வைக் குறைத்தல்
- இலக்கு: விண்வெளியில் சூரிய ஆற்றலால் இயங்கும் செயற்கை நுண்ணறிவு தரவு மையங்களை உருவாக்குதல்.
- முன்மாதிரி ஏவுதல்: 2027-ன் தொடக்கத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. பிளானட் லேப்ஸுடன் இணைந்து இரண்டு முன்மாதிரி செயற்கைக்கோள்கள் ஏவப்பட உள்ளன.
- தொழில்நுட்பம்: செயற்கைக்கோள்களில் கூகிளின் டிரில்லியம் டென்சர் பிராசஸிங் யூனிட்கள் மற்றும் சூரிய மின்தகடுகள் இணைக்கப்படும்.

60. பிர்சா 101 மரபணு சிகிச்சை

- விவாதம்: அரிவாள் செல் நோய்க்கான இந்தியாவின் முதல், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட CRISPR சார்ந்த மரபணு சிகிச்சை இதுவாகும்.
- நோக்கம்: அரிவாள் செல் நோய்க்கு குறைந்த செலவிலான மற்றும் திறமையான ஒரு சிகிச்சை முறையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- தொழில்நுட்பம்: இது CRISPR-Cas மரபணு எடிட்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- உருவாக்கம்: இது சிஎஸ்ஐஆர்-இன் மரபணுவியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

61. TnpB அடிப்படையிலான மரபணு எடிட்டிங் தொழில்நுட்பம்

- அறிமுகம்: TnpB-அடிப்படையிலான மரபணு எடிட்டிங் என்பது ஒரு புதிய கச்சிதமான மற்றும் சிக்கனமான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மரபணுத் தொகுப்பு எடிட்டிங் கருவியாகும்.
- மேம்பாடு: இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின்கீழ் செயல்படும் கட்டாக் நகரில் உள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகளால் இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது.
- சிறப்பம்சம்: இது Transposon-Associated Protein (TnpB) என்னும் புரதத்தைப் பயன்படுத்துகிறது. இந்தப் புரதம் CRISPR-Cas9 உடன் ஒப்பிடப்படும்போது, அளவில் மிகச் சிறியதாகும்.
- நோக்கம்: வேளாண் ஆராய்ச்சி மற்றும் வணிகப் பயிர் இனப்பெருக்கத் துறையில், மரபணு எடிட்டிங் செயல்முறையை மிகவும் சிக்கனமானதாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

- தேசிய மகளிர் ஆணையம், நெருக்கடியில் உள்ள பெண்களுக்காக 24 மணி நேரமும் செயல்படும், புதிய, சுருக்கமான உதவி எண்.14490-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் தேசிய கீதமான வந்தே மாதரம்' 2025, நவம்பர் 7 அன்று தனது 150-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. (இது முதன்முதலில் 1875 நவம்பர் 7 அன்று பெங்கால் தர்ஷன் இதழில் வெளியிடப்பட்டது.
- 2025 நவம்பர் 24 அன்று கவி (Gavi - தடுப்பூசிக் கூட்டமைப்பு) மற்றும் யூனிசெப் ஆகியவை ஆர்21 / மைட்ரி-எம் மலேரியா தடுப்பூசி தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை அறிவித்தன.

62. நாம் எழுகிறோம் முன்முயற்சி (We Rise Initiative)

- நிதி ஆயோக்கின் மகளிர் தொழில் முனைவோர் தளம் மற்றும் டிபி வோர்ல்ட் ஒரு கூட்டு முயற்சியை அறிவித்துள்ளன.
- நாள்: 17 அக்டோபர், 2025
- நோக்கம்: வர்த்தக வசதி, வழிகாட்டுதல் மற்றும் மூலோபாய கூட்டாண்மைகள் மூலம் இந்தியாவில் உள்ள பெண் தொழில்முனைவோர் தங்கள் வணிகத்தை உலக அளவில் விரிவுபடுத்த உதவுவதே இதன் நோக்கமாகும்.

- **இதர தகவல்கள்:** இது வர்த்தக அணுகலை விரிவுபடுத்துவதிலும் மகளிர் வணிகங்கள் அதிவேகமாக வளர வாய்ப்புகளைத் திறப்பதிலும் கவனம் செலுத்தும் ஒரு தனித்துவமான பொது-தனியார் கூட்டு முயற்சியாகும்.

63. பிரதமரின் சேது திட்டம்

- திறன் பட்டமளிப்பு விழாவின்போது, பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.
- குறிக்கோள்: 1000 அரசு ஐடிஐ-களை தொழில்துறைக்கு உகந்த மற்றும் நவீன நிறுவனங்களாக மாற்றுவது
- செயல்படுத்துதல்: ஹப் அண்ட் ஸ்போக் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது (200 ஐடிஐ-கள் மையங்களாகவும், மற்ற 800 ஐடிஐ-கள் அவற்றுடன் 'ஸ்போக்'களாகவும் இணைக்கப்படும்.
- செலவு: ரூ.60,000 கோடி.

64. மையம் மற்றும் ஆரங்கள் மாதிரி (Hub-and-Spoke Model)

- மையம் மற்றும் ஆரங்கள் மாதிரி என்பது ஒரு மிதிவண்டியின் சக்கரத்தை ஒத்திருக்கும் ஒரு போக்குவரத்து. தளவாட அல்லது இணைய அமைப்பாகும். இது ஒரு மைய இருப்பிடத்தைக் கொண்டுள்ளது. அங்கிருந்து அனைத்து கிளைகளும் (பாதைகளும்) உருவாகின்றன).

65. உலகின் மிக உயரமான மோட்டார் வாகனச் சாலை

- **சாதனை:** எல்லைச் சாலைகள் அமைப்பு, உலகின் மிக உயரமான மோட்டார் வாகனச் சாலையை அமைத்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.
- **அமைவிடம்:** மிக் லா கணவாய், கிழக்கு லடாக்.
- **உயரம்:** 19,400 அடி
- **முக்கியத்துவம்:** இந்தியா-சீனா எல்லைக்கு அருகிலுள்ள ∴பக்சே கிராமத்தை அடைய மூன்றாவது முக்கியமான பாதை.

66. நீலிட் டிஜிட்டல் பல்கலைக்கழகத் தளம் (NIELIT Digital University Platform)

- அக்டோபர் 2 அன்று மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- நோக்கம்: உயர்தர டிஜிட்டல் கல்வியை மேலும் எளிதாக அணுகுவதை சாத்தியமாக்குவது
- அம்சங்கள்: செயற்கை நுண்ணறிவு, இணையப் பாதுகாப்பு, தரவு அறிவியல், குறைக்கடத்திகள் போன்ற துறைகளில் தொழில்துறை சார்ந்த திட்டங்கள்.

67. செயல்படும் ஒரே 'சேற்று எரிமலை' மீண்டும் வெடித்தது

- நாள்: அக்டோபர் 2, 2025, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு
- அமைவிடம்: பராதாங் தீவு, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள்.

68. லீப்ஸ் 2025 முன்முயற்சி (LEAPS 2025 Initiative)

- அக்டோபர் 13, 2025 அன்று புதுதில்லி, பாரத் மண்டபத்தில் தொடங்கப்பட்டது.
- நோக்கம்: சரக்கு போக்குவரத்துத் துறையில் புத்தாக்கம், செயல்திறன் மற்றும் போட்டித்திறனை மேம்படுத்துதல்.
- பங்குதாரர்களில் விமானம், சாலை, கடல் மற்றும் இரயில் சரக்கு போக்குவரத்து நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பரந்த சரக்குப் போக்குவரத்துத் துறை பங்குதாரர்கள் அடங்குவர்.

69. தேசிய பருப்பு வகைகள் இயக்கம்

- அக்டோபர் 11, 2025 அன்று பிரதம மந்திரியால் தொடங்கப்பட்டது.
- நோக்கம்: பருப்பு உற்பத்தி மற்றும் தன்னிறைவை ஊக்குவித்தல்
- கால அளவு: 6 ஆண்டுகள் (2025-26 முதல் 2030-31வரை)
- நிதி ஒதுக்கீடு: ரூ.11,440 கோடி
- கவனம் செலுத்துதல்: துவரம்பருப்பு, உளுந்து மற்றும் மசூர் பருப்பு உற்பத்தியில் சிறப்பு கவனம்.

70. வனவிலங்கு வாரம், 2025

- நாள்: அக்டோபர் 28, 2025
- முக்கிய கருப்பொருள்: மனித-வனவிலங்கு சகவாழ்வு
- நோக்கம்: வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் சூழலியல் சமநிலை குறித்த பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- செயல்பாடுகள்: தேசிய ஹேக்கத்தான் (செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தீர்வுகள் குறித்து): மரம் நடும் இயக்கம்- அன்னையின் பெயரில் ஓர் மரம்.

71. வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு நிறைவு

- ஒப்புதல்: 2025 அக்டோபர் 1 அன்று மத்திய அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- நிகழ்வு: தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' 150 ஆண்டுகளை நிறைவு செய்ததையொட்டி நாடு முழுவதும் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.
- வரலாற்று உண்மை: 1950-ஆம் ஆண்டில், இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை, 'வந்தே மாதரம்' பாடலை இந்தியாவின் தேசியப் பாடலாக ஏற்றுக் கொண்டது.

72. ஐ.நா இணையக் குற்ற ஒப்பந்தம் கையெழுத்தானது

- கையெழுத்திடும் விழா தேதி: அக்டோபர் 25-26, 2025. வியட்நாமின் ஹனோய் நகரில், சுமார் 60-65 நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.
- ஒப்பந்தத்தின் பெயர்: இணையக் குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மாநாடு, ஹான்சி மாநாடு.
- முக்கிய நோக்கம்: சர்வதேச அளவில் இணையக் குற்றங்களை (ஹேக்கிங், தரவுத் திருட்டு, ரான்சம்வேர், இணையவழி மோசடி, குழந்தைகளைச் சுரண்டுதல், அனுமதியின்றி தனிப்பட்ட படங்கள் அல்லது காணொலிகளைப் பகிர்தல் போன்றவை) தடுத்தல்.

73. அமெரிக்கா – ஆஸ்திரேலியா கனிம ஒப்பந்தம்

- அக்டோபர் 2025-ல் அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே 8.5 பில்லியன் டாலர் மதிப்பிலான கனிம ஒப்பந்தம் கையெழுத்தானது.
- நோக்கம்: அரிய கனிமங்கள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் கூட்டாண்மையை வலுப்படுத்துதல்.
- வளர்ந்து வரும் ஆதிக்கத்துடன் முக்கியத்துவம் பெறுகிறது.

74. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திற்கு இந்தியா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டது

- அக்டோபர் 2025-ல், 2026-28ஆம் ஆண்டுக்கான ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இந்தியா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சிறப்பு அம்சம்: இந்தியாவின் ஏழாவது பதவிக்காலம்
- முக்கியத்துவம்: மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களுக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

75. சில்லறை விற்பனை சோதனைக்களம் தொடங்கப்பட்டது

- டிஜிட்டல் ரூபாயைச் சோதிப்பதற்காக, இந்திய ரிசர்வ் வங்கியால் 8 அக்டோபர், 2025 அன்று தொடங்கப்பட்டது.
- **அறிமுகம்:** டிஜிட்டல் ரூபாயின் சில்லறைப் பயன்பாட்டிற்காக புதிய தயாரிப்புகளையும் சேவைகளையும் உருவாக்க நிதி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இது வழிவகுக்கிறது.

76. இந்தியா தனது முதல் உள்நாட்டு நுண்ணுயிர் எதிர்ப்பியைத் தயாரித்தது

- **தகவல்:** மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் அவர்களால் 18 அக்டோபர், 2025 அன்று அறிவிக்கப்பட்டது.
- **நுண்ணுயிர் எதிர்ப்பியின் பெயர்:** ந.ஃபித்ரோமைசின் (Nafithromycin)
- **பயன்பாடு**: புற்றுநோய் நோயாளிகள் மற்றும் முறையாகக் கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோயாளிகளிடம் காணப்படும், மருந்துகளுக்குக் கட்டுப்படாத சுவாச மண்டலத் தொற்றுகளை ஒழிப்பதில் இது பயனுள்ளதாக உள்ளது.

77. இந்தியாவின் முதல் குறைக்கடத்தி புத்தாக்க அருங்காட்சியகம்

- இடம்: ஐதராபாத்
- திறப்பு விழா: 12 அக்டோபர், 2025
- நோக்கம்: சிப் தயாரிப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பது, உள்நாட்டு செயற்கை நுண்ணறிவு சிப்புகள் மற்றும் ரோபோட்டிக்ஸ் போன்ற திருப்புமுனை கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்துவது.
- தொழில்நுட்ப சிப் புத்தாக்கத் திட்டத்தால் (Technology Chip Innovation Programme -
  (T-Chip) தொடங்கப்பட்டது.

78. அண்டார்டிகா மைத்ரி-2 (Antarctica Maitri-II) நிறுவுதல்'

- 2025 அக்டோபர் 3 அன்று, கிழக்கு அண்டார்டிகாவில் மைத்ரி-2 என்ற புதிய ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதற்கு ஒன்றிய நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.
- நோக்கம்: காலநிலை மாற்றம், பனிப்பாறைகள், பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் அண்டார்டிகாவின் கடுமையான சூழல்களில் உள்ள உயிரினங்கள் குறித்த ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.
- முக்கியத்துவம்: அண்டார்டிகாவில் இந்தியாவின் நான்காவது ஆராய்ச்சி நிலையம் (ஜனவரி, 2029-க்குள் செயல்பாட்டுக்கு வரும்)
- செயல்பாடு: கோவாவில் உள்ள தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சி மையத்தால் (National Centre for Polar and Ocean Research) இயக்கப்படும்.

79. 'மிஷன் த்ரிஷ்டி' (Mission Drishti) அறிவிப்பு

- இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனமான கேலக்ஸ் ஐ ஸ்பேஸ் (GalaxEye Space) மூலம் 2026-ஆம் ஆண்டில் ஏவப்படும் என அறிவிக்கப்பட்டது.

- சிறப்பம்சம்: செயற்கை துறை ரேடார் மற்றும் ஒளியியல் படமெடுக்கும் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் உலகின் முதல் செயற்கைக்கோள்
- உயர் தெளிவுத் திறன்: 1.5 மீட்டர் தெளிவுத் திறனில் பூமியின் படங்களை வழங்கும் திறன் கொண்டது.

80. தார்தி பயோ நெஸ்ட் இன்குபேஷன் சென்டர் திறப்பு விழா

- 14 அக்டோபர், 2025 அன்று தொடங்கப்பட்டது.
- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- இடம்: ஐ.டி, தார்வாட், கர்நாடகா
- நோக்கம்: உயிரித் தொழில்நுட்பம், ஆழ்தொழில்நுட்பம் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு அடைகாப்பு மற்றும் பிற அத்தியாவசிய ஆதரவை வழங்குதல்.
- ஒத்துழைப்பு: தார்த்தி அறக்கட்டளை மற்றும் ஐடி, தார்வாட் இடையேயான ஒரு கூட்டு முயற்சி.

- இந்தியாவில் கிளவுட் மற்றும் ஏஐ தொழில்நுட்பத்திற்கு ஒரு புதிய உத்வேகம் அளிப்பதற்காக பார்தி ஏர்டெல் மற்றும் ஐபிஎம் ஒரு மூலோபாய கூட்டாண்மையில் இணைந்துள்ளது.

81. இந்தியாவின் முதல் வெளிநாட்டு 'அடல் புத்தாக்க மையம்'

- இடம்: ஐஐடி, டெல்லி – அபுதாபி வளாகம் (ஐக்கிய அரபு அமீரகம்)
- தொடக்க நாள்: செப்டம்பர் 10, 2025
- தொடங்கி வைத்தவர்: மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான்
- நோக்கம்: இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய இரு நாடுகளைச் சேர்ந்த புதுமைப் படைப்பாளர்களின் கூட்டுத் தொடக்க நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளுக்கு ஆதரவு அளித்தல்.
- ஆழமான தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, தூய ஆற்றல் மற்றும் சுகாதாரம் போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்

82. தேசிய தூய்மையே சேவை (National Swachhata Hi Seva) 2025 பிரச்சாரம்

- கால அளவு: செப்டம்பர் 7 முதல் அக்டோபர் 2, 2025 வரை
- ஏற்பாட்டாளர்கள்: வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடிநீர் துறை, ஜல்சக்தி அமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்.
- 2025-க்கான கருப்பொருள்: ஸ்வச்சோத்சவ் அதாவது தூய்மைத் திருவிழா. இதில் தனிப்பட்ட தூய்மையுடன் சேர்த்து, சமூக நிறுவனங்கள், பள்ளிகள், பொது இடங்கள், நிகழ்வுகள் போன்றவற்றிலும் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவது வலியுறுத்தப்படுகிறது.

83. இந்தியாவில் குற்றங்கள் 2023 அறிக்கை

- வெளியீட்டுத் தேதி: செப்டம்பர் 2025-இன் இறுதி
- வெளியிட்ட அமைப்பு: தேசிய குற்ற ஆவணக் காப்பகம்
- முக்கிய கண்டுபிடிப்புகள்: பெண்களுக்கு எதிரான குற்றங்களில் இலேசான அதிகரிப்பும், பட்டியலின பழங்குடியினருக்கு எதிரான குற்றங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் காணப்படுகிறது. கொலைச் சம்பவங்கள் 2.8 விழுக்காடு குறைந்த அதே வேளையில், ஆட்கடத்தல் மற்றும் வழக்குகள் 5.6 விழுக்காடு அதிகரித்துள்ளன.

84. இந்தியாவில் குழந்தைகள் 2025 அறிக்கை

- வெளியீட்டுத் தேதி: செப்டம்பர் 25, 2025 அன்று. சண்டிகரில் நடைபெற்ற மத்திய மற்றும் மாநில புள்ளியியல் அமைப்புகளின் (Central and State Statistical Organisations) 29வது மாநாட்டின் போது வெளியிடப்பட்டது.
- வெளியிட்ட அமைப்பு: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்
- முக்கிய கண்டுபிடிப்புகள்: 2020-இல் 44 ஆக இருந்த சிசு இறப்பு விகிதம், 2023இல் 25 ஆகக் குறைந்துள்ளது. பள்ளியிலிருந்து விலகும் விகிதம் 2022-23இல் 3.8 ஆக இருந்தது, 2024-25இல் 8.2 ஆகக் குறைந்துள்ளது. 20-24 வயதுக்குட்பட்ட பெண்களில், 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொண்டவர்களின் விழுக்காடு 2005-06ல் 26.8 விழுக்காடாக இருந்தது, 2019-20இல் 23.3 ஆகக் குறைந்துள்ளது.

85. இந்திய சிறைச்சாலை புள்ளிவிவரங்கள் 2023

- செப்டம்பர் 2025இல் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் வெளியிடப்பட்டது.
- முக்கிய கண்டுபிடிப்புகள்
  - ✓ சிறைச்சாலைகள் மிக அதிக அளவில் நெரிசலுடன் காணப்படுகின்றன. அங்குள்ள இட ஆக்கிரமிப்பு விகிதம் சுமார் 120-130 விழுக்காடு ஆக உள்ளது.
  - ✓ விசாரணை நிலையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலேயே மிக அதிகமாக உள்ளது.

86. உலகின் முதல் பீங்கான் கழிவுப் பூங்கா

- பெயர்: அனோகி துனியா பூங்கா (AnokhiDuniya Park)
- அமைவிடம்: குர்ஜா, புலந்த்சஹர் மாவட்டம், உத்தரப்பிரதேசம்
- வகை: பீங்கான் கழிவுகளைக் கொண்டு முழுமையாகக் கட்டப்பட்ட உலகின் முதல் பூங்கா இதுவாகும்.
- பயன்படுத்தப்பட்ட பொருட்கள்: 80 டன்களுக்கும் அதிகமான பீங்கான் கழிவுகள் கலைநயத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- கட்டுமான முகமை: புலந்த்சஹர் - குர்ஜா மேம்பாட்டு ஆணையம்

87. நீர் பாதுகாப்புக்கான தேசிய முன்னெடுப்பு

- தொடக்கம்: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் இந்திய அரசு 'நீர் பாதுகாப்புக்கான தேசிய முன்னெடுப்பை' அறிமுகப்படுத்தியது.
- நோக்கம்: நிலத்தடி நீர் மட்டம் குறைவதைக் கட்டுப்படுத்துவதும், கிராமப்புறங்களுக்கான நீண்டகால நீர் பாதுகாப்பை உறுதி செய்வதும் இதன் நோக்கமாகும்.
- முக்கிய அம்சங்கள்
  - ✓ நீர் பற்றாக்குறை மிகக் கடுமையான உள்ள வட்டாரங்களில், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு நிதியில் 65% நீர் தொடர்பான பணிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.
  - ✓ 'ஓரளவு பற்றாக்குறை' உள்ள வட்டாரங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட நிதியில் 40 விழுக்காடு நீர் பாதுகாப்புப் பணிகளுக்காகச் செலவிடப்பட வேண்டும்.
  - ✓ நீர் பற்றாக்குறை இல்லாத வட்டாரங்களில், நிதியில் குறைந்தது 30 விழுக்காடு நீர் தொடர்பான பணிகளுக்குச் செலவிடப்பட வேண்டும்.

88. உலகின் முதல் டிஜிட்டல் பழங்குடியினர் பல்கலைக் கழகம் - ஆதி சம்ஸ்கிருதி (AdiSanskriti)

- தொடக்கம்: செப்டம்பர் 10, 2025 அன்று பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் இது தொடங்கப்பட்டது.
- நோக்கம்: பழங்குடியினரின் நடனம், இசை, ஓவியம், கைவினைக்கலைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் தொடர்பான பாடநெறிகளை வழங்குவதோடு பழங்குடியினரின்

கலாச்சாரம் மற்றும் அறிவைப் பாதுகாப்பதும் இந்த மின்-கற்றல் தளத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

89. யுனெஸ்கோ – WNBR ல் சேர்க்கப்பட்ட குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகம்.

- 2025 செப்டம்பர் 27 அன்று, இந்தியாவின் 'குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகம்' (Cold Desert Biosphere Reserve) யுனெஸ்கோவின் 'உலக உயிர்க்கோளக் காப்பகங்களின் வலையமைப்பில்' (World Network of Biosphere Reserves) சேர்க்கப்பட்டது.
- சிறப்பம்சம்: இந்தக் குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகம், இமாச்சலப் பிரதேசத்தின் லாஹால்- ஸ்பிதி மாவட்டத்தில் சுமார் 7,770 சதுர கி.மீ பரப்பளவில் விரிந்துள்ளது.
- பிற தகவல்கள்: இது 2009-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தால், இந்தியாவின் 'தேசிய உயிர்க்கோளக் காப்பகமாக' அறிவிக்கப்பட்டது.

90. தூய காற்று ஆய்வு 2025

- ஏற்பாட்டாளர்: சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்.
- நடத்துமுறை: 'தேசிய தூய காற்றுத் திட்டத்தின்கீழ், 130 நகரங்களில் ஆண்டுதோறும் இந்தத் 'தூய காற்று ஆய்வு' நடத்தப்படுகிறது.
- விருதுகள்: மொத்தம் 3 பிரிவுகளின்கீழ் விருதுகள் அறிவிக்கப்பட்டன.
- பிரிவு -1 (மக்கள் தொகை 10 இலட்சத்திற்கும் அதிகம்) இந்தூர், முதலிடம். ஜபல்பூர் இரண்டாமிடம். ஆக்ரா மற்றும் சூரத் மூன்றாமிடம்.
- பிரிவு-2 (மக்கள் தொகை 1 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை) அமராவதி முதலிடம், ஜான்சி மற்றும் மொராதாபாத் இரண்டாமிடம், அல்வார் - மூன்றாமிடம்.
- பிரிவு 3 (மக்கள் தொகை 1 இலட்சத்திற்கும் குறைவு) தேவாஸ் முதலிடம், பர்வானூ இரண்டாமிடம், அங்குல் மூன்றாமிடம்.

91. ஜிஎஸ்டி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் தொடங்கப்பட்டது!

- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் 24 செப்டம்பர் 2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- **அறிமுகம்**: மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், 2017-இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டரீதியான அமைப்பு
- **நோக்கம்**: GST தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதை எளிமையாகவும் விரைவாகவும் ஆக்குதல்
- **விதிமுறை**: புது தில்லியில் முதன்மை அமர்வை (Principal Bench) நிறுவுதல்

92. அங்கிகார் 2025 பிரச்சாரம்

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் அவர்களால் 4 செப்டம்பர் 2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- நோக்கம்: பிரதமரின் ஆவாஸ் யோஜனா-அர்பன் 2.0 திட்டம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பது.
- காலம்: 4 செப்டம்பர் 2025 முதல் 31 அக்டோபர் 2025 வரை

93. ஓஜு நீர்மின் திட்டம் (OjuHydroelectric Project)

- அறிமுகம்: அருணாச்சலப் பிரதேசத்தின் அப்பர் சுபன்சிரி மாவட்டத்தில் உள்ள ஓஜு நீர்மின் திட்டத்திற்கு மத்திய அரசால் சுற்றுச் சூழல் அனுமதி வழங்கப்பட்டது.
- நோக்கம்: சுபன்சிறிப் படுகையின் பரந்த நீர்மின் ஆற்றலைப் பயன்படுத்துதல்
- திறன் 2,220 மெகாவாட் ஆற்று நீர்மின் திட்டம்.

94. சுயமரியாதை இயக்கத்தின் 100 ஆண்டுகள்

- ஆண்டு: 1925, தமிழ்நாட்டில் ஈ.வெ. ராமசாமி (பெரியார்) அவர்களால் தொடங்கப்பட்டது.
- நோக்கம்: சாதி அமைப்பை ஒழித்தல், பிராமண ஆதிக்கத்தை நிராகரித்தல் மற்றும் தனி மனித கண்ணியத்தை மேம்படுத்துதல்
- முக்கிய தகவல்: பெரியார் இதை 'அறிவு விடுதலை இயக்கம்' என்று அழைத்தார். அதாவது அறிவுசார் விடுதலை இயக்கம்.

95. ஞான பாரதம் இயக்கம்

- அறிமுகம்: 2025-26 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு, செப்டம்பர் 2025-இல் தொடங்கப்பட்டது.
- நோக்கம்: தேசிய டிஜிட்டல் நூலகத்தில் மில்லியன் கணக்கான கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாத்தல்.
- ஒருங்கிணைப்பு அமைச்சகம்: பண்பாட்டு அமைச்சகம்
- முக்கியத்துவம்: பாரம்பரியத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து, எதிர்கால சந்ததியினருக்குக் கிடைக்கச் செய்தல்.

96. தேசிய ஊட்டச்சத்து வாரம்

- அனுசரிப்பு: செப்டம்பர் 1 முதல் 7 வரை
- நோக்கம்: ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தல் சரியான ஊட்டச்சத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள்
- கருப்பொருள்: சிறந்த வாழ்க்கைக்கு சரியாக உண்ணுங்கள்
- முக்கிய தகவல்: இந்தியாவில் தேசிய ஊட்டச்சத்து வாரம் 1982 ஆம் ஆண்டில் தொடங்கியது.

97. தேசிய புவிவெப்ப ஆற்றல் கொள்கை, 2025

- வெளியீட்டு நாள்: 15 செப்டம்பர் 2025
- அமைச்சகம்: புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம்
- நோக்கம்: இந்தியாவின் பரந்த புவிவெப்ப ஆற்றல் திறனைப் பயன்படுத்துதல்
- அடையாளம் காணப்பட்ட புவிவெப்பப் பகுதிகள்: லடாக் (பூகா பள்ளத்தாக்கு), இமாச்சலப் பிரதேசம், குஜராத், ஒடிசா மற்றும் சத்தீஸ்கர்

98. இந்தியாவில் வெள்ளி நகைகளில் HUID அடிப்படையிலான ஹால்மார்க்கிங் அறிமுகம்

- கலந்துரையாடல்: வெள்ளிக்கான தன்னார்வ ஹால்மார்க்கிங் 1 செப்டம்பர் 2025 முதல் தொடங்கியது.
- அம்சம்: ஹால்மார்க் தனித்துவ அடையாளம் (HUID) என்பது, 6 இலக்க எழுத்து-எண் குறியீடு ஆகும்.
- நோக்கம்: வாங்கும் நேரத்தில் உலோகத்தின் தூய்மையை நுகர்வோர் உறுதி செய்ய உதவுதல்.

99. உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு அமைச்சரின் நியமனம்

- 2 செப்டம்பர் 2025 அல்பேனியா
- **பெயர்:** டெலியா, ஒரு செயற்கை நுண்ணறிவு அமைப்பு அல்லது மெய்நிகர் உதவியாளர்
- **பதவி**: செயற்கை நுண்ணறிவுக்கான மாநில அமைச்சர்.

100. 'வளர்க்கும் தொடக்கங்கள்' (Nurturing Beginnings) திட்டம்

- கலந்துரையாடல்: உலக சுகாதார அமைப்பு மற்றும் மலபார் அறக்கட்டளை இணைந்து டெல்லி குடிசை பகுதிகளில் 'வளர்க்கும் தொடக்கங்கள்' திட்டத்தைத் தொடங்கின. (செப்டம்பர், 2025)
- நோக்கம்: கருத்தரித்தது முதல் குழந்தையின் இரண்டாவது பிறந்தநாள் வரையிலான தாய்-சேய் பராமரிப்பின்மூலம் குழந்தைகளின் வளர்ச்சி தாமதங்களைத் தடுப்பது. இது வாழ்நாள் ஆரோக்கியம், அறிவாற்றல் வளர்ச்சி மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்கு அடித்தளமிடும் ஒரு முக்கியமான காலகட்டமாகும்.

101. இந்தியாவின் முதல் வெளிநாட்டுப் பாதுகாப்பு உற்பத்தி ஆலை (India's first Foreign Indian Defence Manufacturing Plant)

- அறிமுகம்: இந்தியாவின் முதல் வெளிநாட்டுப் பாதுகாப்பு உற்பத்தி ஆலை வட ஆப்பிரிக்க நாடான மொராக்கோவில் நிறுவப்பட்டது.
- .இடம்: பெர்ரெக்சிட், மொராக்கோ
- நிறுவனம்: டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட், டாடா குழுமத்தின் பாதுகாப்புப் பிரிவு
- திறப்பு விழா: செப்டம்பர் 2025-இல் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் மொராக்கோவின் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரால் கூட்டாகத் திறக்கப்பட்டது.
- உற்பத்தி: இந்த ஆலை உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சக்கர கவச மேடை (Wheeled Armoured Platform) போர் வாகனத்தை உற்பத்தி செய்யும்.

102. இந்தியா மற்றும் மொரிஷியஸ் இடையேயான ஒப்பந்தம்

- நாள்: 9-6 செப்டம்பர், 2025 பிரதமர் டாக்டர். நவின்சந்திர ராம்கூலம்.
முக்கிய ஒப்பந்தங்கள்:
- மொரிஷியஸில் 47.5 மெகாவாட் மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையம் அமைத்தல்
- மொரிஷியஸில் உள்ள டியாகோ கார்சியா அருகே செயற்கைக்கோள் கண்காணிப்பு நிலையம் அமைத்தல்
- பிற தகவல்கள்: இந்தியாவிற்கு வெளியே இந்தியாவின் முதல் ஜன் ஔஷாதி கேந்திரா மொரிஷியஸில் நிறுவப்பட்டது மற்றும் ஆயுஷ் சிறப்பு மையம் அமைப்பதில் ஒத்துழைப்பு.

103. UPI-UPU ஒருங்கிணைப்புத் திட்டம் தொடங்கப்பட்டது

- **கலந்துரையாடல்:** துபாயில் (ஐக்கிய அரபு அமீரகம்) நடைபெற்ற 28வது உலகளாவிய தபால் மாநாட்டில் யுபிஐ-யுபியு ஒருங்கிணைப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.
- தபால் துறை, என்பிசிஐ இண்டர்நேஷனல் பேமெண்ட்ஸ் லிமிடெட் மற்றும் உலகளாவிய தபால் ஒன்றியம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது.
- **நோக்கம்:** தடையற்ற தரவு சார்ந்த தளவாடங்கள் மூலம் இணைப்பது, ஒவ்வொரு புலம் பெயர்ந்தோர் மற்றும் டிஜிட்டல் நிறுவனத்திற்கும் மலிவு விலையில் டிஜிட்டல் நிதிச் சேவைகளை வழங்குவது உட்பட.

104. 32 பிட் நுண்செயலி விக்ரம்

- அறிமுகம்: விக்ரம் 320 இந்தியாவின் முதல் முழுமையான உள்நாட்டு 32 பிட் நுண் செயலி
- தொடக்கம்: பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணா ஆகியோரால் செமிகண்டக்டர் இந்தியா 2025 மாநாட்டில் தொடங்கி வைக்கப்பட்டது. விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் மற்றும் செமிகண்டக்டர் ஆய்வகம் இணைந்து உருவாக்கியது.
    - ✓ பணி: முதன்மைப் பயன்பாடு இஸ்ரோ ராக்கெட்டுகள், ஏவுகணைகள் மற்றும் செயற்கைக்கோள்களில் வழிசெலுத்துதல், வழிகாட்டுதல் மற்றும் திட்ட மேலாண்மையைக் கையாளுதல்.
    - ✓ தொழில்நுட்ப முன்னேற்றம் விக்ரம்-60 6 பிட் நுண்செயிலியன் மேம்பட்ட பதிப்பு

105. இந்தியாவின் முதல் மூங்கில் அடிப்படையிலான எத்தனால் ஆலை

- தொடக்கம்: அசாமின் கோலாகாட்டில் இந்தியாவின் முதல் மூங்கில் அடிப்படையிலான பயோ எத்தனால் ஆலை, 4 செப்டம்பர், 2025 அன்று பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- உரிமை: நுமாலிகர் சுத்திகரிப்பு நிறுவனம் மற்றும் பின்லாந்தின் ∴போர்டம் மற்றும் கெம்போலிஸ் OY ஆகியவற்றின் கூட்டு முயற்சி.
- திறன் ஆண்டுக்கு 5 இலட்சம் டன் பச்சை மூங்கிலைப் பயன்படுத்தி, ஆண்டுக்கு சுமார் 48,900 மெட்ரிக் டன் எத்தனாலை உற்பத்தி செய்யும் திறன்.

106. உலகின் முதல் வைரல் ஜீனோம் உருவாக்கிய செயற்கை நுண்ணறிவு

- நிறுவனம்: ஸ்டான்.∴போர்ட் மற்றும் ஆர்க் இன்ஸ்டிடியூட் ஆராய்ச்சியாளர்கள்.
- பயன்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு: ஈவோ ஜீனோம் (**Evo** Genome). இது ஒரு செல்லில் காணப்படும் டிஎன்ஏ-வின் முழுமையான அறிவுறுத்தல்களின் தொகுப்பாகும்.

107. நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்க் கப்பலான ஆண்ட்ரோட் (Andrott) கடற்படையில் சேர்க்கப்பட்டது.

- அறிமுகம்: 3 செப்டம்பர், 2025 அன்று இந்திய கடற்படைக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- உற்பத்தியாளர்: கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ், கொல்கத்தா

108. ஐசிஜிஎஸ் அதாம்யா (ICGS Adamya)

- அறிமுகம்: 29 செப்டம்பர், 2025 அன்று ஒடிசாவின் பாராதீப் துறைமுகத்தில் பெறப்பட்டது.
- வகை: அதாம்யா வகுப்பைச் சேர்ந்த எட்டு கப்பல்களில் முதல் கப்பல்
- உற்பத்தியாளர்: கோவா ஷிப்யார்ட் லிமிடெட்.

- **சிறப்பம்சங்கள்**
  - ✓ மணிக்கு சுமார் 52 கிமீ வேகத்தில் செல்லக்கூடிய அதிவேக ரோந்துக் கப்பல்
  - ✓ அதிகபட்சமாக 500 கடல் மைல்கள் வரை பயணிக்கக்கூடியது.
  - ✓ டீசல் எஞ்சின்கள் மூலம் இயக்கப்படுகிறது.

109. சமுத்திர பிரவசீனம்: கடல் பயணம் (Samudra Pravachina: Voyage Expedition)

- அறிமுகம்: இந்தியாவின் முதல் முப்படைகளின் பெண்கள் மட்டுமே பங்கேற்ற கடல் பயணம்
- நோக்கம்: கடல்சார் முயற்சிகளில் பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதும், கடல்சார் திறன்களை மேம்படுத்துவதும் ஆகும்.
- இலக்கு: 26000 கடல் மைல் பயணம்
- உள்ளடக்கப்பட்ட பகுதிகள்: நான்கு துறைமுகப்பகுதிகள். ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, தென்னாப்பிரிக்கா.

110. இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவுமூலம் இயங்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (Command and Control Centre)

- கலந்துரையாடல்: 25 செப்டம்பர், 2025 அன்று இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்
- ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் N. சந்திரபாபு நாயுடு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது
- அமைவிடம்: திருப்பதி மாவட்டம், திருமலை கோவில்

- சிறப்பம்சங்கள்: கிளவுட் ஸ்பாட் இன்க் (Cloud Spotinc) மற்றும் என்விடியா (NVIDIA) உயர் செயல்திறன் கணினி மூலம் இயங்கும் ஐசிசிசி (ICCC)
- முக்கியத்துவம்: திருமலையில் நிகழ்நேரத்தில் கூட்டத்தைக் கண்காணித்தல், விரைவான வரிசைகள், மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் இணைய அச்சுறுத்தல்களைக் கண்காணித்தல்.

111. முப்பரிமாண வான்வழி கண்காணிப்பு ரேடார் லாஞ்சா என் (3D Air Surveillance Radar: Lancha N)

- அறிமுகம்: இந்திய கடற்படைக்காக, முதலாவது 'லாஞ்சா என்' எனும் முப்பரிமான வான்வழி கண்காணிப்பு ரேடார் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- உற்பத்தியாளர்: டாடா அட்வான்ஸ்ட் சிஸ்டம்ஸ் லிட், இந்தியா
- வெளிநாட்டுப் பங்குதாரர், இந்திரா (Indra), ஸ்பெயின்
- வரம்பு 9 முதல் 474 கிமீ வரை 4,00,000 அடி உயரம் வரை
- சுழற்சி வேகம் 0 வினாடிகளில் ஒரு முழுச் சுழற்சி

112. இந்திய கடற்படையின் புதிய கடற்படைத் தளம்: ஐஎன்எஸ் ஆரவள்ளி (Indian Navy's Latest Naval Bas INS Aravali)

- தொடக்கம்: 2 செப்டம்பர், 2025
- இடம்: குருகிராம், ஹரியானா
- திறந்து வைத்தவர், கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி
- நோக்கம்: தகவல் மற்றும் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

113. உலகின் முதலாவது 'மூடிய எரிபொருள் சுழற்சி' அணுசக்தி அமைப்பு

- **அறிமுகம்:** உலகின் முதலாவது மூடிய எரிபொருள் சுழற்சி அணுசக்தி அமைப்பைத் தொடங்குவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.
- **இடம்:** டாம்ஸ்க் பிராந்தியம், ரஷ்யா.
- **நோக்கம்**: பயன்படுத்தப்பட்ட அணு எரிபொருளைப் பலமுறை மறுபயன்பாட்டிற்கு உட்படுத்துவதன்மூலம், யுரேனியத்திற்கான தேவையைக் குறைப்பதும், கதிரியக்கக் கழிவுகளைக் குறைப்பதும் ஆகும்.
- **இலக்கு**: 2030ஆம் ஆண்டிற்குள் உலகின் முதலாவது 'மூடிய எரிபொருள் சுழற்சி' அணுசக்தி அமைப்பைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல்.

114. ஆரோகன் திட்டம் (Project Aarohan)

- தொடங்கிய அமைப்பு: இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்.
- நோக்கம்: சுங்கச்சாவடி, ஊழியர்களின் குழந்தைகளுக்குத் தரமான கல்விக்கான சமமான வாய்ப்பை வழங்குதல்.

115. இந்தியாவின் முதலாவது தேசிய 'உயிரியல் வார்ப்பகம் (Bio foundry) கட்டமைப்பு

- தொடங்கிய நாள்: ஆகஸ்ட் 27, 2025
- தொடங்கியவர்: டாக்டர். ஜிதேந்திர சிங் (மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர்)
- நோக்கம்: இந்தியாவை உயிரித் தொழில்நுட்பத் துறையில் ஒரு உலகளாவிய மையமாக உருவாக்குதல்.

116. MERITE திட்டம்

- **விவாதம்:** மத்திய அமைச்சரவை, 'பல்துறைசார் கல்வி மற்றும் ஆராய்ச்சி சீர்திருத்தங்கள்- தொழில்நுட்பக் கல்வி' (Multidisciplinary Education and Research Reforms Technical Education) திட்டத்திற்கு ஆகஸ்ட் 2025-இல் ஒப்புதல் அளித்தது.
- **நோக்கம்:** நாடு முழுவதும் உள்ள 275 கல்வி நிறுவனங்களில் தர மேம்பாட்டை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- **கால அளவு**: 2025-26 முதல் 2029-30 வரை (ஐந்து ஆண்டுகள்)
- **நிதி ஒதுக்கீடு**: ரூ.4200 கோடி
- **இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிறுவனங்கள்**: தேசிய தொழில்நுட்நுட்ப நிறுவனங்கள், மாநிலப் பொறியியல் நிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பொறியியல் நிறுவனங்கள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்.

117. UDISE+ 2024-25 அறிக்கை வெளியிடப்பட்டது

- வெளியிட்ட அமைச்சகம்: மத்திய கல்வி அமைச்சகம், இந்திய அரசு.
- முக்கிய கண்டுபிடிப்புகள்: இந்தியாவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை வரலாற்றிலேயே முதன் முறையாக, ஒரு கோடி என்ற எண்ணிக்கையைக் கடந்துள்ளது.
  - ✓ அனைத்து நிலைகளிலான கல்வியிலும் இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது.
  - ✓ நடுநிலைப் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, இடைநிற்றல் விகிதம் 2022-23இல் 5.2 விழுக்காடாக இருந்தது, 2024-25இல் 3.5 விழுக்காகடாகக் குறைந்துள்ளது.

118. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ஆரோஹன் திட்டம் (NHAI's Project Arohan)

- தொடக்கம்: ஆகஸ்ட் 26, 2015 அன்று தொடங்கப்பட்டது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், வெர்டிஸ் கட்டமைப்பு அறக்கட்டளை உடன் இணைந்து இந்தத் திட்டத்தைத் தொடங்கியது.
- அறிமுகம்: சுங்கச் சாவடி ஊழியர்களின் குழந்தைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில் தொடங்கப்பட்ட ஒரு கல்வி உதவித் தொகை முன்னெடுப்புத் திட்டமாகும் இது.
- நோக்கம்: பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களை மையமாகக் கொண்டு, அவர்களின் கல்விசார் சவால்களைக் கடக்ககத் தேவையான நிதி உதவி, வழிகாட்டுதல் மற்றும் தொழில்சார் ஆலோசனை ஆகியவற்றை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- இலக்கு: 11ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் 500 மாணவர்களுக்கு, ஒரு மாணவருக்கு ரூ.12,000 வீதம் ஆண்டுதோறும் கல்வி உதவித் தொகை வழங்குதல். மேலும் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் 50 மாணவர்களுக்கு, ஒருவருக்கு ரூ.50000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்குதல்.
- ஒருவருக்கு ரூ.50000 வீதம் 50 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்..

119. இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு சார்ந்த அங்கன்வாடி மையம்

- மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூருக்கு அருகிலுள்ள வதம்னா கிராமத்தில், ஆகஸ்ட் 2025இல் தொடங்கப்பட்டது.
- இந்த மையம், 2 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஊடாடும் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்களை வழங்க, செயற்கை நுண்ணறிவு வசதி கொண்ட ஸ்மார்ட் பலகைகள், மெய்நிகர் யதார்த்தம் கொண்ட தலைக்கவசங்கள் மற்றம் கையடக்கக் கணினிளைப் பயன்படுத்துகிறது. இது கல்வியில் நிலவும் டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க உதவுகிறது.

120. 79வது சுதந்திர தினம்

- 79-வது சுதந்திர தினத்தை (15 ஆகஸ்ட், 2025) முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.
- கருப்பொருள்: 'நவ்ய பாரத்' (புதிய இந்தியா).
- முக்கிய அறிவிப்புகள்:
- பிரதமரின் விக்சித் பாரத் ரோஜ்கார் யோஜனா
- அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள்- 'மிஷன் சுதர்ஷன் சக்ரா'
- தேசிய ஆழ்கடல் ஆய்வுத் திட்டம் (சமுத்திர மந்தன்)

121. பசுமைப் போக்குவரத்து முயற்சி

- தொடக்கம்: 28 ஆகஸ்ட், 2025
- குஜராத்தின் ஹன்சல்பூரில் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது.
- முக்கிய அம்சங்கள்
  - ✓ சுஜுகி நிறுவனத்தால் இந்தியாவில்தயாரிக்கப்பட்ட 'இ-விதாரா' என்னும் (E-Vitara) மின்சார வாகனத்தின் அறிமுகம்.
  - ✓ குஜராத்தில் அமைந்துள்ள லித்தியம்-அயன் மின்கலத் தொழிற்சாலையில், கலப்பின மின்கல மின்பகுளிகளின் (hybrid battery electrolytes) உள்ளூர் உற்பத்தியைத் தொடங்குவது குறித்து பிரதமரால் அறிவிக்கப்பட்டது.

122. இணையவழி விளையாட்டு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 2025

- அறிமுகம்: இணையவழி விளையாட்டுத் துறையை ஒழுங்குபடுத்தவும், மேம்படுத்தவும் மற்றும் ஆதரிக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு விரிவான சட்ட ஏற்பாடு.
- சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள்:
  - ✓ 20 ஆகஸ்ட் 2025 – மக்களவையில் நிறைவேற்றம்.
  - ✓ 21 ஆகஸ்ட்2025 – மாநிலங்களவையில் நிறைவேற்றம்.
  - ✓ 22 ஆகஜ்ட், 2025, குடியரசுத் தலைவரின் ஒப்புதல்,

- **முக்கிய அம்சங்கள்**
  - ✓ பணத்தை மையமாகக் கொண்ட இணையவழி விளையாட்டுகளுக்குத் தடை
  - ✓ மின்-விளையாட்டுகளின் மேம்பாடு
  - ✓ தேசிய அளவிலான ஒரு ஒழுங்குமுறை அமைப்பை உருவாக்குதல்.

123. தேசிய விளையாட்டு மேம்பாட்டுச் சட்டம், 2025

- அறிமுகம்: இந்தியாவில் விளையாட்டு நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புடைமையையும் கொண்டு வருவதற்கான ஒரு சட்டக் கட்டமைப்பு
- சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள்
  - ✓ 8 ஆகஸ்ட், 2025 – குடியரசுத் தலைவரின் ஒப்புதல்
  - ✓ 7 ஆகஸ்ட், 2025 மாநிலங்களவையில் நிறைவேற்றம்
  - ✓ 7 ஆகஸ்ட், 2025 மக்களவையில் நிறைவேற்றம்.
- **முக்கிய அம்சங்கள்:**
  - ✓ விளையாட்டுச் சங்கங்களை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும், 'தேசிய விளையாட்டு வாரியம்' (National Sports Board) அமைத்தல்.
  - ✓ மத்திய அல்லது மாநில அரசிடமிருந்து நிதி உதவி பெறும் விளையாட்டு அமைப்புகள் அனைத்தும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-இன்கீழ் 'பொது அதிகார அமைப்புகளாகவே' கருதப்படும்.

124. இந்திய துறைமுகங்கள் சட்டம், 2025

- அறிமுகம்: ஒருங்கிணைந்த துறைமுக மேம்பாடு, கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவம் மற்றும் உலகளாவிய போட்டித்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு சட்டம்.

நிறைவேற்றப்பட்ட நாள்

- 21 ஆகஸ்ட், 2025 – குடியரசுத் தலைவரின் ஒப்புதல்.
- 8 ஆகஸ்ட், 2025 - மாநிலங்களவையில் நிறைவேற்றம்
- 2 ஆகஸ்ட், 2025 -மக்களவையில் நிறைவேற்றம்.

முக்கிய அம்சங்கள்:

- கடலோர மாநிலங்களால் நிறுவப்பட்ட 'மாநில கடல்சார் வாரியங்களுக்கு' முறையான அங்கீகாரம் வழங்குதல்.
- 'கடல்சார் மாநில மேம்பாட்டுக் குழுவிற்கு' சட்ட ரீதியான அந்தஸ்து வழங்குதல்
- சர்ச்சைகளைத் தீர்ப்பதற்காக 'சர்ச்சைத் தீர்வுக் குழுக்களை' அமைப்பதற்கான ஏற்பாடு செய்தல்

125. வணிகக் கப்பல் சட்டம், 2025

- அறிமுகம்: வணிகக் கப்பல் சட்டம், 1958-ஐத் திருத்துவதற்காக.

நிறைவேற்றப்பட்ட நாள்

- 8 ஆகஸ்ட், 2025 – குடியரசுத் தலைவரின் ஒப்புதல்
- 7 ஆகஸ்ட், 2025 – மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டது.
- 20 ஆகஸ்ட், 2025 – மக்களவையால் நிறைவேற்றப்பட்டது.
- **முக்கிய விதிகள்**
    - ✓ தேசிய கப்பல் வாரியம் (NSB) மற்றும் கடற்பணியாளர்களுக்கான தேர்வு வாரிய அறக்கட்டளை (BES Trust) ஆகியவற்றை நிறுவுவதற்கான ஏற்பாடு
    - ✓ கடல்சார் நிர்வாகத்தின் தலைமை இயக்குநரை நியமிப்பதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்குதல்
    - ✓ இந்தியாவின் கடல்சார் சட்டக் கட்டமைப்பை நவீனமயமாக்குதல்

126. இந்திய செமி-கண்டக்டர் மிஷன் (ISM): 4 புதிய திட்டங்கள்

- மத்திய அமைச்சரவை அண்மையில் செமிகண்டக்டர் உற்பத்தி சூழலை மேம்படுத்த நான்கு புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

திட்டங்களின் விவரங்கள்

- SicSem 3D Glass Solutions : ஒடிசா
- ASIP Technologies : உத்திரப்பிரதேசம்
- CDIL (Continental Device India) பஞ்சாப்
- இந்திய குறைக்கடத்தித் திட்டம்: 10 அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள்

127. இந்திய செமிகண்டக்டர் மிஷன்

- **தொடக்க ஒப்புதல்:** இது டிசம்பர் 2021 இல், மொத்தம் ₹ 75,000 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் அங்கீகரிக்கப்பட்டது.
- **மத்திய அமைச்சகம்:** இந்தத் திட்டம் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) கீழ் செயல்படுகிறது.

- **முக்கிய நோக்கம்:** மின்னணு சாதனங்கள் தயாரிப்பிற்குத் தேவையான முக்கியமான செமிகண்டக்டர் சிப்கள் (Chips) இறக்குமதி செய்யப்படுவதைக் குறைத்து, இந்தியாவின் சுயசார்பை மேம்படுத்துவதே இதன் முதன்மையான நோக்கமாகும்.

128. டாட்டோ-II (Tato-II) நீர்மின் திட்டம்

- **அறிமுகம்:** அருணாச்சல பிரதேசத்தின் ஷி-யோமி (Shi-Yomi) மாவட்டத்தில் இந்த மின் திட்டத்தை அமைப்பதற்காக ₹846.2 கோடி முதலீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- **திட்ட காலம்:** இத்திட்டத்தின் காலக்கெடு 6 ஆண்டுகளாகும்.
- **மின் உற்பத்தி திறன்:** இதன் மொத்த உற்பத்தி திறன் 700 மெகாவாட். இது தலா 700 மெகாவாட் திறன் கொண்ட 4 அலகுகளாக (4 x 175 MW) அமைக்கப்படும்.
- **மேம்பாடு**: இத்திட்டம் வடகிழக்கு மின்சார சக்தி கழகம் (NEEPCO) மற்றும் அருணாச்சல பிரதேச அரசு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் (Joint Venture) செயல்படுத்தப்பட உள்ளது

129. 130-வது அரசியலமைப்புத் திருத்த மசோதா, 2025

- **அறிமுகம்:** இந்த மசோதா ஆகஸ்ட் 20 அன்று மத்திய உள்துறை அமைச்சரால் மக்களவையில் (Lok Sabha) தாக்கல் செய்யப்பட்டது.
- **நோக்கம்:** பிரதமர், முதலமைச்சர் அல்லது எந்தவொரு அமைச்சரும் தொடர்ந்து 30 நாட்கள் காவலில் (Custody) இருக்கும் பட்சத்தில், அவர்களை பதவியிலிருந்து நீக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **தற்போதைய நிலை:** நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பிறகு, இந்த மசோதா தற்போது கூட்டு நாடாளுமன்றக் குழுவின் (Joint Parliamentary Committee - JPC) பரிசீலனைக்கு மாற்றப்பட்டுள்ளது.

130. ஆதி கர்மயோகி பிரச்சாரம்

- **அறிமுகம்:** இந்தப் பிரச்சாரம் ஆகஸ்ட் 9-ஆம் தேதி (சர்வதேச பழங்குடியினர் தினத்தை முன்னிட்டு) மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** கிராமம் மற்றும் சமூக மட்டத்தில் பொறுப்பான மற்றும் மக்களை மையமாகக் கொண்ட ஆளுமையை (People-centric governance) மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- **இலக்கு:** பழங்குடியினர் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களில் 20 லட்சம் தலைமைத்துவ பணியாளர்களை (Leadership personnel) உருவாக்குவது மற்றும் ஒருங்கிணைப்பது.
- **செயல்யுக்தி**: "கிராம தொலைநோக்கு 2030" (Village Vision 2030) ஆவணத்தை தயாரித்தல் மற்றும் அதற்கான முறையான வளர்ச்சிப் பணித் திட்டங்களை உருவாக்குதல்.

131. இந்தியாவின் முதல் முழு சூரிய சக்தி சட்டப்பேரவை

- **அறிமுகம்:** ஆகஸ்ட் 4 அன்று, டெல்லி சட்டப்பேரவை முழுக்க முழுக்க சூரிய சக்தியால் இயங்கும் இந்தியாவின் முதல் சட்டப்பேரவை என்ற பெருமையைப் பெற்றது.
- **சாதனை:** சட்டப்பேரவை வளாகத்தின் கூரையில் 500 கிலோவாட் (மறு) திறன் கொண்ட சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது.
- **இதர தகவல்கள்:** இத்துடன், டெல்லி சட்டப்பேரவை காகிதமில்லா நிர்வாகத்தை நோக்கிச் செல்லும் வகையில் தேசிய இ-விதான் செயலியையும் (NeVA) அறிமுகப்படுத்தியுள்ளது.

132. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டம், 2025

அறிமுகம்: 1957-ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக இது கொண்டுவரப்பட்டது.

முக்கிய தேதிகள்:

- மக்களவையில் நிறைவேற்றம்: ஆகஸ்ட் 12, 2025
- மாநிலங்களவையில் நிறைவேற்றம்: ஆகஸ்ட் 19, 2025
- குடியரசுத் தலைவர் ஒப்புதல்: ஆகஸ்ட் 27, 2025

நோக்கம்:

- நிலையான சுரங்கத் தொழில் (Sustainable Mining), கழிவில்லா நடைமுறைகள் (Zero-waste practices) ஆகியவற்றை ஊக்குவிப்பதும், தேசிய (முக்கியமான) கனிம மிஷனின் (NCMM) இலக்குகளை முன்னெடுப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

முக்கிய அம்சங்கள்:

- **பெயர் மாற்றம்:** தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை (NMET), இனி தேசிய கனிம ஆய்வு மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளை (NMEDT) என அழைக்கப்படும்.
- **குத்தகை விரிவாக்கம்:** ஆழமான பகுதிகளில் உள்ள கனிமங்களை (Deep-seated minerals) எடுப்பதற்காக, சுரங்கக் குத்தகை பரப்பளவை ஒருமுறை மட்டும் 10% வரை நீட்டிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- **சிறப்புக் கவனம்:** நாட்டின் தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக 24 முக்கியமான கனிமங்கள் (Critical Minerals) மீது இந்தச் சட்டம் சிறப்புக் கவனம் செலுத்துகிறது.

133. மின்சார வாகனங்கள் (EV) குறித்த அறிக்கை

- **வெளியிடப்பட்ட தேதி:** 4 ஆகஸ்ட், 2025
- **வெளியிட்ட அமைப்பு:** நிதி ஆயோக் (NITI Aayog)
- **அறிக்கையின் தலைப்பு**: "200 பில்லியன் டாலர் வாய்ப்பைத் திறத்தல்: இந்தியாவில் மின்சார வாகனங்கள்" (Unlocking a $200 Billion Opportunity: Electric Vehicles in India)
- **முக்கிய அம்சம்:** இந்த அறிக்கையுடன் இந்திய மின்சார நகர்வு குறியீடு (IEMI - India Electric Mobility Index) ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மாநிலங்களின் EV தழுவலைக் கண்காணிக்க உதவும்.

134. பிரதமர் நரேந்திர மோடியின் ஜப்பான் பயணம்

- **பயணக் காலம்:** 29-30 ஆகஸ்ட், 2025
- **நோக்கம்** : 5-வது இந்தியா - ஜப்பான் ஆண்டு உச்சிமாநாட்டில் பங்கேற்பது.

முக்கிய முடிவுகள்:

- **இந்தியா - ஜப்பான் கூட்டு தொலைநோக்கு 2035** (Joint Vision 2035) ஆவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- **விண்வெளி ஆய்வில் சந்திரயான்-5** (Chandrayaan-5) திட்டத்திற்காக இரு நாடுகளும் இணைந்து செயல்பட ஒப்புதல் அளித்துள்ளன.
- பயணத்தின் போது பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜப்பானின் பாரம்பரிய "தாருமா பொம்மை" (Daruma doll) பரிசாக வழங்கப்பட்டது.

135. இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்கா 50% வரி விதிப்பு

- **அறிமுகம்:** ஆகஸ்ட் 2025-இல், இந்தியா ரஷ்யாவுடன் தொடர்ந்து மேற்கொண்டு வரும் எரிபொருள் (எண்ணெய்) வர்த்தகத்திற்குப் பதிலடியாக, அமெரிக்கா பல முக்கிய இந்தியப் பொருட்கள் மீது 50% இறக்குமதி வரி விதித்தது.
- **காரணம்:** இதனால் பாதிக்கப்பட்ட துறைகள்: ஜவுளித் துறை, ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள். வேதிப்பொருட்கள், தோல் பொருட்கள், கடல் உணவுகள்.

136. PM ஸ்வாநிதி திட்ட மறுசீரமைப்பு (Reorganisation of PM SVANidhi Scheme)

- **அறிமுகம்:** PM ஸ்வாநிதி திட்டத்தை மறுசீரமைக்க மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.
- **நோக்கம்:** இதன் மூலம் சுமார் 7.5 கோடி தெருக்கடை வியாபாரிகள் (தள்ளுவண்டி மற்றும் நடைபாதை வியாபாரிகள்) பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- **கால நீட்டிப்பு:** இத்திட்டம் டிசம்பர் 3, 2024 முதல் மார்ச் 3, 2030 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- **புதிய கடன் விதிமுறைகள்**: மறுசீரமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கடன் வரம்புகள் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளன.

முதல் தவணை	-	₹ 10,000 - ₹ 15,000
இரண்டாம் தவணை	-	₹ 20,000 - ₹ 25,000
மூன்றாம் தவணை	-	₹ 50,000 - ₹ 50,000

PM SVANidhi திட்டம்

- ✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் 2020 ஜூன் 1 அன்று தொடங்கப்பட்டது.
- ✓ **நோக்கம்:** தெருவோர வியாபாரிகள் மற்றும் நடைபாதை விற்பனையாளர்களுக்கு, பிணையம் ஏதுமின்றி கடன்களை வழங்குதல்.
- ✓ **வட்டி மானியம்:** ஆண்டுக்கு 7%.
- ✓ டிஜிட்டல் இணைப்பு வசதிக்கான, இந்தியாவின் முதலாவது "சொத்து மதிப்பீட்டு கட்டமைப்பு".

137. சூர்யா ட்ரோனத்தான் 2025

- **அறிமுகம்:** இது இந்திய ராணுவத்தின் சூர்யா கமாண்ட் மற்றும் இந்திய ட்ரோன் கூட்டமைப்பு இணைந்து நடத்திய ஒரு பிரம்மாண்டமான ட்ரோன் போட்டியாகும்.
- **நிகழ்வு நடைபெற்ற காலம்:** ஆகஸ்ட் 10 முதல் 24 வரை, 2025.
- **நடைபெற்ற இடம்:** இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஸ்பிதி பள்ளத்தாக்கு
- **நோக்கம்:** உள்நாட்டிலேயே ட்ரோன் தொழில்நுட்பத்தை உருவாக்குவதை ஊக்குவிப்பதும், பாதுகாப்புத் துறையில் சுயசார்பு அடைவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

138. ரஷ்யாவின் வெனிரா-டி விண்கலத் திட்டம்

- **அறிமுகம்:** ஆகஸ்ட் 2025-இல், வெள்ளி (Venus) கிரகத்தை ஆய்வு செய்வதற்கான வெனிரா-டி திட்டத்தை ரஷ்யா அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- **ஏவுதல் காலம்:** இந்த விண்கலம் 2034 மற்றும் 2036-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- **திட்டத்தின் கூறுகள்**: இத்திட்டம் லேண்டர் (Lander), ஆர்பிட்டர் (Orbiter), பலூன் ஆய்வுக்கருவி (Balloon probe) ஆகிய மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது.
- **நோக்கம்:** வெள்ளிக் கிரகத்தின் வளிமண்டலம், அதன் மேற்பரப்பு மற்றும் காலநிலை அமைப்புகள் குறித்து விரிவான புரிதலைப் பெறுவதே இத்திட்டத்தின் முக்கிய இலக்காகும்.

139. நாசாவின் "சூர்யா" AI மாடல்

- **அறிமுகம்:** சூரியனை ஆய்வு செய்வதற்காக "சூர்யா" என்று பெயரிடப்பட்ட மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியை நாசா அறிமுகப்படுத்தியுள்ளது.
- **கூட்டு முயற்சி**: இந்த அதீத திறன் கொண்ட AI மாடல் நாசா மற்றும் ஐபிஎம் (IBM) ஆகிய நிறுவனங்களால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- **நோக்கம்:** சூரியக் கதிர்கள் மற்றும் சூரிய வெடிப்புகளை மிக முன் கூட்டியே மற்றும் துல்லியமாக கணிப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

140. உலகின் சக்திவாய்ந்த "ஸ்டார்ஷிப்" ராக்கெட்

- **அறிமுகம்:** ஆகஸ்ட் 2025-இல், எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ்-எக்ஸ் (SpaceX) நிறுவனம் தனது "ஸ்டார்ஷிப்" ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- **முக்கியத்துவம்:** இது உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சக்திவாய்ந்த ராக்கெட் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- **ராக்கெட்டின் இரண்டு பகுதிகள்:**
  - மேல் பகுதி: ஸ்டார்ஷிப் விண்கலம்
  - கீழ் பகுதி: சூப்பர் ஹெவி பூஸ்டர்
  - ராக்கெட்டின் உயரம்: இந்த முழு ராக்கெட்டின் உயரம் 403 அடி ஆகும்.

141. யுரேனஸின் 29-வது நிலவை நாசா கண்டுபிடித்தது

- **அறிமுகம்:** ஆகஸ்ட் 2025-இல், ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி மூலம் யுரேனஸ் கோளின் 29-வது துணைக்கோளைக் கண்டுபிடித்துள்ளதாக நாசா அறிவித்தது.
- **பெயர்:** இந்த புதிய நிலவிற்கு தற்காலிகமாக S/2025 U1 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

142. ஐஎன்எஸ் உதயகிரி மற்றும் ஐஎன்எஸ் ஹிமகிரி/கடற்படையில் சேர்ப்பு (Commissioning)

- **தேதி:** ஆகஸ்ட் 26, 2025
- **நடைபெற்ற இடம்:** விசாகப்பட்டினம் கடற்படைத் தளம்
- **சிறப்பு விருந்தினர்:** மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள்
- **கப்பல் கட்டப்பட்ட விவரங்கள்:**
  - ஐஎன்எஸ் உதயகிரி - மெசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (MDL), மும்பை
  - ஐஎன்எஸ் ஹிமகிரி - கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் இன்ஜினியர்ஸ் (GRSE), கொல்கத்தா

143. ஹோப் மிஷன்

- **அறிமுகம்:** HOPE (Himalayan Outpost for Planetary Exploration) என்பது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ நடத்திய ஒரு "அனலாக்" விண்வெளி ஆய்வுத் திட்டமாகும்.
- **நடைபெற்ற இடம்:** லடாக்கில் உள்ள சோ கார் பள்ளத்தாக்கு (Tso Kar Valley).
- **காலம்:** ஆகஸ்ட் 2025.
- **நோக்கம்:** எதிர்கால நிலவு (Moon) மற்றும் செவ்வாய் (Mars) கிரகப் பயணங்களுக்காக மனிதர்களின் தயார் நிலை மற்றும் விண்வெளி தொழில் நுட்பங்களைச் சோதிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

144. தர்த்தி ஆபா மக்கள் பங்கேற்பு பிரச்சாரம்

- **அறிமுகம்:** இந்தப் பிரச்சாரம் குறித்த ஆலோசனைகள் மற்றும் விவாதங்கள் மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் 2025 ஜூன் 15 முதல் 30 வரை நடத்தப்பட உள்ளன.
- **நோக்கம்:** பழங்குடியின சமூகங்களுக்குத் தேவையான அத்தியாவசிய அரசு சேவைகள் மற்றும் சலுகைகள் அவர்களைச் சென்றடைவதை உறுதி செய்தல்.
- **முக்கியத்துவம்:** இது நாட்டின் மிகப்பெரிய பழங்குடியின மேம்பாட்டுத் திட்டமாகக் கருதப்படுகிறது.
- **பிரச்சாரச் செயல்யுக்தி:**
  - மக்களைத் தேடி அரசு: கிராம அளவில் முகாம்களை அமைப்பதன் மூலம் அரசு சேவைகளை மக்களின் இருப்பிடத்திற்கே கொண்டு செல்லுதல்.
  - கூட்டுப் பங்களிப்பு: பஞ்சாயத்து அமைப்புகள், பழங்குடியினத் தலைவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றின் தீவிர பங்கேற்புடன் இத்திட்டத்தைச் செயல்படுத்துதல்.

145. ஆகாங்க்ஷி DMF திட்டம்

- **அறிமுகம்:** இத்திட்டம் குறித்த ஆலோசனைகள் 2025 ஜூலை மாதம் தொடங்கின.
- **முன்னெடுப்பு:** இது இந்திய அரசின் மத்திய சுரங்க அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஒரு முக்கிய முயற்சியாகும்.
- **நோக்கம்:** மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியைப் பயன்படுத்தி, சுரங்கத் தொழிலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும், அந்தப் பகுதிகளை வளர்ச்சி அடையச் செய்வதும் இதன் நோக்கமாகும்.
- **முன்னுரிமை அளிக்கப்படும் துறைகள்**: சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீர் வளங்கள், உள்கட்டமைப்பு, திறன் மேம்பாடு.

146. SPREE 2025 திட்டத்தின் தொடக்கம்

- **அறிமுகம்:** இத்திட்டம் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தால் (ESIC) தொடங்கப்பட்ட ஒரு சிறப்பு விவாத மற்றும் பதிவு இயக்கமாகும்.
- **செயல்பாட்டு காலம்:** இது ஜூலை 1 முதல் டிசம்பர் 31, 2025 வரை அமலில் இருக்கும்.
- **நோக்கம்:** இதுவரை பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களை SPREE திட்டத்தின் கீழ் கொண்டு வந்து பதிவு செய்வதை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- **முக்கிய அம்சங்கள்:** இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் பணியாளர்களுக்கு மருத்துவச் சிகிச்சை மற்றும் ரொக்கப் பலன்கள் போன்ற ESIC சலுகைகள் உடனடியாகக் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

147. தேசிய கூட்டுறவுக் கொள்கை 2025 வெளியீடு

- **வெளியிடப்பட்ட தேதி:** ஜூலை 24, 2025
- **வெளியிட்டவர்:** மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.
- **நோக்கம்:** "கூட்டுறவு மூலம் செழிப்பு" என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, இந்தியக் கூட்டுறவுத் துறையை நவீனப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல். கூட்டுறவுச் சங்கங்களை அதிக வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், தொழில்நுட்பம் சார்ந்ததாகவும், தொழில்முறை சார்ந்ததாகவும் மாற்றுவதே இதன் இலக்காகும்.
- **முக்கிய முயற்சிகள்:** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை (PACS) முழுமையாகக் கணினி மயமாக்குவது இதில் அடங்கும்.

148. யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் "மராட்டிய இராணுவ நிலப்பரப்பு"

- **அறிமுகம்:** ஜூலை 2025-இல், இந்தியாவின் மராட்டிய இராணுவ நிலப்பரப்பு யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது.
- **முடிவு எடுக்கப்பட்ட இடம்:** பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழுவின் 47-வது அமர்வு கூட்டத்தில் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவு எடுக்கப்பட்டது.
- **தற்போதைய நிலை:** இப்புதிய சேர்க்கையுடன், இந்தியாவில் உள்ள மொத்த யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளங்களின் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது.

149. மராட்டிய இராணுவ நிலப்பரப்பு

- **காலம்:** இவை 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மராட்டிய ஆட்சியாளர்களால் கட்டப்பட்டன.
- **முக்கியக் கோட்டைகள்:** இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிலப்பரப்பில் மொத்தம் 12 முக்கிய கோட்டைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் 11 கோட்டைகள் மகாராஷ்டிராவிலும், 1 கோட்டை தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளன.
- **மகாராஷ்டிராவில் உள்ள கோட்டைகள்:** சல்ஹெர், சிவனேரி, லோஹகாட், கந்தேரி, ராய்காட், ராஜ்காட், பிரதாப்காட், சுவர்ணதுர்க், பன்ஹாலா, விஜய்துர்க், சிந்துதுர்க்.
- **தமிழ்நாட்டில் உள்ள கோட்டை:** செஞ்சிக் கோட்டை

150. இந்தியாவின் முதல் பழங்குடியின மரபணு வரிசைமுறைத் திட்டம் (Gujarat)

- **அறிமுகம்:** 2025 ஜூலை மாதம், குஜராத் மாநிலத்தில் இந்தியாவின் முதல் பழங்குடியின மரபணு வரிசைமுறைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.
- **நோக்கம்:** பழங்குடியின மக்களிடையே காணப்படும் மரபணு சார்ந்த உடல்நல அபாயங்களைக் கண்டறிந்து, அவர்களின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப உரிய சுகாதாரச் சேவைகளை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- **இலக்கு:** குஜராத்தின் 17 மாவட்டங்களைச் சேர்ந்த 2,000 பழங்குடியின தனிநபர்களின் மரபணுக்களை வரிசைப்படுத்துவதன் மூலம் ஒரு "குறிப்பு மரபணு தரவுத்தளத்தை" (Reference Genome Database) உருவாக்குதல்.
- **செயல்படுத்தும் அமைப்பு:** இத்திட்டம் குஜராத் பயோடெக்னாலஜி ஆராய்ச்சி மையத்தால் (GBRC) செயல்படுத்தப்படுகிறது.

151. கேலோ பாரத் கொள்கை 2025

- **தொடக்கம்:** இந்தக் கொள்கை ஜூலை 1, 2025 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- **நோக்கம்:** விளையாட்டை அடிமட்ட அளவில் ஊக்குவிப்பதன் மூலம், இந்தியாவை உலகளாவிய விளையாட்டு வல்லரசாக மாற்றுதல்.
- **இலக்கு:** 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான உரிமையைப் பெறுவது மற்றும் அதில் சிறந்து விளங்குவது இதன் முக்கிய இலக்காகும்.
- **முக்கிய அம்சங்கள்**:
  - கொள்கை மாற்றம்: 24 ஆண்டுகளுக்குப் பிறகு, தேசிய விளையாட்டுக் கொள்கை 2001-க்கு மாற்றாக இந்தப் புதிய கொள்கை கொண்டு வரப்பட்டுள்ளது.
  - நிர்வாகச் சீர்திருத்தம்: விளையாட்டுத் துறை நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்ய ஒரு வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குதல்.
  - சிறு வயதிலேயே திறமைகளைக் கண்டறிதல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சிகளை வழங்குதல்.

152. பாரம்பரிய அறிவுசார் எண்மிய நூலகம் (TKDL)

- **அறிமுகம்:** பாரம்பரிய அறிவுசார் எண்மிய நூலகத்தை (TKDL) தொடங்கிய உலகின் முதல் நாடு இந்தியாவாகும்.
- **நோக்கம்:** இந்தியாவின் பாரம்பரிய அறிவை, உயிரியல் சார்ந்த அறிவுத் திருட்டு மற்றும் தவறான காப்புரிமைகளிலிருந்து பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.
- **முக்கியத்துவம்:** ஆயுர்வேதம், யுனானி, சித்தா மற்றும் சோவா-ரிக்.்பா போன்ற இந்திய மருத்துவ முறைகள் தொடர்பான அறிவின் எண்மியத் தொகுப்பாக இது விளங்குகிறது.
- **இணைப்பு துறை**: ஆயுஷ் அமைச்சகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR) ஆகியவற்றின் கூட்டு முயற்சியிலான ஒரு திட்டமாகும்.

153. வாகனத் துறைக்கான இலக்குத் திட்டம் 2047

- **அறிமுகம்:** 2047-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை உலகளாவிய வாகனத் துறையில் முன்னணியாளராக மாற்றுவதற்காக இந்திய அரசால் இந்த "ஆட்டோமோட்டிவ் மிஷன் பிளான் 2047" தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** இந்திய வாகனத் துறையை உலக அளவில் போட்டித்தன்மை கொண்டதாக உருவாக்குதல்.

- **துணைக் குழுக்கள்**: 2030, 2037 மற்றும் 2047 ஆகிய ஆண்டுகளுக்கான இலக்குகளை அடைவதற்காக, அரசு, தொழில் துறை மற்றும் கல்வித் துறை ஆகியவற்றைச் சார்ந்த ஏழு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

154. சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு 2026

- **அறிவிப்பு:** 2026-ஆம் ஆண்டை "சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு" என ஐக்கிய நாடுகள் சபை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- **அமைப்பு:** இந்த அறிவிப்பை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.
- **நோக்கம்:** உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தில் பெண் விவசாயிகளின் பங்களிப்பை அங்கீகரித்தல், பொருளாதார மீட்சி மற்றும் விவசாயத்தில் பெண்களின் முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துரைத்தல்.

155. 17-வது பிரிக்ஸ் உச்சிமாநாடு

- **நிகழ்வு:** இந்த உச்சிமாநாடு 2025 ஜூலை 6 - 7 ஆகிய தேதிகளில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்றது.
- **மையக்கருத்து**: "அதிக உள்ளடக்கிய மற்றும் நிலையான நிர்வாகத்திற்காக குளோபல் சவுத் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்"
- **முடிவு**: இம்மாநாட்டின் இறுதியில் "ரியோ டி ஜெனிரோ பிரகடனம்" ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- **மற்றொரு முக்கியத் தகவல்:** அடுத்ததாக, 18-வது பிரிக்ஸ் உச்சிமாநாடு 2026-ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ளது.

156. இந்தியா - பிரிட்டன் விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம்

- **கையெழுத்திடப்பட்ட தேதி:** ஜூலை 24, 2025.

- **நோக்கம்:** 2030-ஆம் ஆண்டிற்குள் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்குதல்.

ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்:

- **டிஜிட்டல் பரிவர்த்தனை:** புதிய மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் பணப்பரிமாற்ற முறைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துதல்.
- **வரி விலக்கு:** இந்தியாவின் வர்த்தகக் கூடையில் உள்ள கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்களையும் உள்ளடக்கி, 99%-க்கும் அதிகமான வரி வரம்புகளை நீக்குதல்.
- **புவிசார் குறியீடு**: இந்திய புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளுக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்குதல்.
- **சமூகப் பாதுகாப்பு வரி விலக்கு:** பிரிட்டனில் பணியாற்றும் இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது நிறுவனங்களுக்கு, அங்குள்ள சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு விலக்கு அளித்தல்.

157. இந்திய நகரங்கள் குறித்த உலக வங்கியின் அறிக்கை

- **வெளியிடப்பட்ட தேதி:** ஜூலை 22, 2025.
- **அறிக்கையின் தலைப்பு:** இந்தியாவில் மீள்திறன் கொண்ட மற்றும் செழிப்பான நகரங்களை நோக்குதல்
- **முக்கிய முடிவு:** 2050-ஆம் ஆண்டிற்குள் இந்திய நகரங்களை காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப மீள்திறன் கொண்டவையாக மாற்ற $2.4 ட்ரில்லியன் முதலீடு தேவைப்படுவதாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

158. இந்தியாவின் முதல் "மேக் இன் இந்தியா" பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி நிலையம்

- **தொடக்கம்:** மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் அவர்களால் இந்த நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது.
- **அமைந்துள்ள இடம்:** குஜராத்தில் உள்ள தீன்தயாள் துறைமுகம்
- **உற்பத்தித் திறன்:** ஆரம்பகட்டத்தில் 1 மெகாவாட் திறன் கொண்டது.
- **இலக்கு**: 2026-ஆம் ஆண்டிற்குள் இதன் உற்பத்தித் திறனை 10 மெகாவாட்டாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- **நோக்கம்:** துறைமுக செயல்பாடுகளைப் பசுமையாக்குவதும், கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

159. நிஸ்தார் – இந்தியாவின் முதல் உள்நாட்டுத் தயாரிப்பு நீருக்கடியில் மூழ்கிப் பணிபுரியும் ஆதரவுக் கப்பல்

- **விவரம்:** 18 ஜூலை 2025 அன்று இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
- **கட்டுமானம்:** ஹிந்துஸ்தான் ஷிப்யார்ட் லிமிடெட் (HSL) நிறுவனத்தால் கட்டப்பட்டது.
- **முக்கிய சிறப்பம்சங்கள்:** தொலைவிலிருந்து இயக்கப்படும் வாகனம் (ROV), நீருக்கடியில் மூழ்கியோருக்கான அழுத்த அறை (Diving Compression Chamber) மற்றும் தானியங்கி உயர் அழுத்த உயிர் காக்கும் படகு (Automated Hyperbaric Lifeboat) போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது.
- **நோக்கம்:** அவசர காலங்களில் கடற்படையை விரைவானதாகவும், திறமையானதாகவும் மற்றும் தற்சார்பு கொண்டதாகவும் மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

160. ஐஎன்எஸ் தமல்: கடற்படையில் இணைப்பு

- **அறிமுகம்:** இப்போர்க்கப்பல் 2025 ஜூலை 1 அன்று அதிகாரப்பூர்வமாக இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
- **நடைபெற்ற இடம்:** ரஷ்யாவின் கலினின்கிராட் நகரில் உள்ள யந்தர் கப்பல் கட்டும் தளம்
- **முக்கிய சிறப்பம்சங்கள்:**
  - இது "தல்வார்" ரகத்தைச் சேர்ந்த ஒரு அதிநவீன ஸ்டீல்த் போர்க் கப்பலாகும், ரஷ்யாவால் இந்தியாவிற்காகக் கட்டப்பட்ட இந்த ரகத்தைச் சேர்ந்த 8-வது கப்பல் இதுவாகும்.
  - இக்கப்பலில் பிரம்மோஸ் ஏவுகணைகள் மற்றும் டார்பிடோ போன்ற ஏவுகணை அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன.
- **செயல்பாட்டுத் திறன்:** மணிக்கு 30 நாட்ஸ் வேகத்தில் மற்றும் சுமார் 3,000 கிலோமீட்டர் தூரம் வரை தொடர்ந்து பயணித்துச் செயல்படும் ஆற்றல் பெற்றது.

161. இந்தியாவின் முதல் உள்நாட்டு மலேரியா தடுப்பூசி: 'AdFalciVax'

- **உருவாக்கம்:** இது இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் புவனேஸ்வரில் உள்ள மண்டல மையத்தால் உருவாக்கப்பட்டது.
- **இலக்கு:** மலேரியாவை உண்டாக்கும் மிக ஆபத்தான ஒட்டுண்ணியான பிளாஸ்மோடியம் ∴பால்சிபாரம் வகை கிருமிக்கு எதிராகச் செயல்படும் வகையில் இது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- **நோக்கம்:** மலேரியா தொற்று ஏற்படுவதைத் தடுப்பதோடு, அதன் பரவலையும் கட்டுப்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும்.

162. சாக்சம் 3000

- **அறிமுகம்:** இது ஒரு அதிநவீன "டேட்டா சென்டர்" கருவியாகும். இது ஒரே நேரத்தில் சுவிட்ச் மற்றும் ரூட்டர் ஆகிய இரண்டு பணிகளையும் செய்யும் திறன் கொண்டது.
- **உருவாக்கம்:** இந்திய அரசின் தொலைத்தொடர்புத் துறையின் கீழ் இயங்கும் சி-டாட் (C-DOT) என்ற ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தால் இது உருவாக்கப்பட்டுள்ளது.
- **திறன்**: இது வினாடிக்கு 25.6 டெராபிட்கள் தரவுகளைக் கையாளும் திறன் கொண்டது.

163. இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில் பெட்டி சோதனை வெற்றி

- **சோதனை செய்யப்பட்ட தேதி:** ஜூலை 25, 2025.
- **நடைபெற்ற இடம்:** இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை.
- **வகை:** இது 1,200 குதிரைத்திறன் (1,200 HP) கொண்ட ஒரு முன்மாதிரி ஹைட்ரஜன் ரயில் பெட்டியாகும்.
- **முக்கியத்துவம்:** இந்தியாவின் பசுமைப் போக்குவரத்து மற்றும் நிலையான நகர்வு இலக்குகளை அடைவதில் இது ஒரு மிக முக்கியமான மைல் கல்லாகும்.

164. நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ராக்கெட் - ERASR

- **சோதனை:** அதிக தூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த ERASR, 2025 ஜூன் 23 முதல் ஜூலை 7 வரை ஐஎன்எஸ் கவரத்தி (INS Kavaratti) போர்க் கப்பலிலிருந்து வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது.
- **உருவாக்கம்:** இது இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) உருவாக்கப்பட்டது.
- **முக்கிய நோக்கம்:** எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து அவற்றைத் தகர்ப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- **தாக்கும் எல்லை**: இது குறைந்தபட்சம் 500 மீட்டர் முதல் அதிகபட்சம் 8.9 கிலோமீட்டர் தூரம் வரை உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டது.

165. கடல் மாசு கட்டுப்பாட்டுக் கப்பல் தொடக்கம்

- **அறிமுகம்:** இந்தியக் கடலோரக் காவல் படைக்காக 2025 ஜூலை 23 அன்று இந்தக் கப்பல் தொடங்கி வைக்கப்பட்டது.
- **கட்டுமானம்:** இது கோவா ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.
- **நோக்கம்:** இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்தில் (EEZ) ஏற்படும் எண்ணெய் கசிவுகளை (Oil Spills) கையாள்வதற்கும், கடல் மாசைக் கட்டுப்படுத்துவதற்குமான திறனை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- **மற்றொரு தகவல்:** இது இந்தியக் கடலோரக் காவல்படைக்காகத் தயாரிக்கப்பட்ட இரண்டு கடல் மாசு கட்டுப்பாட்டுக் கப்பல்களில் இறுதியானதாகும்.

166. பிரளய் ஏவுகணை: வெற்றிகரமான சோதனை

- **சோதனை:** 2025 ஜூலை 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் ஒடிசாவின் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தீவில் இருந்து "பிரளய்" ஏவுகணையின் இரண்டு அடுத்தடுத்த சோதனைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.
- **அறிமுகம்:** இது இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட (Indigenous) தரையிலிருந்து தரையைத் தாக்கக்கூடிய குறைந்த தூர பாலிஸ்டிக் ஏவுகணையாகும்.
- **தாக்கும் எல்லை**: இது 150 முதல் 500 கிலோமீட்டர் தூரம் வரை உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டது.
- **சுமை தாங்கும் திறன்**: இது 350 முதல் 700 கிலோகிராம் வரையிலான வெடிமருந்துகளைச் சுமந்து செல்லும் ஆற்றல் பெற்றது.

167. நவ்யா (NAVYA) திட்டத்தின் தொடக்கம்

- **தொடக்கம்:** இத்திட்டம் 2025 ஜூன் 24 அன்று மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் மற்றும் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவற்றால் இணைந்து தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** 16 முதல் 18 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு, வளர்ந்து வரும் துறைகளில் தொழில்முறைப் பயிற்சிகளை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக, ஆர்வமுள்ள மாவட்டங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மாவட்டங்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- **பயிற்சி வழங்கப்படும் துறைகள் (Sectors):** டிஜிட்டல் மார்க்கெட்டிங், சைபர் பாதுகாப்பு, ட்ரோன் அசெம்பிளி போன்ற பல நவீன தொழில்நுட்பங்கள்.

168. இந்தியாவின் முதல் வண்ணத்துப்பூச்சி சரணாலயம்:

- **அறிவிப்பு:** 2025 ஜூன் 18 அன்று, கேரளாவின் ஆரளம் சரணாலயம் இந்தியாவின் முதல் வண்ணத்துப்பூச்சி சரணாலயமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- **அமைந்துள்ள இடம்:** கண்ணூர் மாவட்டம், கேரளா.
- **முக்கியத்துவம்:** முழுமையாக வண்ணத்துப்பூச்சிகளுக்காகவே ஒதுக்கப்பட்ட இந்தியாவின் முதல் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி இதுவாகும்.
- **பரப்பளவு:** இது சுமார் 55 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

169. இந்தியாவின் கடற்கரை மற்றும் தீவுகளின் புதிய கணக்கீடு

- **வெளியிட்டவர்:** மத்திய உள்துறை அமைச்சகம், ஜூன் 2025.
- புதிய கணக்கீட்டின்படி, இந்தியாவின் கடற்கரை நீளம் 7,516.6 கி.மீ-லிருந்து 11098.8 கி.மீ-ஆக அதிகரித்துள்ளது. மேலும், 1,389 புதிய தீவுகள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- புவிசார் வரைபடமாக்கல், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் ட்ரோன் ஆய்வுகள் போன்ற அதிநவீன அளவீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தியதே இந்த அதிகரிப்புக்குக் காரணமாகும்.

170. 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027: அதிகாரப்பூர்வ அறிவிப்பு

- **அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி:** ஜூன் 16, 2025.
- **கணக்கெடுப்பு நிலைகள்:** இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்பட உள்ளது.
- **முதல் கட்டம்** (அக்டோபர் 1, 2026): ஜம்மு-காஷ்மீர், லடாக், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் பனிப்பொழிவு மிகுந்த மற்றும் தொலைதூரப் பகுதிகளில் தொடங்கும்.
- **இரண்டாம் கட்டம்** (மார்ச் 1, 2027): நாட்டின் பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒட்டுமொத்தமாக நடத்தப்படும்.
- **முக்கிய சிறப்பம்சங்கள்:**
  - டிஜிட்டல் கணக்கெடுப்பு: இது நாட்டின் முதல் டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆகும். தரவுகள் மொபைல் செயலிகள் மற்றும் இணையதளம் மூலம் சேகரிக்கப்படும்.
  - சாதி வாரி கணக்கெடுப்பு: சுதந்திரத்திற்குப் பிறகு முதன்முறையாக, இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதி வாரி கணக்கெடுப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

171. பாரத்ஜென் (BharatGen): இந்தியாவின் முதல் VI (AI) அடிப்படையிலான LLM

- **தொடக்கம்:** மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களால் ஜூன் 2-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது.
- **அறிமுகம்:** இது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான பல்நோக்கு பெரிய மொழி மாதிரி (Multimodal Large Language Model) ஆகும். இது 22 இந்திய மொழிகளில் செயல்படும் திறன் கொண்டது.

- **உருவாக்கம்:** இது IIT மும்பையின் (IIT Bombay) "TIH பவுண்டேஷன் ∴பார் IoT மற்றும் IoE" அமைப்பால் செயல்படுத்தப்படுகிறது. இது மத்திய அரசின் தேசிய இடைநிலை சைபர்-பிசிகல் சிஸ்டம்ஸ் மிஷன் (NM-ICPS) கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

172. இந்தியாவின் முதல் விலங்குகள் மேம்பாலப் பாதை: மும்பை - டெல்லி விரைவுச்சாலை

- **அறிமுகம்:** இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) இந்தியாவின் முதல் விலங்குகள் கடக்கும் மேம்பாலப் பாதை (Animal Overpass Corridor) கட்டப்பட்டு வருகிறது.
- **அமைந்துள்ள இடம்:** டெல்லி - மும்பை விரைவுச்சாலையில், ராஜஸ்தானில் உள்ள ரந்தம்பூர் புலிகள் காப்பகத்தின் (Ranthambore Tiger Reserve) தாங்கல் மண்டலத்திற்கு (Buffer Zone) அருகில் இது அமைந்துள்ளது.
- **நீளம்:** இந்தச் சிறப்புப் பாதை சுமார் 12 கிலோமீட்டர் நீளம் கொண்டது.
- **முக்கிய நோக்கம்:** மனித-வனவிலங்கு மோதல்களைக் (Human-Wildlife Conflict) குறைப்பதும், வனவிலங்குகளின் இயற்கையான வாழ்விடத்தைப் பாதிக்காமல் பராமரிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

173. இந்தியாவின் முதல் கேபிள்-ஸ்டேய்டு இரயில் பாலம்: அஞ்சி காட்

- **தொடக்கம்:** அஞ்சி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்த "அஞ்சி காட்" பாலத்தைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- **அமைந்துள்ள இடம்:** ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் ரியாசி (Reasi) மாவட்டம்.
- **முக்கியத்துவம்:** செனாப் இரயில் பாலத்திற்கு அடுத்தபடியாக, இது நாட்டின் இரண்டாவது மிக உயரமான இரயில் பாலம் ஆகும்.

174. இந்தியாவின் முதல் விவசாய ட்ரோன் உள்நாட்டுமயமாக்கல் மையம்

- **தொடக்கம்:** சென்னையில் கருடா ஏரோஸ்பேஸ் (Garuda Aerospace) நிறுவனத்தால் இந்த விவசாய ட்ரோன் உள்நாட்டுமயமாக்கல் மையம் தொடங்கப்பட்டது.
- **தேதி:** ஜூன் 14, 2025.
- **திறந்து வைத்தவர்:** மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் கமலேஷ் பாஸ்வான்.
- **நோக்கம்:** ட்ரோன் தொழில்நுட்பத்தில் இந்தியாவைத் தற்சார்பு (Self-reliant) நாடாக மாற்றுவதும், நாட்டின் ட்ரோன் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

175. இந்தியாவின் புதிய ராம்சர் தளங்கள்: கிச்சன் மற்றும் மேனார்

- **அறிவிப்பு:** உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு (ஜூன் 5), ராஜஸ்தான் மாநிலத்தின் கிச்சன் (Khichan) மற்றும் மேனார் (Menar) ஆகிய பகுதிகள் புதிய ராம்சர் தளங்களாக (சதுப்பு நிலங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.
- **கிச்சன் சதுப்பு நிலத் தளம்**: இது ராஜஸ்தானின் ∴பலோடி (Phalodi) மற்றும் ஜோத்பூர் (Jodhpur) மாவட்டங்களில் அமைந்துள்ளது. இது 150-க்கும் மேற்பட்ட பறவை இனங்களின் வாழ்விடமாக உள்ளது.
- **மேனார் சதுப்பு நிலத் தளம்:** இது ராஜஸ்தானின் உதய்ப்பூர் (Udaipur) மாவட்டத்தில் அமைந்துள்ளது. பறவைகளைப் பாதுகாப்பதில் ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது.

ராம்சார் தளங்கள்

- ✓ இவை, ராம்சார் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் பாதுகாக்கப்படும், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களாகும்.
- ✓ இந்த ஒப்பந்தம், 1971-ஆம் ஆண்டு ஈரானின் ராம்சார் நகரில் கையெழுத்திடப்பட்டது.
- ✓ **நோக்கம்:** சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதையும், அவற்றின் இயற்கை வளங்களை விவேகத்துடன் பயன்படுத்துவதையும் ஊக்குவிப்பதே ஆகும்.

176. பாலின நிதி ஒதுக்கீடு அறிவுசார் மைய இணையதளம்

- **தொடக்கம்:** இந்த இணையதளத்தை மத்திய அமைச்சர் அன்னபூர்ணா தேவி அவர்கள் 2025 ஜூன் 19 அன்று தொடங்கி வைத்தார்.
- **நோக்கம்:** பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதும், அரசுத் திட்டங்களில் பாலின ரீதியான நிதி ஒதுக்கீடு நடைமுறைகளை வலுப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

177. நேட்டோ உச்சிமாநாடு 2025

- **நடைபெற்ற இடம்:** நெதர்லாந்து நாட்டின் தி ஹேக் (The Hague) நகரம்.
- **தேதி:** ஜூன் 24 – 25, 2025.
- **முக்கிய முடிவு:** நேட்டோ உறுப்பு நாடுகள் அனைத்தும் வரும் 2035-ஆம் ஆண்டிற்குள், தங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 5 சதவீதத்தை பாதுகாப்புத் துறைக்காகச் செலவிட இலக்கு நிர்ணயித்துள்ளன.

178. ஐநா பாதுகாப்பு சபையின் புதிய நிரந்தரமற்ற உறுப்பினர்கள்

- **விவாதம்:** 2025 ஜூன் மாதம் நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபை (UNGA) தேர்தல்களில், பஹ்ரைன், கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, லாத்வியா மற்றும் லைபீரியா ஆகிய 5 நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டன.
- **பதவிக்காலம்:** இந்த நாடுகளின் இரண்டாண்டு பதவிக்காலம் 2026 ஜனவரி முதல் 2027 டிசம்பர் வரை இருக்கும்.
- **மற்றொரு தகவல்:** 2025-ஆம் ஆண்டிற்கான UNSC 1988 தலிபான் தடைகள் குழுவின் தலைவராக பாகிஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளது.

179. G7 உச்சிமாநாடு 2025

- **நடைபெற்ற இடம்:** கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் உள்ள கனனாஸ்கிஸ்
- **தேதி:** ஜூன் 15 – 17, 2025
- **பங்கேற்ற உறுப்பு நாடுகள்:** கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம் (UK), அமெரிக்கா (USA) மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) பிரதிநிதிகள்.
- **முக்கிய முடிவுகள்**:
  - ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையிலான மோதல் சூழலில், இஸ்ரேலுக்குத் தங்களது ஆதரவை G7 நாடுகள் உறுதி செய்தன.
  - சர்வதேச அளவில் சட்டவிரோதமாக நடைபெறும் குடியேறிகள் கடத்தலை (Migrant Smuggling) தடுப்பதற்கான கூட்டு உறுதிப்பாட்டை இந்நாடுகள் மேற்கொண்டன.

180. இந்தியாவின் "ஆபரேஷன் சிந்து"

- **தேதி:** ஜூன் 27, 2025
- **நோக்கம்:** ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நிலவிய மோதல் பகுதிகளிலிருந்து இந்தியக் குடிமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது இதன் முக்கிய நோக்கமாகும்.
- **முடிவு:** இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 4415 இந்தியக் குடிமக்கள் மீட்கப்பட்டனர். (ஈரானிலிருந்து: 3597 பேர், இஸ்ரேலிலிருந்து: 818 பேர்)

181. ஐநா பொருளாதார மற்றும் சமூக சபைக்கு இந்தியா தேர்வு (ECOSOC)

- **தேர்தல் தேதி:** ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் (UNGA) 2025 ஜூன் 4 அன்று இந்தியா உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- **பதவிக்காலம்:** இந்தியாவின் மூன்றாண்டு பதவிக்காலம் 2026 ஜனவரி 1 முதல் தொடங்கி 2028 டிசம்பர் 31 வரை நீடிக்கும்.

- ECOSOC என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு முக்கிய அங்கமாகும். உலகளாவிய பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்து கொள்கைகளை உருவாக்குதல் (Policy Making), ஒருங்கிணைத்தல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகியவற்றுக்கான முதன்மை அமைப்பாக இது செயல்படுகிறது.

182. ஜீரோ எ.ஃப்.ஐ.ஆர் (Zero FIR) முன்முயற்சி

- **அறிவிப்பு:** இந்தியக் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தின் கீழ், 2025 மே மாதம் புது தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களால் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- **நோக்கம்:** தேசிய சைபர் குற்றப் புகார்ப் பிரிவு (NCRP) இணையதளம் அல்லது 1930 என்ற உதவி எண் மூலம் பதிவு செய்யப்படும் நிதி மோசடிப் புகார்கள், தானாகவே முதல் தகவல் அறிக்கையாக (FIR) மாற்றப்படும்.
- **முக்கிய அம்சங்கள்:**
  - தானியங்கி மாற்றம்: இணையதளம் அல்லது உதவி எண் வழியாகப் பதிவு செய்யப்படும் சைபர் குற்றங்கள் "எழுத்துப்பூர்வ புகாராகக்" கருதப்பட்டு, தானாகவே ஈ-ஜீரோ எ.ஃப்.ஐ.ஆர் (e-Zero FIR) ஆக மாற்றப்படும்.
  - முதற்கட்டமாக 10 லட்ச ரூபாய்க்கும் அதிகமான நிதி மோசடி வழக்குகளில் இத்திட்டம் அதிக கவனம் செலுத்தும்.

183. ஆந்திரப் பிரதேசத்தில் இந்தியாவின் முதல் குவாண்டம் பள்ளத்தாக்கு

- **அறிமுகம்:** மே 2025-இல், ஆந்திரப் பிரதேச அரசு இந்தியாவின் முதல் 'குவாண்டம் பள்ளத்தாக்கு தொழில்நுட்பப் பூங்காவை' (Quantum Valley Tech Park) அறிவித்தது.
- **அமைவிடம்:** அமராவதி, ஆந்திரப் பிரதேசம்
- **நோக்கம்:** இந்தியாவில் ஒரு தற்சார்புடைய குவாண்டம் சூழலமைப்பை உருவாக்குதல்.
- **இலக்கு:** ஜனவரி 2026-க்குள் செயல்பாடுகளைத் தொடங்குதல்.

184. பஞ்சாயத்து மேம்பாட்டுக் குறியீடு 2.0

- **அறிமுகம்:** இத்திட்டம் 2025 மே மாதம் மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** கிராம ஊராட்சிகளின் (Gram Panchayats) செயல்பாடுகளை மதிப்பிடுவதும், உள்ளூர் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (LSDGs) ஏற்ப திட்டமிட அவர்களுக்கு உதவுவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.
- **முக்கிய அம்சங்கள்:**
  - மதிப்பீட்டிற்கான குறிகாட்டிகளின் (Indicators) எண்ணிக்கை 516-லிருந்து 147-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
  - இந்த புதிய குறியீட்டில் கவனம் என்பது எண்ணிக்கையிலிருந்து (Quantity) தரத்திற்கு (Quality) மாற்றப்பட்டுள்ளது.

185. தாப்தி வடிநிலப் பெருநீர் செறிவூட்டல் திட்டம் – மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா

- **அறிமுகம்:** தாப்தி வடிநிலப் பெருநீர் செறிவூட்டல் திட்டத்தை இணைந்து செயல்படுத்த, மத்தியப் பிரதேசம் மற்றும் மகாரா்ட்டிரா மாநில அரசுகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம்.
- **நோக்கம்:** இரு மாநிலங்களிலும் பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காக, ஆற்று நீர் வளங்களைச் செம்மையாகப் பயன்படுத்துதல்.
- **திட்ட மதிப்பு**: 19,244 கோடி ரூபாய்.

186. இந்தியாவின் முதல் பிரத்யேக கொள்கலன் மாற்றுத் துறைமுகம்

- **அறிமுகம்:** பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மே 2 அன்று விழிஞ்ஞம் சர்வதேசத் துறைமுகத்தைத் திறந்து வைத்தார்.
- **அமைந்துள்ள இடம்:** கேரள மாநிலம், திருவனந்தபுரம் அருகே இது அமைந்துள்ளது.
- **சிறப்பம்சங்கள்:** இது கொள்கலன்கள் (Containers) மற்றும் பல்நோக்கு சரக்குகளைக் கையாள்வதற்காக வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் ஆழ்கடல் மாற்றுத் துறைமுகம் ஆகும்.
- **முக்கியத்துவம்:** இத்துறைமுகம் வெளிநாட்டுத் துறைமுகங்களை (உதாரணமாக கொழும்பு, சிங்கப்பூர்) சார்ந்திருப்பதைக் குறைக்கவும், இந்தியாவின் கடல்சார் வணிகத்தை மேம்படுத்தவும் உதவும்.
- **திட்ட மதிப்பு:** சுமார் ₹ 8,900 கோடி.

187. இந்தியாவின் முதல் முழுமையான சூரிய சக்தியால் இயங்கும் மாவட்டம்

- **அறிமுகம்:** 2025 மே மாதம், டையூ (Diu) இந்தியாவின் முதல் முழுமையான சூரிய சக்தியால் இயங்கும் மாவட்டமாக உருவெடுத்தது.
- **அறிவிப்பு:** இத்தகவலை மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.
- **மின் உற்பத்தித் திறன்:** இந்த மாவட்டத்தின் மொத்த சூரிய மின் உற்பத்தித் திறன் 11.88 மெகாவாட் ஆகும்.
- **முக்கியத்துவம்:** இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் சுமார் 13,000 டன் கார்பன் உமிழ்வு குறைக்கப்படும்.

188. உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) முதியோர் நட்பு நகரங்கள் பட்டியலில் கோழிக்கோடு

- **அறிவிப்பு:** 2025 மே 2 அன்று, கேரளாவின் கோழிக்கோடு நகரம் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) "முதியோர் நட்பு நகரங்கள் மற்றும் சமூகங்களின் உலகளாவிய கூட்டமைப்பில்" சேர்க்கப்பட்டது.
- **முக்கியத்துவம்:** கொச்சிக்கு அடுத்தபடியாக இந்த சர்வதேசக் கூட்டமைப்பில் இணையும் இரண்டாவது இந்திய நகரம் கோழிக்கோடு ஆகும்.
- **சிறப்பம்சம்:** முதியோர்களின் நல்வாழ்வு, எளிதான அணுகல் மற்றும் சமூகத்தில் அவர்களை உள்ளடக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அந்த நகரம் மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளை இந்த அங்கீகாரம் கௌரவிக்கிறது.

189. இந்தியாவின் முதல் தனியார் ஹெலிகாப்டர் அசெம்பிளி லைன்

- **அறிவிப்பு:** 2025 மே மாதம், இந்தியாவின் முதலாவது தனியார் ஹெலிகாப்டர் அசெம்பிளி லைன் கர்நாடகாவில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- **அமைந்துள்ள இடம்:** கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டத்தில் உள்ள வேமகால்.

190. கவாச் 5.0′ அமலாக்க அறிவிப்பு

- **அறிவிப்பு:** 2025 மே மாதம் இந்திய இரயில்வே அமைச்சரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- **நோக்கம்:** இரயில் பயணத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவது இதன் முதன்மையான நோக்கமாகும்.
- **முக்கியத் தகவல்கள்:** "கவாச்" என்பது லக்னோவிலுள்ள RDSO அமைப்பால் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட ஒரு தானியங்கி இரயில் பாதுகாப்பு (ATP) அமைப்பாகும். இது இந்தியாவின் அதிகாரப்பூர்வ தேசிய ஏடிபி (ATP) அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

191. 46-வது ஏசியான் உச்சி மாநாடு 2025 (ASEAN)

- **தேதி:** 2025 மே 26-27
- **நடைபெற்ற இடம்:** கோலாலம்பூர், மலேசியா.
- **தலைமை:** மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம்.
- **மையக்கருத்து**: உள்ளடக்கம் மற்றும் ஸ்திரத்தன்மை.
- ASEAN **Full Form :** Association of South East Asian Nations
- **தோற்றம்:** 1967-ஆம் ஆண்டு பாங்காக் பிரகடனத்தின் மூலம் நிறுவப்பட்டது.
- **உறுப்பு நாடுகள் (11):** இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, புருனே, வியட்நாம், லாவோஸ், மியான்மர், கம்போடியா மற்றும் திமோர் லெஸ்டே (புதிய உறுப்பினர்).

192. உலகின் முதல் தங்கம் உருக்கும் ஏடிஎம்

- **அறிமுகம்:** 2025 மே மாதம், செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் உலகின் முதல் தங்கம் உருக்கும் ஏடிஎம் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- **அமைந்துள்ள இடம்:** ஹைதராபாத், இந்தியா.

193. உலகின் 4-வது பெரிய பொருளாதாரமாக உருவெடுத்த இந்தியா

- **அறிமுகம்:** 2025 மே மாதம் சர்வதேச நாணய நிதியம் (IMF) வெளியிட்ட அறிக்கையின்படி, ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக உருவெடுத்துள்ளது.
- **அறிக்கை முடிவுகள்:**
  - இந்தியாவின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி $ 4.187 டிரில்லியன் (சுமார் 4.187 லட்சம் கோடி டாலர்கள்).
  - 2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.2% ஆக இருக்கும் என IMF மதிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் (IMF)

- ✓ நிறுவப்பட்டது: 1944 (உலகளாவிய பலதரப்பு மேம்பாட்டு நிறுவனம்)
- ✓ தலைமையகம்: வாஷிங்டன், D.C., அமெரிக்கா
- ✓ உறுப்பு நாடுகள்: 191

194. இந்தியாவின் முதல் AI மையப்படுத்தப்பட்ட SEZ

- **அறிமுகம்:** 2025 மே 28 அன்று, இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மையப்படுத்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலத்தை (SEZ) ராய்ப்பூர் பகுதியில் உருவாக்க அறிவிக்கப்பட்டது.
- **மேம்படுத்துநர்:** இந்த திட்டத்தை Rack Bank Data Center Private Limited நிறுவனம் (Indore) முன்னெடுக்கிறது.
- **முதலீடு:** இந்த திட்டத்திற்கு சுமார் ரூ.1,000 கோடி முதலீடு செய்யப்பட உள்ளது.

195. புதிய மரபணு மாற்றப்பட்ட நெல் ரகங்கள் வெளியீடு

- **அறிமுகம்:** 2025 மே மாதம், இந்தியா இரண்டு புதிய மரபணு மாற்றப்பட்ட நெல் ரகங்களை அறிமுகப்படுத்தியது. அவை: DRR தான் 100 (கமலா) மற்றும் புசா DST ரைஸ் 1.
- **உருவாக்கிய அமைப்பு:** இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR).
- **DRR தான் 100 (கமலா)** இது புகழ்பெற்ற சம்பா மசூரி நெல் ரகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- **புசா DST ரைஸ் 1** இது மசூட்டெரு 1010 என்ற ரகத்தை அடிப்படையாகக் கொண்டது.

196. பாரத் ∴போர்காஸ்ட் சிஸ்டம் (BFS) தொடக்கம்

- **அறிமுகம்:** இது இந்தியாவிலேயே உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, மிகத் துல்லியமான தகவல்களை வழங்கக்கூடிய உயர்-திறன் வானிலை முன்னறிவிப்பு அமைப்பு ஆகும்.
- **தொடக்க விழா:** மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் அவர்களால் 2025 மே 26 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- **உருவாக்கிய அமைப்பு:** புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM).
- **துல்லியத்தன்மை**: இது 6 கி.மீ கிரிட் அளவில் தகவல்களை வழங்கும்.
- **இயக்கம்** :இந்த அதிநவீன அமைப்பு "அர்கா" என்று பெயரிடப்பட்ட சூப்பர் கம்ப்யூட்டர் மூலம் இயக்கப்படுகிறது.

197. லூபின் நிலவு வழிசெலுத்தல் அமைப்பு

- **அறிமுகம்:** இது நிலவுக்காக உருவாக்கப்பட்டு வரும் ஜிபிஎஸ் (GPS) போன்ற ஒரு மேம்பட்ட வழிசெலுத்தல் அமைப்பாகும்.
- **அமைப்பு:** இது ஐரோப்பிய விண்வெளி முகமையால் (ESA) உருவாக்கப்படுகிறது.
- **நோக்கம்:** நிலவைச் சுற்றி வரும் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி, அங்குள்ள விண்வெளி வீரர்கள் மற்றும் ரோவர் (Rover) வாகனங்களுக்குத் துல்லியமான இருப்பிடத் தரவுகளை (Location Data) வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும்.

198. வளர்ச்சியடைந்த நானோபோரஸ் மல்டிலேயர்டு பாலிமெரிக் மெம்பிரேன்

- **அறிமுகம்:** கடல் நீரை உப்பு நீக்கம் செய்வதற்காக இந்தச் சிறப்பு சவ்வுப் படலத்தை DRDO உருவாக்கியுள்ளது.
- **சிறப்பம்சம்:** இது மிக அதிக அழுத்தத்திலும் உப்பு நீரிலிருந்து உப்பை மிகத் திறமையாகப் பிரித்தெடுக்கும் திறன் கொண்டது.
- **பயன்பாடு:** இது முதன்மையாக இந்தியக் கடலோரக் காவல் படை கப்பல்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படும்.

199. "பார்கவாஸ்த்ரா" (Bhargavastra) - வெற்றிகரமான சோதனை

- **அறிமுகம்:** இது இந்தியாவிலேயே உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஓர் ட்ரோன் எதிர்ப்பு அமைப்பு (Anti-Drone System) ஆகும்.
- **சோதனை தேதி:** 2025 மே 13 அன்று ஒடிசாவின் கோபால்பூர் கடற்கரைப் பகுதியில் இந்தச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- **திறன்:** இந்த அமைப்பு 2.5 கி.மீ தூரம் வரையுள்ள சிறிய ட்ரோன்களைக் கண்டறிந்து அவற்றை அழிக்கும் திறன் கொண்டது.

200. யுனெஸ்கோவின் "Memory of the World Register" பட்டியலில் நாட்டிய சாஸ்திரம் மற்றும் பகவத் கீதை

- **அறிவிப்பு:** 2025 ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆலோசனையில், பரத முனி எழுதிய நாட்டிய சாஸ்திரம் மற்றும் புனித நூலான பகவத் கீதை ஆகியவற்றை யுனெஸ்கோ தனது "உலக நினைவகப் பதிவேட்டில்" இணைத்தது.
- **முக்கியத்துவம்:** இந்தியாவின் பண்டைய அறிவு மற்றும் கலாச்சாரத்திற்குப் பயன் தரும் வகையில் கிடைத்த மிகப்பெரிய உலகளாவிய அங்கீகாரம் இதுவாகும்.
- **தற்போதைய நிலை:** இந்த இரண்டு புதிய சேர்க்கைகளுடன், இந்தப் பதிவேட்டில் உள்ள இந்தியப் பதிவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

201. உலகின் 17-வது அத்லீட் பாஸ்போர்ட் மேலாண்மை பிரிவு (APMU) - புது தில்லி

- **அறிமுகம்:** மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா உலகின் 17-வது அத்லெட் பாஸ்போர்ட் மேலாண்மை பிரிவை (Athlete Passport Management Unit - APMU) தொடங்கி வைத்தார்.
- **தேதி:** 2025 ஏப்ரல் 17 (புது தில்லி)
- **சிறப்பம்சங்கள்:** APMU என்பது விளையாட்டு வீரர்களின் உயிரியல் பாஸ்போர்ட்டுகளை கண்காணிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பிரிவாகும். இது விளையாட்டில் நேர்மையைப் பேணுவதையும், ஊக்கமருந்து இல்லாத தூய்மையான விளையாட்டை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **முக்கிய மைல்கல்:** விளையாட்டு வீரர்களின் உயிரியல் விவரங்களை (Biological Profiles), அத்லெட் பயாலஜிக்கல் பாஸ்போர்ட் (ABP) மூலம் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் ஊக்க மருந்துக்கு எதிரான போராட்டத்தை இது வலுப்படுத்துகிறது.

202. யுனெஸ்கோ: உலக நினைவகப் பதிவேடு (UNESCO: Memory of the World Register)

- **திட்டத்தின் தொடக்கம்:** இந்தத் திட்டம் 1992-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** உலகின் ஆவண பாரம்பரியத்தைப் (Documentary Heritage) பாதுகாப்பதும், அவற்றை உலகெங்கிலும் உள்ள மக்கள் எளிதாக அணுகுவதை உறுதி செய்வதும் இதன் முதன்மை நோக்கமாகும்.
- **பாதுகாப்பு:** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள் (Manuscripts) மற்றும் நூலகச் சேகரிப்புகள் அழிந்து விடாமல் பாதுகாக்க இந்தத் திட்டம் உதவுகிறது.

203. தமிழ்நாடு ஆளுநர் Vs மாநில அரசு: உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- **மறுசீராய்வு செய்யப்பட்ட மசோதாக்கள்:** சட்டசபையில் மீண்டும் நிறைவேற்றப்பட்டு (Re-enacted bills) அனுப்பப்படும் மசோதாக்களை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது "சட்டப்படி தவறு" (Legally Incorrect) என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.
- **முக்கிய முடிவுகள்:**
  - தமிழ்நாடு அரசுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சட்ட மசோதாக்கள்
  - ஆளுநரால் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஒதுக்கப்பட்ட மசோதாக்கள் மீது, குடியரசுத் தலைவர் 3 மாதங்களுக்குள் ஒரு முடிவை எடுக்க வேண்டும்.
  - ஒருவேளை மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கப்படாவிட்டால், அதற்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
  - மாநில அரசின் கடமை: குடியரசுத் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட மசோதாக்கள் குறித்து மத்திய அரசு எழுப்பும் கேள்விகளுக்கு மாநில அரசு உடனுக்குடன் (Promptly) பதிலளிக்க வேண்டும்.

204. பட்டியலினத்தவர் (SC) உள் இடஒதுக்கீட்டை அமல்படுத்திய முதல் மாநிலம்

- **அறிமுகம்:** தெலுங்கானா அரசு "தெலுங்கானா பட்டியலினத்தவர் (இடஒதுக்கீட்டை முறைப்படுத்துதல்) சட்டம் 2025" (Telangana Scheduled Castes - Rationalisation of Reservation Act 2025) என்ற சட்டத்தை அறிவித்துள்ளது.
- **நோக்கம்:** பட்டியலினத்தவருக்குள் இருக்கும் சமூக, பொருளாதார மற்றும் கல்வி ரீதியான பின்தங்கிய நிலையை அடிப்படையாகக் கொண்டு, இடஒதுக்கீட்டின் பலன்கள் அந்தப் பிரிவில் உள்ள அனைத்து உட்பிரிவுகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்வது இதன் நோக்கமாகும்.
- **முக்கியத்துவம்:** பட்டியலினத்தவர் (SC) பிரிவினரிடையே உள் இடஒதுக்கீட்டை (Sub-classification) முறைப்படி அமல்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலம் என்ற பெருமையை தெலங்கானா பெற்றுள்ளது.

- **சட்ட அடிப்படை:** உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க "பஞ்சாப் மாநிலம் Vs தேவிந்தர் சிங்" வழக்கின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

205. பேரிடர் மேலாண்மை (திருத்தச்) சட்டம் 2025

- **அறிமுகம்:** மார்ச் 29 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, இந்தச் சட்டம் 2025 ஏப்ரல் 9 முதல் நடைமுறைக்கு வந்தது.
- **முக்கிய வழிமுறைகள்**:
  - ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்குத் தேவையான தனித்தனி நகர்ப்புற பேரிடர் மேலாண்மை ஆணையங்களை அமைத்துக் கொள்தல்
  - மாநிலங்கள் தங்களுக்கெனத் தனித்துவமான மாநில பேரிடர் மீட்புப் படைகளை அதிகாரப்பூர்வமாக நிர்வகித்தல்.
  - தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு (NCMC) மற்றும் உயர்நிலைக் குழுக்களுக்கு (High-Level Committee) இப்போது சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

206. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து (ICC) விலகும் முதல் ஐரோப்பிய நாடு: ஹங்கேரி

- **அறிவிப்பு:** 2025 ஏப்ரல் 3 அன்று, ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து தனது நாடு விலகுவதாக அறிவித்தார்.
- **காரணம்:** இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்தது.

207. யுனெஸ்கோவின் 16 புதிய சர்வதேச புவிசார் பூங்காக்கள் அறிவிப்பு

- **அறிவிப்பு:** 2025 ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், யுனெஸ்கோ அமைப்பு 16 புதிய சர்வதேச புவிசார் பூங்காக்களை (Global Geoparks) அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- **நோக்கம்:** சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் பாரம்பரியங்களைப் (Geological Heritage) பாதுகாப்பதும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.
- **தற்போதைய நிலை:** இந்த புதிய சேர்க்கையுடன், உலகெங்கிலும் உள்ள யுனெஸ்கோ புவிசார் பூங்காக்களின் மொத்த எண்ணிக்கை 229 ஆக உயர்ந்துள்ளது. இவை 50 நாடுகளில் பரவியுள்ளன.

208. இந்தியாவின் புதிய அணுசக்தி மிஷன்

- **அறிமுகம்:** 2025 ஏப்ரல் மாதம், மத்திய நிதியமைச்சர் இந்தியாவின் ஆற்றல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு பிரத்யேகமான "அணுசக்தி மிஷன்" தொடங்கப்படுவதாக அறிவித்தார்.
- **இலக்கு:** இந்திய சுதந்திரத்தின் 100-வது ஆண்டான 2047-க்குள் 100 GW அணுமின் உற்பத்தித் திறனை எட்டுவது இதன் முக்கிய இலக்காகும்.
- **நோக்கம்**: உள்நாட்டு அணுசக்தித் திறன்களை மேம்படுத்துவது மற்றும் இதுவரை அரசு வசம் மட்டுமே இருந்த இந்தத் துறையில் தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.
- **நிதி ஒதுக்கீடு:** இத்திட்டத்திற்காகச் சுமார் ₹ 20,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- **முக்கிய அம்சம்:** இந்தியாவில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குறைந்தது ஐந்து சிறிய மாடுலர் ரியாக்டர்களை (SMR) 2033-ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வருவது.

209. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் "சாட்டிலைட் நாசில் டைவர்ஜெண்ட்" உருவாக்கம்

- **அறிமுகம்:** 2025 ஏப்ரல் மாதம், பி.எஸ்.எல்.வி (PSLV) ராக்கெட்டுகளுக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட "நாசில் டைவர்ஜெண்ட்" (Nozzle Divergent) என்ற பாகம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.
- **உருவாக்கிய அமைப்பு:** இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO).
- **முக்கியத்துவம்:** இதுவரை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த கொலம்பியம் (Columbium) உலோகத்திற்கான செலவில் சுமார் 90% சேமிக்கப்படும். இது விண்வெளித் திட்டங்களின் செலவை பெருமளவு குறைக்கும்.
- **தொழில்நுட்ப முன்னேற்றம்:** இந்த டைவர்ஜெண்ட் பாகம், ராக்கெட்டிலிருந்து வெளியேறும் வாயுவின் வேகத்தையும் (Gas flow speed) திறனையும் அதிகரிக்க உதவுகிறது.

210. ஹியூமன் ஸ்பேஸ் மிஷன்: ∴பிரேம் 2 (FRAME 2) - ஏவுதல்

- **ஏவப்பட்ட தேதி:** 2025 மார்ச் 31
- **இடம்:** கென்னடி விண்வெளி மையம் (NASA), புளோரிடா, அமெரிக்கா.
- **உருவாக்கிய நிறுவனம்:** ஸ்பேஸ் எக்ஸ் (SpaceX)
- **நோக்கம்:** ஒரு சுதந்திரமான விண்வெளிப் பயணத்தின் போது, விண்வெளிப் பயணம் மனித உடலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் மற்றும் விளைவுகளை விரிவாக ஆய்வு செய்வது இதன் முதன்மை நோக்கமாகும்.
- **முக்கியத்துவம்:** விண்வெளி வரலாற்றிலேயே முதன்முதலாக மனிதர்களை ஏற்றிச் செல்லும் ஒரு விண்கலம் பூமியின் துருவ சுற்றுப்பாதையை (Polar Orbit) பின்பற்றிப் பயணம் செய்கிறது.

211. இந்தியாவின் மிக சக்தி வாய்ந்த குவாண்டம் கணினி: கியூபிஏஐ இண்டஸ் (QpiAI Indus)

- **அறிமுகம்:** 2025 ஏப்ரல் 14 அன்று, உலக குவாண்டம் தினத்தை (World Quantum Day) முன்னிட்டு, இந்தியாவின் மிக சக்தி வாய்ந்த குவாண்டம் கணினியான "கியூபிஏஐ இண்டஸ்" அறிமுகப்படுத்தப்பட்டது.
- **உருவாக்கிய நிறுவனம்:** பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்ட QpiAI என்ற ஸ்டார்ட்-அப் நிறுவனம் இதை உருவாக்கியுள்ளது.
- **நோக்கம்:** குவாண்டம் தொழில்நுட்பம் மற்றும் அதன் பயன்பாடுகளை மேம்படுத்துவதில் இந்தியாவை உலகின் முன்னணி நாடுகளின் வரிசையில் நிலைநிறுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- **முக்கியத்துவம்:** இது இந்தியாவின் முதல் "∴புல் ஸ்டாக்" (Full Stack) குவாண்டம் கணினி அமைப்பாகும்.
- **சிறப்பு அம்சம்**: இந்த கணினி 25 கியூபிட்கள் கொண்ட திறனுடன் செயல்படுகிறது.

212. பேஸ்மேக்கர்

- இது பேட்டரி மூலம் இயங்கும் ஒரு சிறிய மின்னணு சாதனம் ஆகும். இதயத் துடிப்பு வழக்கத்திற்கு மாறாக மிகவும் மெதுவாக இருக்கும் போது, அதைச் சீராக்க இது பயன்படுகிறது.
- ஒரு பேஸ்மேக்கரில் இரண்டு முக்கியப் பகுதிகள் உள்ளன. பல்ஸ் ஜெனரேட்டர் (Pulse Generator) இதில் பேட்டரி மற்றும் மின்சுற்று (Circuit) இருக்கும். லீட்ஸ் (Leads) இவை ஜெனரேட்டரையும் இதயத் தசைகளையும் இணைக்கின்றன.

213. உலகின் மிகச்சிறிய பேஸ்மேக்கர் உருவாக்கம்

- **அறிமுகம்:** 2025 ஏப்ரல் மாதம், அமெரிக்காவின் நார்த்-வெஸ்டர்ன் பல்கலைக்கழக பொறியாளர்கள் உலகின் மிகச்சிறிய பேஸ்மேக்கரை உருவாக்கியுள்ளனர்.
- **அளவு:** இது ஒரு அரிசி தானியத்தை விட சிறியது.

- **பயன்பாடு:** இந்தச் சாதனத்தை அறுவை சிகிச்சை இல்லாமலேயே, ஒரு ஊசியின் நுனி வழியாக உடலுக்குள் செலுத்திவிட முடியும்.

214. உலகிலேயே மூன்றாவது மிகப்பெரிய உயிரி எரிபொருள் உற்பத்தியாளராக இந்தியா உருவெடுத்துள்ளது

- மார்ச் 2025-இல் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்களால் இது அறிவிக்கப்பட்டது.
- **சாதனை:** பெட்ரோலில் 20மூ எத்தனால் கலப்பு விகிதத்தை, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னரே எட்டியதில் நாடு அடைந்த வெற்றியே இச்சாதனைக்குக் காரணமாகும்.
- **பொருளாதாரப் பயன்கள்**: கச்சா எண்ணெய் இறக்குமதி குறைந்ததன் காரணமாக, சுமார் ரூ.85,000 கோடி அளவிற்கான கணிசமான அந்நியச் செலாவணி சேமிப்பை இந்த முன்னெடுப்பு சாத்தியமாக்கியுள்ளது.

215. "ஒரே நாடு ஒரே கப்பல்" முன்முயற்சி

- **அறிவிப்பு:** இந்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால் 2025 மார்ச் மாதம் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- **முதன்மை நோக்கம்**: இந்தியாவின் அனைத்து முக்கியத் துறைமுகங்களின் (Major Ports) செயல்பாடுகளை தரப்படுத்துதல் (Standardize) மற்றும் சீரமைப்பதாகும். இதன் மூலம் செயல்திறனை அதிகரிக்கவும், தளவாடச் செலவுகளைக் (Logistics costs) குறைக்கவும், உலகளாவிய போட்டியில் இந்தியாவை முன்னிலைப்படுத்தவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.
- **முக்கிய நோக்கங்கள் மற்றும் அம்சங்கள்:** டிஜிட்டல் மயமாக்கல்: "நேஷனல் லாஜிஸ்டிக்ஸ் போர்ட்டல் - மரைன்" போன்ற தளங்கள் மூலம் துறைமுகச் செயல்பாடுகள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்படும்.

216. IRCTC மற்றும் IRFC நிறுவனங்களுக்கு "நவரத்னா" அந்தஸ்து

- **அறிவிப்பு:** 2025 மார்ச் 3 அன்று, இந்திய அரசு IRCTC (25வது) மற்றும் IRFC (26வது) ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு "நவரத்னா" அந்தஸ்தை வழங்கியது.
- **முக்கியத்துவம்**: இந்த அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம், இவ்விரு நிறுவனங்களுக்கும் கூடுதல் நிதியியல் மற்றும் செயல்பாட்டு சுதந்திரம் கிடைத்துள்ளது.
- **தற்போதைய நிலை:** இந்தியாவில் உள்ள மொத்த நவரத்னா நிறுவனங்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

217. பிஎம் யுவா 3.0 திட்டத் தொடக்கம்

- **அறிமுகம்:** இளம் எழுத்தாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கில், 2025 மார்ச் 11 அன்று "பிஎம் யுவா 3.0" திட்டம் தொடங்கப்பட்டது.
- **வழங்கும் அமைப்புகள்:** இந்திய கல்வி அமைச்சகம் மற்றும் தேசிய புத்தக அறக்கட்டளை இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றன.
- **நோக்கம்:** இந்தியாவில் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களைப் பட்டை தீட்டி, அவர்களைச் சர்வதேச அளவில் (Global Stage) அங்கீகாரம் பெறச் செய்வதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- **இலக்கு:** 30 வயதுக்கு உட்பட்ட இளம் எழுத்தாளர்களுக்குப் பயிற்சியும் வாய்ப்பும் வழங்குவதன் மூலம், இந்தியாவில் வாசிப்பு, எழுத்து மற்றும் புத்தகக் கலாச்சாரத்தை மேம்படுத்துவது இதன் இலக்காகும்.

218. 'வந்தாரா' விலங்குகள் மீட்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் தொடக்கம்

- **திறப்பு விழா:** பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் மார்ச் 4 அன்று (2025) இந்த மையம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.
- **இடம்:** ஜாம்நகர், குஜராத். (இது ரிலையன்ஸ் அறக்கட்டளையால் - Reliance Foundation - நிறுவப்பட்ட உலகத்தரம் வாய்ந்த மையமாகும்).
- **நோக்கம்:** உள்நாட்டு மற்றும் அழிந்து வரும் நிலையில் உள்ள வனவிலங்கு இனங்களைப் பாதுகாப்பதும், அவற்றிற்கு முறையான சிகிச்சை மற்றும் மறுவாழ்வு (Rehabilitation) அளிப்பதும் இதன் முதன்மை நோக்கமாகும்.

219. மொபைல் வேர்ல்ட் காங்கிரஸ் (MWC) 2025

- **நிகழ்வு நடைபெற்ற தேதிகள்:** 2025 மார்ச் 3 முதல் 6 வரை.
- **இடம்:** பார்சிலோனா, ஸ்பெயின்.
- **இந்தியாவின் பிரதிநிதி:** இந்திய அரசின் சார்பில் மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா இதில் பங்கேற்றார்.

220. 24வது உலக நிலையான வளர்ச்சி உச்சி மாநாடு 2025 (WSDS)

- **நிகழ்வு நடைபெற்ற தேதிகள்:** 2025 மார்ச் 5 முதல் 7 வரை.
- **இடம்:** இந்தியா ஹாபிடட் சென்டர், புது தில்லி.
- **கருப்பொருள்:** நிலைத்த வளர்ச்சி மற்றும் காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை வேகப்படுத்துவதற்கான கூட்டாண்மைகள் முக்கியமாகக் கவனம் செலுத்தப்படுகின்றன.
- **ஏற்பாடு செய்த அமைப்பு:** தி எனர்ஜி அண்ட் ரிசோர்சஸ் இன்ஸ்டிடியூட் (TERI).
- **மையக்கருத்து**: "நிலையான வளர்ச்சி மற்றும் காலநிலை தீர்வுகளை விரைவுபடுத்துவதற்கான கூட்டாண்மைகள்".

221. இந்திய ரிசர்வ் வங்கிக்கு (RBI) "டிஜிட்டல் உருமாற்ற விருது" வழங்குதல்

- **விருது வழங்கப்பட்ட தேதி:** 2025 மார்ச் 13
- **வழங்கிய அமைப்பு:** லண்டனைச் சேர்ந்த சென்ட்ரல் பேங்கிங்
- **முக்கியத்துவம்:** இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மேற்கொண்ட Pravah மற்றும் Sarathi எனும் டிஜிட்டல் முன்முயற்சிகளுக்காக இந்த உயரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது.

222. இந்தியா - ஜப்பான் இடையிலான கடன் ஒப்பந்தம்:

- **அறிமுகம்:** 2025 மார்ச் மாதம், ஆறு முக்கியத் திட்டங்களுக்காக 191.736 பில்லியன் ஜப்பானிய யென் (JPY) மதிப்பிலான கடன் ஒப்பந்தங்களில் இந்தியாவும் ஜப்பானும் கையெழுத்திட்டன.
- **முக்கியத் துறைகள்:** வன மேலாண்மை, குடிநீர் வழங்கல், நகர்ப்புற போக்குவரத்து, மீன்வளம் (Aquaculture), பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு ஆகிய துறைகளில் இந்த நிதி பயன்படுத்தப்படும்.
- **இத்திட்டத்தில் உள்ள ஆறு முக்கியத் திட்டங்கள்:**
  - தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்
  - சென்னை கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்
  - டெல்லி மாஸ் ரேபிட் டிரான்ஸிட் சிஸ்டம் திட்டம் (MRTS)
  - அசாம் மாநில மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்
  - பஞ்சாப் பல்லுயிர் மற்றும் இயற்கை வள பாதுகாப்புத் திட்டம்
  - வன மேலாண்மை திறன் மேம்பாட்டுத் திட்டம்

223. நிலவில் "புளூ கோஸ்ட்" (Blue Ghost) விண்கலத்தின் வெற்றிகரமான தரையிறக்கம்

- **அறிமுகம்:** நிலவை நோக்கிய ஒரு தனியார் விண்கலப் பயணமான "புளூ கோஸ்ட்" 2025 மார்ச் 2 அன்று நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.
- **நிறுவனம்:** இந்த விண்கலத்தை அமெரிக்காவைச் சேர்ந்த ∴பையர் ∴பிளை ஏரோஸ்பேஸ் (Firefly Aerospace) என்ற தனியார் நிறுவனம் உருவாக்கியது.
- **ஏவுதல்:** இந்த விண்கலம் 2025 ஜனவரி 15 அன்று நிலவை நோக்கி விண்ணில் ஏவப்பட்டது.
- **சிறப்பம்சம்:** நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய முதல் தனியார் விண்கலப் பணிகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது

224. இந்தியக் கடற்படையின் புதிய போர்க்கப்பல்: "தவ்சயா" (Tavsya)

- **அறிமுகம்:** 2025 மார்ச் 22 அன்று, இந்தியக் கடற்படைக்காக உள்நாட்டிலேயே கட்டப்பட்ட "தவ்சயா" போர்க்கப்பல் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.
- **கட்டிய நிறுவனம்:** கோவா ஷிப்யார்ட் லிமிடெட் (Goa Shipyard Limited - GSL).
- **அறிமுகம்:** இது புராஜெக்ட் 1135.6 அல்லது தல்வார் வகுப்பு (Talwar-class) கூடுதல் தொடர் கப்பல்கள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இரண்டாவது ஸ்டீல்த் வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க்கப்பல் (Stealth Guided Missile Frigate) ஆகும்.
- **அதிகபட்ச வேகம்:** இந்தக் கப்பல் அதிகபட்சமாக 28 நாட்ஸ் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது.

சந்திரயான் – 5 திட்டத்திற்கு ஒப்புதல்

✓ **விவாதம்:** மார்ச் 2025-இல் மத்திய அரசு சந்திரயான்-5 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ **கூட்டு முயற்சி:** இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) மற்றும் ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமை (JAXA) ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டுத் திட்டமாகும் இது.

✓ **நோக்கம்**: நிலவின் மேற்பரப்பை ஆழமாக ஆய்வு செய்வதே இதன் நோக்கமாகும் நிலப்பரப்பு, கனிமக் கலவை மற்றும் நீராக உறைந்திருக்கும் பனிக்கட்டி வளங்கள் உள்ளிட்டவை குறித்து அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வது இத்திட்டத்தின் முக்கியப் பணியாகும். இத்திட்டத்திற்கான சிறப்பு ரோவர் (Rover) JAXA-வாலும், லேண்டர் (Lander) ISRO-வாலும் உருவாக்கப்பட உள்ளன.

✓ **இலக்கு:** ஜப்பானின் H3 ராக்கெட்டைப் பயன்படுத்தி, 2027-28 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை விண்ணில் செலுத்துவது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

❖ இந்தியாவின் ஆறு பாரம்பரியத் தளங்கள் (காங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா, முதுமல் பெருங்கற்கால நடுகல் தளம், அசோகர் கல்வெட்டுத் தளம், 64 யோகினி கோயில்கள், குப்தர் காலக் கோயில்கள் மற்றும் புந்தேலா அரண்மனைகள்-கோட்டைகள்) யுனெஸ்கோவின் உத்தேசப் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

❖ மத்தியப் பிரதேசத்தின் ரதாபானி வனவிலங்கு சரணாலயம் 57-வது புலிகள் காப்பகமாகவும், மாதவ் தேசியப் பூங்கா 58-வது புலிகள் காப்பகமாகவும் அறிவிக்கப்பட்டன.

❖ ∴ப்ளிப்கார்ட்டை (Flipkart) ஒரு வங்கி சாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஒப்புதல் அளித்தது.

❖ பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில், இந்தியாவும் இலங்கையும் இணைந்து LIBA (இலங்கை-இந்தியா வணிகச் சங்கம்) எனும் அமைப்பைத் தொடங்கின.

225. **மாநிலங்களில் பஞ்சாயத்துகளுக்கான அதிகாரப் பரவல் நிலை - 2024 அறிக்கை**

- **வெளியிட்ட அமைப்பு:** இந்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இதை வெளியிட்டது.
- **அறிக்கையின் தலைப்பு:** "மாநிலங்களில் பஞ்சாயத்துகளுக்கான அதிகாரப் பரவல் நிலை - தரவரிசை அடிப்படையிலான ஒரு சுட்டிக்காட்டும் சான்று"
- **தயாரித்த நிறுவனம்:** புது தில்லியில் உள்ள இந்திய பொது நிர்வாக நிறுவனம் (IIPA - Indian Institute of Public Administration) இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.
- **தரவரிசையில் முதல் 3 இடங்களைப் பிடித்த மாநிலங்கள்:** 1. கர்நாடகா 2. கேரளா 3. தமிழ்நாடு

226. **இந்தியாவின் மிகப்பெரிய ஒற்றை இட சூரியசக்தி உற்பத்தி ஆலை**

- **தேதி:** 2025 பிப்ரவரி 6 அன்று இந்த ஆலை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.
- **இடம்:** கங்கை கொண்டான், திருநெல்வேலி, தமிழ்நாடு.
- **உற்பத்தித் திறன்:** இந்த ஆலை ஆண்டுக்கு 4.3 GW சூரியசக்தி உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.
- **நிறுவனம்:** இந்த ஆலை டாடா பவர் (Tata Power) நிறுவனத்தின் ஒரு அங்கமான டிபி சோலார் லிமிடெட் (TP Solar Limited) மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

227. **இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) பல்கலைக்கழகம்**

- **அறிவிப்பு:** 2025 பிப்ரவரி மாதம், மகாராஷ்டிரா அரசு இந்தியாவின் முதல் பிரத்யேக "செயற்கை நுண்ணறிவுப் பல்கலைக்கழகத்தை" (AI University) அமைப்பதாக அறிவித்தது.
- **நோக்கம்:** மகாராஷ்டிராவை செயற்கை நுண்ணறிவு கல்வி மற்றும் கண்டுபிடிப்புகளின் மையமாக (Hub of AI Education and Innovation) மாற்றுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- **முக்கியத்துவம்:** இந்தப் பல்கலைக்கழகம் ஒரு சிறப்பு மையமாக (Centre of Excellence) செயல்படும். இது தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆகியவற்றுக்கு இடையே ஒரு பாலமாக இருந்து, AI தொழில்நுட்பத்தில் புதிய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும்.

228. **மின்மயமான தனிப்பட்ட உரிமம் (Electronic Personal License) அறிமுகப்படுத்திய உலகின் இரண்டாவது நாடாக இந்தியா திகழ்கிறது.**

- **அறிமுகம்:** 2025 பிப்ரவரி மாதம், விமானிகளுக்கான (Pilots) மின்னணு பெர்சனல் லைசென்ஸ் (EPL) திட்டத்தை இந்தியா அறிமுகப்படுத்தியது.
- **முக்கியத்துவம்:** சீனாவுக்கு அடுத்தபடியாக, விமானிகளுக்கு டிஜிட்டல் உரிம முறையைச் செயல்படுத்தும் உலகின் இரண்டாவது நாடு இந்தியா ஆகும்.
- **நோக்கம்:** சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை நவீனப்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை (Safety and Security) மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளைத் திறம்பட மாற்றுவது இதன் நோக்கமாகும்.
- **உரிமம் வழங்கும் அமைப்பு:** இந்திய சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA - Directorate General of Civil Aviation).

229. **ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய ஒப்பந்தத்தில் (UNGC) ஜிஎம்ஆர் ஏர்போர்ட்ஸ்**

- **அறிவிப்பு:** இந்தியாவின் மிகப்பெரிய தனியார் விமான நிலைய நிறுவனமான ஜிஎம்ஆர் (GMR), 2025 பிப்ரவரி 3 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய ஒப்பந்த (United Nations Global Compact - UNGC) முன்முயற்சியில் இணைந்ததாக அறிவித்தது.
- **அர்ப்பணிப்பு:** UNGC-இல் இணைந்ததன் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் பத்து கொள்கைகளை தனது செயல்பாட்டு உத்திகளில் ஒருங்கிணைக்க ஜிஎம்ஆர்

உறுதியளித்துள்ளது. இக்கொள்கைகள் மனித உரிமைகள், உழைப்பு, சுற்றுச்சூழல் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

- **முக்கியத்துவம்:** ஜிஎம்ஆர் ஏர்போர்ட்ஸ் இயக்கும் அனைத்து விமான நிலையங்களும், அமெரிக்க பசுமை கட்டிடக் குழுமத்திடமிருந்து (USGBC) அல்லது இந்திய பசுமை கட்டிடக் குழுமத்திடமிருந்து (IGBC) பசுமை கட்டிடச் சான்றிதழைப் பெற்றுள்ளன.

230. பாரிஸ் AI உச்சி மாநாடு 2025

- **நிகழ்வு நடைபெற்ற தேதிகள்:** 2025 பிப்ரவரி 10 மற்றும் 11.
- **இடம்:** கிராண்ட் பேலஸ், பாரிஸ், பிரான்ஸ்.
- **கூட்டுத் தலைமை:** இந்த மாநாட்டிற்கு பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் கூட்டாகத் தலைமை தாங்கினர்.
- **மையக்கருத்து**: "மக்களுக்கும் கோளுக்கும் உள்ளடக்கிய மற்றும் நிலையான செயற்கை நுண்ணறிவு".
- **முதன்மை நோக்கம்:** செயற்கை நுண்ணறிவின் (AI) பொறுப்பான பயன்பாடு மற்றும் அதன் அறநெறிகள் (Ethics) குறித்து விவாதிப்பது.

231. ஆதித்யா - L1 : சூரியச் சீற்றங்களின் முதல் "கெர்னல்" (Kernel) புகைப்படம்

- **அறிவிப்பு:** 2025 பிப்ரவரி மாதம், ஆதித்யா - L1 விண்கலம் சூரியச் சீற்றத்தின் மையப் பகுதியான "கெர்னல்" (Kernel) பகுதியை முதன்முதலாகப் படம் பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.
- **பயன்படுத்தப்பட்ட கருவி:** இதற்காக ஆதித்யா - L1 விண்கலத்தில் உள்ள சோலார் அல்ட்ரா வயலட் இமேஜிங் டெலஸ்கோப் (SUIT - Solar Ultraviolet Imaging Telescope) என்ற கருவி பயன்படுத்தப்பட்டது. இது பல சூரியச் சீற்றங்களைப் பதிவு செய்துள்ளது.
- **சாதனை:** இது மிகவும் சக்திவாய்ந்த x6 – 3 கிளாஸ் சூரியச் சீற்றத்தை, அண்மை-புற ஊதா (NUV - Near-Ultraviolet) அலைநீளத்தில் (200 - 400 nm) படம் பிடித்துள்ளது.
- **கூட்டு முயற்சி:** இந்தச் சாதனையானது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO), நாசா (NASA) மற்றும் இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA - Indian Institute of Astrophysics) ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சியால் சாத்தியமானது.

232. மஜோரானா-1 (Majorana-1) குவாண்டம் கம்ப்யூட்டிங் சிப்

- **அறிமுகம்:** 2025 பிப்ரவரி மாதம் "மஜோரானா-1" என்ற அதிநவீன குவாண்டம் கம்ப்யூட்டிங் சிப் உருவாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
- **உற்பத்தியாளர்:** மைக்ரோசாப்ட் (Microsoft Inc) உருவாக்கியுள்ளது.
- **முக்கியத்துவம்:** மைக்ரோபிளாஸ்டிக் (Microplastics) துகள்களை உடைக்க உதவுகிறது, சுகாதாரத் தீர்வுகளை மேம்படுத்துகிறது, மேலும் சிக்கலான இரசாயனத் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் திறனை வழங்குகிறது.
- **உருவாக்கப்பட்ட பொருட்கள்:** இந்த சிப் இண்டியம் ஆர்சனைடு (Indium Arsenide - குறைக்கடத்தி) மற்றும் அலுமினியம் (Aluminum - மீக்கடத்தி) ஆகிய இரண்டின் கலவையால் உருவாக்கப்பட்டுள்ளது.

233. இந்தியாவின் முதல் வனவிலங்கு பயோபேங்க் - டார்ஜிலிங்

- **அறிமுகம்:** இந்தியாவின் முதல் வனவிலங்கு பயோபேங்க் 2025 பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** பயோபாங்குகள் (Biobanks) விலங்கினங்களின் உயிரியல் வளங்களை பாதுகாக்க உதவுகின்றன, ஆராய்ச்சியை ஊக்குவிக்கின்றன, மேலும் எதிர்கால பாதுகாப்பு முயற்சிகளுக்கு தேவையான தகவல்களை வழங்குகின்றன.
- **கூட்டு முயற்சி:** இந்தத் திட்டம் ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட சென்டர் ∴பார் செல்லுலார் அண்ட் மாலிகுலர் பயாலஜி (CCMB) அமைப்பின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது.

234. உள்நாட்டு நுண்செயலி "சக்தி" (Shakti Microprocessor)

- **அறிவிப்பு:** 2025 பிப்ரவரி மாதம், இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட "சக்தி" (Shakti) நுண்செயலியை விண்வெளிப் பயன்பாடுகளுக்கு (Space Applications) பயன்படுத்தும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து அறிவிக்கப்பட்டது.

235. இந்தூர் மற்றும் உதய்பூர்: சர்வதேச சதுப்புநில நகரங்கள் (Wetland Cities)

- **அங்கீகாரம்:** 2025 ஜனவரி மாதம், மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் மற்றும் ராஜஸ்தானின் உதய்பூர் ஆகிய நகரங்கள் சர்வதேச "சதுப்புநில நகரங்கள்" என்ற அங்கீகாரத்தைப் பெற்றன.
- **நோக்கம்:** நகர்ப்புறங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் இந்த நகரங்கள் எடுத்த சிறப்பான நடவடிக்கைகளைப் பாராட்டுவதே இதன் நோக்கமாகும்.
- **முக்கியத்துவம்:** ராம்சர் ஒப்பந்தம் (Ramsar Convention) கீழ் இந்த பட்டியலில் சேர்க்கப்பட்ட இந்தியாவின் முதல் இரண்டு நகரங்கள் ஆகும்.

✓ சதுப்பு நில நகரங்கள் என்பவை தங்களின் நீர் வளங்களையும் சதுப்பு நிலங்களையும் பாதுகாப்பதில் சிறந்து விளங்கும் நகரங்கள் ஆகும்.
✓ சதுப்புநில நகரம் என்ற திட்டம் 2015 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் தொடங்கப்பட்டது.

236. தேசிய பிராட்பேண்ட் மிஷன் 2.0 (National Broadband Mission 2.0)

- **தொடக்கம்:** மத்திய தொலைத்தொடர்புத் துறை 2025 ஜனவரி 17 அன்று இந்த இரண்டாம் கட்டத் திட்டத்தைத் தொடங்கியது.
- **நோக்கம்:** 90% முக்கிய நிறுவனங்களுக்கு: பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC) மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு அதிவேக இணைய வசதி வழங்குதல்.
- **இலக்குகள்:** 2030-க்குள் 2.70 லட்சம் கிராமங்களுக்கு ஆப்டிகல் ∴பைபர் கேபிள் (OFC) இணைப்பை விரிவுபடுத்துதல். இந்தியா முழுவதும் குறைந்தபட்சம் 100 Mbps பதிவிறக்க வேகத்தை (Download Speed) உறுதி செய்தல்.

237. கிராமப்புற இந்தியத் திருவிழா 2025

- **தொடக்க விழா:** பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் ஜனவரி 4 முதல் 9 வரை இந்தத் திருவிழா தொடங்கி வைக்கப்பட்டது.
- **இடம்:** பாரத் மண்டபம், புது தில்லி.
- **மையக்கருத்து:** "விக்சித் பாரத் 2047-க்கான நெகிழ்ச்சியான கிராமப்புற இந்தியாவை உருவாக்குதல்".
- **நோக்கம்:** கிராமப்புற கட்டமைப்புகளை மேம்படுத்துதல், சுயநிறைவு பொருளாதாரத்தை உருவாக்குதல் மற்றும் புதுமைகளை ஊக்குவித்தல்.
- **ஏற்பாடு செய்தவர்கள்:** மத்திய நிதியமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறை மற்றும் நபார்டு (NABARD - National Bank for Agriculture and Rural Development) வங்கி ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்தன.

238. 'பஞ்சாயத்து முதல் நாடாளுமன்றம் வரை 2.0' முன்முயற்சி

- **தொடக்க விழா:** 2025 ஜனவரி 6 அன்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- **சிறப்புத் தருணம்:** பகவான் பிர்சா முண்டாவின் 150-வது பிறந்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- **பஹல்காம் (ஜம்மு & காஷ்மீர்):** பைசரன் பள்ளத்தாக்கு அருகே சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது.
- **கோரக்பூர் (ஹரியானா):** வட இந்தியாவின் முதல் அணுமின் திட்டத்தை அமைக்கத் திட்டம்.
- **ஷிவ்புரி (மத்தியப் பிரதேசம்):** மாதவ் தேசிய பூங்கா இந்தியாவின் 58-வது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.
- **கொல்கத்தா (மேற்கு வங்கம்):** போர்ட் வில்லியம் கோட்டை "விஜய் துர்க்" என பெயர் மாற்றப் பட்டது.
- **ஸ்ரீஹரிகோட்டா (ஆந்திரப் பிரதேசம்):** சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் மூன்றாவது ஏவுதளம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

உலகளாவிய எரிசக்தி தலைவர்கள் உச்சி மாநாடு (GELS 2025)

- ✓ **தேதி** : 2025 டிசம்பர் 5 முதல் 7 வரை.
- ✓ **இடம்** : பூரி, ஒடிசா.
- ✓ **மையக்கருத்து**: எரிசக்தி தன்னிறைவு, நிலைத்தன்மை மற்றும் புதுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இந்தியாவின் முதல் பிரத்யேக உச்சிமாநாடு.

NCAET-25

- ✓ **தேதி** : 23 நவம்பர், 2025
- ✓ **இடம்** : சென்னை, தமிழ்நாடு
- ✓ **மையக்கருத்து:** பொறியியல், மருத்துவம் மற்றும் பயன்பாட்டு அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறைகளில் உள்ள முக்கிய சவால்களை எதிர்கொள்வதற்கான பொதுவான கருப்பொருள்கள்

ESTIC 2025

- ✓ **தேதி** : 2025 நவம்பர் 3 முதல் 5 வரை.
- ✓ **இடம்** : பாரத் மண்டபம், புது தில்லி.
- ✓ **ஏற்பாட்டாளர்** : அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST), இந்திய அரசு.
- ✓ **மையக்கருத்து:**"விக்சித் பாரத் 2047: நிலையான புத்தாக்கம், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் அதிகாரமளிப்பதில் முன்னோடியாக இருத்தல்".

SEMICON India (செமிகான் இந்தியா) மாநாடு 2025

- ✓ **தேதி** : 2025 செப்டம்பர் 2 முதல் 4 வரை
- ✓ **இடம்** : யஷோபூமி, துவாரகா, புது தில்லி
- ✓ **ஏற்பாட்டாளர்கள்** : இந்திய செமிகண்டக்டர் மிஷன் (ISM) மற்றும் SEMI.
- ✓ **மையக்கருத்து** : "அடுத்த செமிகண்டக்டர் வல்லரசை உருவாக்குதல்"

SEMICON India 2025

- ❖ தேதி: செப்டம்பர் 2 - 4, 2025
- ❖ இடம்: யஷோபூமி (புது தில்லி)
- ❖ ஏற்பாட்டாளர்: India Semiconductor Mission (SEM)
- ❖ **கருப்பொருள்:** உலகளாவிய குறைக்கடத்தித் துறையில் இந்தியாவின் வளர்ந்து வரும் பங்கை வெளிப்படுத்துதல்.

43-வது இந்திய நரம்பியல் அறிவியல் மாநாடு

- ✓ **தேதி** : 2025 அக்டோபர் 29 முதல் நவம்பர் 1 வரை.
- ✓ **இடம்** : ராஜீவ் காந்தி உயிரிதொழில்நுட்ப மையம் - RGCB, கோவளம், திருவனந்தபுரம்
- ✓ **மையக்கருத்து :** "நரம்பு வளர்ச்சி மற்றும் மூளைக் கோளாறுகள்: ஆராய்ச்சிப் போக்குகள், தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாடு"

சர்வதேச மற்றும் தேசிய மாநாடுகள்

WAVES 2025 (World Audio Visual & Entertainment Summit)

- ✓ **தேதி** : 1–4 மே, 2025
- ✓ **இடம்** : ஜியோ உலக மாநாட்டு மையம், மும்பை
- ✓ **நடத்துபவர்** : மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்
- ✓ **மையக்கரு** : ஊடகம், பொழுதுபோக்கு மற்றும் படைப்பாற்றல் துறை.

25-வது SCO உச்சிமாநாடு (Shanghai Cooperation Organisation)

- ✓ **தேதி** : 31 ஆகஸ்ட் – 01 செப்டம்பர், 2025
- ✓ **இடம்** : தியான்ஜின், சீனா
- ✓ **மையக்கரு** : ஷாங்காய் உணர்வை நிலைநிறுத்துதல்: SCO முன்னேற்றப் பாதையில்

22வது ஆசியான்-இந்தியா உச்சிமாநாடு (ASEAN-India Summit)

- ✓ **தேதி** : 26 அக்டோபர், 2025
- ✓ **இடம்** : கோலாலம்பூர், மலேசியா
- ✓ **முக்கிய அறிவிப்பு** : 2026ஆம் ஆண்டை இந்தியா - ஆசியான் கடல்சார் ஒத்துழைப்பு ஆண்டு என அறிவித்தது.

47வது ஆசியான் உச்சிமாநாடு (ASEAN Summit)

- ✓ **தேதி** : 26–28 அக்டோபர், 2025

- ✓ **இடம்** : கோலாலம்பூர், மலேசியா
- ✓ **மையக்கரு** : உள்ளடக்கிய தன்மை மற்றும் நிலைத்தன்மை

COP30 (UN Climate Change Conference COP30)

- ✓ **தேதி** : 10–21 நவம்பர், 2025
- ✓ **இடம்** : பெலேம், பிரேசில்
- ✓ **மையக்கரு** : "முனிராவ்" (Munirao - போர்த்துகீசிய மொழியில் "கூட்டு முயற்சி" என்று பொருள்).

17வது பிரிக்ஸ் உச்சிமாநாடு (BRICS Summit)

- ✓ **தேதி** : 6–7 ஜூலை, 2025
- ✓ **இடம்** : ரியோ டி ஜெனிரோ, பிரேசில்
- ✓ **மையக்கரு** : "உலகளாவிய தெற்கு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்"

6வது பிம்ஸ்டெக் உச்சிமாநாடு (BIMSTEC Summit)

- ✓ **தேதி** : 4 ஏப்ரல், 2025
- ✓ **இடம்** : பாங்காக்
- ✓ **மையக்கரு** : பிம்ஸ்டெக்: வளமான, மீள்திறன் கொண்ட மற்றும் திறந்த அமைப்பு

AI தாக்க உச்சிமாநாடு

- ✓ **தேதி** : 10–11 பிப்ரவரி, 2025
- ✓ **இடம்** : பாரிஸ், பிரான்ஸ்
- ✓ **அம்சம்** : செயற்கை நுண்ணறிவின் (AI) சமூக-பொருளாதார தாக்கங்கள் மற்றும் கொள்கை சவால்கள் குறித்து விவாதித்தல். இது அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள், ஆராய்ச்சி சமூகம் மற்றும் தனியார் துறையை ஒருங்கிணைக்கும் ஒரு முக்கிய விவாதமாகும்.

முக்கியத் திட்டங்கள்/முன்னெடுப்புகள்

பொருளாதாரத் திட்டங்கள்
RDI திட்டம்

- இந்தியாவின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கத் திட்டம் (RDI Plan) 3 நவம்பர், 2025 அன்று ₹ 1 லட்சம் கோடி நிதியுடன் தொடங்கப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவு (AI), ரோபாட்டிக்ஸ் (Robotics), உயிரிதொழில்நுட்பம் (Biotechnology) மற்றும் எரிசக்தி (Energy) போன்ற முக்கிய உத்திகள் சார்ந்த துறைகளில் இந்தியாவின் தொழில்நுட்பச் சுயசார்பை வலுப்படுத்துவது இதன் முதன்மை நோக்கமாகும்.

ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டம்

- இது நவம்பர் 2025 ஆம் ஆண்டு ஒப்புதல் பெறப்பட்டது. அதிகப்படியான மருத்துவமனைகளை ஒருங்கிணைப்பதும், டிஜிட்டல் மருத்துவ சேவைகளை விரிவுபடுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இதற்கான நிதி ஒதுக்கீடு 2025-26 முதல் 2030-31 நிதியாண்டுகள் வரை மொத்தம் ₹ 25,060 கோடி இதற்கான மொத்த செலவு ஆகும்.

நாடு தழுவிய நிதி உள்ளடக்கல் நிறைவு முகாம்

இதன் நோக்கம்: தகுதியுள்ள ஒவ்வொரு குடிமகனும் அரசின் முக்கிய நிதித் திட்டங்களான பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா (PMJDY), பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) மற்றும் அடல் பென்ஷன் யோஜனா (APY) ஆகியவற்றை உபயோகிப்பதை உறுதி செய்தல். இந்த முகாம் 2025 ஜூலை முதல் அக்டோபர் வரை நடைபெற்றது.

வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகைத் திட்டம் (ELI Scheme)

இந்தத் திட்டம் 1 ஆகஸ்ட் 2025 முதல் 31 ஜூலை 2027 வரை அமலில் இருக்கும். இதன் நோக்கம்: புதிய பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதன் மூலம், 3.5 கோடிக்கும் அதிகமான முறையான வேலை வாய்ப்புகளை உருவாக்குவது ஆகும்.

பருப்பு உற்பத்தியில் சுயசார்பு இயக்கம்

- இந்திய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட இந்த இயக்கத்தின் நோக்கமானது 2030-31 ஆம் ஆண்டிற்குள் பருப்பு உற்பத்தியை 350 லட்சம் டன்களாக உயர்த்துவது ஆகும்.
- பருப்பு இறக்குமதியைக் குறைப்பது, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது மற்றும் நாட்டின் ஊட்டச்சத்து பாதுகாப்பை வலுப்படுத்துவது ஆகியவற்றில் இந்த இயக்கம் முக்கிய கவனம் செலுத்துகின்றது.

சமூக நலத் திட்டங்கள்

ஆயுஷ்மான் பாரத் 2.0

- சுகாதார சேவைகளை அனைத்து மக்களுக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதாகவும், மலிவானதாகவும் மாற்றுவது இதன் நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் கூடுதல் மருத்துவமனைகள் இணைக்கப்படும் மற்றும் டிஜிட்டல் மருத்துவ சேவைகள் விரிவுபடுத்தப்படும்.

பி.எம். மித்ரா பூங்கா திட்டம்

- இது "பிரதான் மந்திரி தொழில் பூங்கா திட்டம்" என்றும் அழைக்கப்படுகிறது. இந்திய ஜவுளித் துறையை உலகளாவிய அளவில் போட்டித்தன்மை மிக்கதாக மாற்றுவது இதன் குறிக்கோள் ஆகும்.
- ஜவுளித் தொழிலுக்கான உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகளை உருவாக்குதல், புதிய தொழில் பூங்காக்களை நிறுவுதல், முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் இதன் நோக்கமாகும்.

ஒரே நாடு ஒரே சந்தா திட்டம் (ONOS)

- ஒரே நாடு ஒரே சந்தா திட்டம் 1 ஜனவரி 2025 அன்று தொடங்கப்பட்டது.
- பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது மற்றும் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். 2025-26 முதல் 2029-30 வரை இத்திட்டத்திற்கான கால இலக்காகும்.

தீக்ஷா 2.0

- மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் NCERT-ஆல் நிர்வகிக்கப்படுகிறது..
- இது செப்டம்பர் 2025 (NCERT-இன் 65-வது நிறுவனர் தினத்தில் தொடங்கப்பட்டது. நோக்கம்: மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நவீன டிஜிட்டல் கற்றல் அனுபவத்தை வழங்குவது இதன் நோக்கமாகும். இது உள்ளடக்கிய மற்றும் உயர்தர கல்வியை டிஜிட்டல் முறையில் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்கள் (2025–2026)

ரிசர்வ் வங்கி (RBI) சுற்றறிக்கை மற்றும் புதிய விதிமுறை:

- RBI, 11 நவம்பர், 2025 முதல் சில விதிமுறைகளை நடைமுறைக்கு கொண்டு வந்தது. 2 ஆண்டுகளாக எந்தப் பரிவர்த்தனையும் செய்யப்படாத சேமிப்புக் கணக்குகளை மற்றும் 3 ஆண்டுகளாக எந்தப் பரிவர்த்தனையும் செய்யப்படாத நடப்புக் கணக்குகளை முடக்குதல்.

ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (UPS)

- ஒரு புதிய ஓய்வூதியத் திட்டம் 1 ஏப்ரல், 2025 முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டத்திற்கு (NPS) மாற்றாக கொண்டுவரப்பட்டது.
- இது பணவீக்கத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட மற்றும் உறுதியான ஓய்வூதிய பலன்களை வழங்குகிறது. குறைந்தபட்ச ஓய்வூதியமாக 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ₹ 10,000 ஓய்வூதியம் உறுதி செய்யப்படும்.

பாரதிய பாஷா புஸ்தக் திட்டம்

- பாரதிய பாஷா புஸ்தக் திட்டம் (BBPS) ஒரு யூனியன் பட்ஜெட் 2025-26 ஆகும். இது பள்ளி மற்றும் உயர்கல்விக்கான பாடப்புத்தகங்களை 22 இந்திய மொழிகளில் டிஜிட்டல் முறையில் உருவாக்க எடுத்த முயற்சியாகும்.
- புதிய கல்விக் கொள்கை 2020-இன் கீழ் தாய்மொழி வழிக் கல்வியை ஊக்குவித்தல். இதில் AI (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மொழி இடைவெளிகளைக் குறைக்க UGC மற்றும் AICTE அமைப்புகள் இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன.

நக்ஷா திட்டம் (NAKSHA - National Geospatial Knowledge-based Land Survey of Urban Habitations)

- நகரப்புற நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருதல், சொத்து உரிமையை துல்லியமாக ஆவணப்படுத்துதல், நகரத் திட்டமிடலை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- சொத்து தொடர்பான தகராறுகளைக் குறைத்து குடிமக்களை அதிகாரப்படுத்துதல்.

முக்கிய மசோதாக்கள் மற்றும் சட்டங்கள்

உள்துறை அமைச்சகம்

அரசியலமைப்பு (130-வது திருத்த) மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : பிரதமர், முதலமைச்சர்கள் அல்லது அமைச்சர்கள் கடுமையான குற்ற வழக்குகளில் 30 நாட்களுக்கு மேல் காவலில் வைக்கப்பட்டால், அவர்கள் தானாகவே பதவியிலிருந்து நீக்கப்பட இச்சட்டம் வழி வகுக்கிறது.

யூனியன் பிரதேசங்கள் அரசு (திருத்த) மசோதா, 2025:

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : 1963-ஆம் ஆண்டின் யூனியன் பிரதேசங்கள் அரசு சட்டத்தில் திருத்தம் செய்கிறது. புதுச்சேரி முதலமைச்சர் அல்லது அமைச்சர்கள் 30 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தால், அவர்கள் பதவி விலக வேண்டும் அல்லது நீக்கப்படுவார்கள்.

ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு (திருத்த) சட்டம், **2019** மசோதாவில் சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் அல்லது அமைச்சர்கள் கடுமையான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டால், அவர்களைப் பதவியிலிருந்து நீக்க இது வழிவகுக்கிறது.

குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதா, 2025:

- ✓ **தேதி** : ஏப்ரல் 2025.
- ✓ **முக்கிய அம்சம்** : ஒரு புதிய சட்டம் செப்டம்பர் 2025 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. வெளிநாட்டினர் இந்தியாவிற்குள் நுழைவது, தங்குவது மற்றும் வெளியேறுவது தொடர்பான நான்கு பழைய சட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே சட்டமாக மாற்றுகிறது.

பேரிடர் மேலாண்மை (திருத்த) மசோதா, 2025:

- ✓ **தேதி** : மார்ச் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : 2005-ஆம் ஆண்டின் சட்டத்தைத் திருத்துகிறது. நகரப் பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் மற்றும் மாநிலப் பேரிடர் மீட்புப் படைகளை (SDRF) வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

- ✓ ஆன்லைன் கேமிங் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை மசோதா, 2025
- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : விரைவாகப் பணம் சம்பாதிக்கலாம் என தவறான வாக்குறுதி அளிக்கும் சூதாட்டத் தளங்களைக் கட்டுப்படுத்த இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

நிதி அமைச்சகம்

சுகாதார பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு செஸ் (Cess) மசோதா, 2025

- ✓ **தேதி** : டிசம்பர் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : பான் மசாலா மற்றும் இதர அறிவிக்கப்பட்ட பொருட்கள் மீது கூடுதல் வரி (Cess) விதிக்க முன்மொழிகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் பொது சுகாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்படும்.

மத்திய கலால் வரி (திருத்த) மசோதா, 2025

- ✓ **தேதி** : டிசம்பர் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : இந்த மசோதா மத்திய கலால் சட்டம், 1944-ஐ திருத்தம் செய்கிறது. புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள் மீதான கலால் வரி விகிதங்களை தற்போதைய அளவிலேயே பராமரிக்க இது வழிவகுக்கிறது.

வரி விதிப்புச் சட்டங்கள் (திருத்த) மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : 1961 வருமான வரிச் சட்டம் மற்றும் 2025 நிதிச் சட்டத்தில் திருத்தம் செய்கிறது. இது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கான புதிய வரி விதிப்புகளை அமல்படுத்துகிறது. "2025-ஆம் ஆண்டு சட்டம், 2025-26 நிதியாண்டிற்கான மத்திய அரசின் வரி முன்மொழிவுகளை செயல்படுத்துகிறது".

கல்வி அமைச்சகம்

இந்திய மேலாண்மை நிறுவனங்கள் (IIM) (திருத்த) மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : இந்த மசோதாவின் முக்கிய நோக்கம், அசாம் மாநிலம் குவஹாத்தியில் ஒரு புதிய இந்திய மேலாண்மை நிறுவனத்தை (IIM) நிறுவுவதாகும். இது "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்" என்று அறிவிக்கப்படும். குவஹாத்தி IIM-ஐ "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக" அறிவிக்கும் வகையில், IIM சட்டம் 2017-இல் திருத்தம் செய்யப்படுகிறது.

சுரங்க அமைச்சகம்

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : இது 1957-ஆம் ஆண்டின் அசல் சட்டத்தில் திருத்தம் செய்து, இந்தியாவின் சுரங்கத் துறையை நவீனப்படுத்துவதற்கான ஒரு முக்கிய சட்டமாகும். முக்கியமான மற்றும் மூலோபாய கனிமங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல். வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல். தேசிய கனிம ஆய்வுத் திட்டத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லுதல் இதன் நோக்கங்களாகும்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம்

இந்தியத் துறைமுகங்கள் மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : 1908-ஆம் ஆண்டின் பழைய இந்தியத் துறைமுகங்கள் சட்டத்திற்குப் பதிலாக இது கொண்டு வரப்பட்டுள்ளது. துறைமுக நிர்வாகத்தை முறைப்படுத்துதல் மற்றும் எளிதாக வணிகம் செய்வதை ஊக்குவித்தல். இந்தியாவின் கடல்சார் திறனை முழுமையாகப் பயன்படுத்துதல். துறைமுகங்கள் தொடர்பான சட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஊக்குவித்தல். சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளை உருவாக்குதல் இதன் நோக்கங்களாகும். சிறு குற்றங்களுக்குச் சிறைத் தண்டனைக்குப் பதிலாக எச்சரிக்கைகள் அல்லது அபராதங்களை இச்சட்டம் வழங்குகிறது. இது நீதிமன்றங்களின் சுமையைக் குறைக்கவும், வணிக நடவடிக்கைகளை எளிதாக்கவும் உதவுவது இதன் சிறப்பம்சமாகும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சகம்

தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : இந்தியாவில் உள்ள தேசிய விளையாட்டு அமைப்புகளை அங்கீகரிக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் கண்காணிக்கவும் ஒரு சட்ட கட்டமைப்பை இது உருவாக்குகிறது. இந்திய விளையாட்டு நிர்வாகத்தை ஒலிம்பிக் சாசனம், பாராலிம்பிக் சாசனம் மற்றும் பிற சர்வதேச விளையாட்டு தரநிலைகளுடன் ஒத்திசைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு (திருத்த) மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்:** இது 2022-ஆம் ஆண்டின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தம் செய்கிறது. விளையாட்டில் ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான யுனெஸ்கோ ஒப்பந்தத்தை இந்தியாவில் முறையாக அமல்படுத்துவதை இது உறுதி செய்வது இதன் நோக்கமாகும்.

வணிகம் மற்றும் தொழில் அமைச்சகம்

ஜன் விஸ்வாஸ் (நிபந்தனைகள் திருத்தம்) மசோதா, 2025

- ✓ **தேதி** : ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய அம்சம்** : 16 மத்திய சட்டங்களில் உள்ள 355 நிபந்தனைகளை குற்றமற்றதாக மாற்றுவது அல்லது சீரமைப்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும். இது வணிகம் செய்வதையும், மக்களின் வாழ்க்கையையும் எளிதாக்க வழிவகுக்கிறது..

கூட்டுறவு அமைச்சகம்

திரிபுவன் கூட்டுறவு பல்கலைக்கழக மசோதா, 2025

- ✓ **தேதி** : ஏப்ரல் 2025
- ✓ **முக்கிய அம்சம்**: குஜராத்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம் இந்தியாவின் முதல் தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகமாக மாற்றப்படும்.
- ✓ **நோக்கம்** :கூட்டுறவுத் துறையில் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது இதன் முக்கிய குறிக்கோள்.

முக்கிய நீதித்துறை தீர்ப்புகள்

டெல்லி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் Vs லோதி பிராபர்ட்டி நிறுவனம்

- ✓ **தேதி** : 4 ஆகஸ்ட் 2025
- ✓ **முக்கிய சிக்கல்** : சுற்றுச்சூழல் சட்டம்-நீர்ச்சட்டம் மற்றும் காற்றுச் சட்டம் (பிரிவுகள் 33A, 36).
- ✓ **தீர்ப்பின் சுருக்கம்:** சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்காக வெறும் அபராதம் மட்டும் விதிப்பதற்குப் பதிலாக, அந்தப் பாதிப்பிற்கான இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்கவும், அதற்கான வங்கி உத்தரவாதத்தை கோரவும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களுக்கு (DPCC போன்ற) உச்ச நீதிமன்றம் அதிகாரம் வழங்கியுள்ளது.

முக்கிய ஒப்பந்தங்கள்/புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs)

இங்கிலாந்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள்

மூலோபாயக் கூட்டாண்மை மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம்

தேதி : அக்டோபர் 2025
முக்கியத்துவம் : தொழில்நுட்பம், புத்தாக்கம், பாதுகாப்புத் துறை மற்றும் காலநிலை, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

கனிம வழங்கல் மற்றும் தொழில் கூட்டாண்மை ஒப்பந்தம்

தேதி : அக்டோபர் 2025
முக்கியத்துவம் : முக்கியமான கனிமங்களின் விநியோகச் சங்கிலி, உயிரியல் உற்பத்தி, 3D பயோ-பிரிண்டிங் மற்றும் மரபியல் ஆகிய துறைகளில் நிறுவன ரீதியான கூட்டாண்மையை உருவாக்குதல்.

வணிகம் மற்றும் வர்த்தக ஒப்பந்தம்

தேதி : ஜூலை 2025
முக்கியத்துவம் : இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக திட்டமிடப்பட்ட விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA / Free Trade Agreement).

முக்கியக் குறியீடுகள் மற்றும் அறிக்கைகள்

தேசியக் குறியீடுகள்

குறியீடு (வெளியிடுபவர்)	முதலிடம் / சிறப்பான செயல்பாட்டாளர்கள்	முக்கியத் தகவல்கள்
NIRF இந்திய தர வரிசை 2025 (கல்வி அமைச்சகம்)	1. IIT மெட்ராஸ் 2. IISc பெங்களூரு 3. IIT மும்பை	பொறியியல், மேலாண்மை, மருத்துவம் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கான தரவரிசை.
மாநில எரிசக்தி திறன் குறியீடு2024 (மின்சக்தி அமைச்சகம்)	1. மகாராஷ்டிரா (குழு 1-ல் முதலிடம்) 2. ஆந்திரப் பிரதேசம் (குழு 2) 3. அசாம் (குழு 3) 4. திரிபுரா (குழு 4)	கட்டிடம், தொழில் மற்றும் போக்குவரத்து போன்ற 7 துறைகளில் 66 குறிகாட்டிகளின் அடிப்படையில் 36 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் மதிப்பீடு.

சர்வதேசக் குறியீடுகள்

- ✓ உலகளாவிய திறமைப் போட்டித்திறன் குறியீடு 2025 (INSEAD) – சிங்கப்பூர் - இந்தியா (100வது)
- ✓ காலநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு 2026 (German watch): இதில் டென்மார்க் சிறந்து விளங்குகிறது - இந்தியா 23-வது இடத்தில் உள்ளது.
- ✓ ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு 2025 (Henley & Partners) – சிங்கப்பூர் 85-வது இடம்.
- ✓ நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) குறியீடு 2025 (UN SDSN) – பின்லாந்து 99-வது இடம்.
- ✓ எரிசக்தி மாற்றக் குறியீடு 2025 (WEF) – சுவீடன் 71-வது இடம்.
- ✓ உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீடு 2025 (WEF) – ஐஸ்லாந்து 131-வது இடம்.
- ✓ மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI) 2025 (UNDP) – ஐஸ்லாந்து 130-வது இடம்.
- ✓ பத்திரிக்கை சுதந்திரக் குறியீடு 2025 (RSF) – நார்வே 151-வது இடம்.
- ✓ உலக மகிழ்ச்சிக் குறியீடு 2025 (Oxford & UN SDSN) – பின்லாந்து 118-வது இடம்.
- ✓ உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு 2025 (IEP) – பர்கினா ∴பாசோ 14-வது இடத்தில் உள்ளது
- ✓ ஊழல் புலனாய்வுக் குறியீடு 2025 (Transparency International) – டென்மார்க் 96-வது இடம்.
- ✓ சைபர் பாதுகாப்பு குறியீடு 2025 (ITU) – செக் Tier 1 (முதல் நிலை) அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

குழந்தை ஊட்டச்சத்து அறிக்கை 2025

வெளியிடும் நிறுவனம் யுனிசெ.ப் (UNICEF)

- ✓ **முக்கியத் தரவுகள்:** 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 5% பேரும், 5 - 19 வயதுடைய சிறுவர்கள் மற்றும் இளைஞர்களில் 20% பேரும் தற்போது அதிக உடல் எடையுடன் (Overweight) வாழ்கின்றனர். இது 2000-ம் ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகம். 2025-ல், பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே உடல் பருமன் (Obesity) 9.4% ஆகவும், குறைந்த உடல் எடை (Underweight) 9.2% ஆகவும் உள்ளது.

உலக எரிசக்தி அவுட்லுக் 2025

வெளியிடும் நிறுவனம் சர்வதேச எரிசக்தி முகமை (IEA)

முக்கியத் தரவுகள்:

எரிசக்திப் பாதுகாப்பு, கட்டுப்படியாகும் தன்மை மற்றும் நிலைத்தன்மை தொடர்பான கவலைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த வழிகள் குறித்து அரசாங்கங்கள் வெவ்வேறு முடிவுகளுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

- ✓ உலக நகரமயமாக்கல் வாய்ப்புகள் 2025 - UN DESA
- ✓ காலநிலை நடவடிக்கை நிலை அறிக்கை 2025 - உலக வள நிறுவனம்
- ✓ உலகளாவிய காசநோய் அறிக்கை 2025 - உலக சுகாதார நிறுவனம் (WHO)
- ✓ உமிழ்வு இடைவெளி அறிக்கை 2025 - UNEP
- ✓ உலகப் பொருளாதார அவுட்லுக் (அக்டோபர் 2025) - சர்வதேச நாணய நிதியம்
- ✓ உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2025 - உலக வங்கி குழுமம்

முக்கிய செயலிகள் மற்றும் இணையதளங்கள்

பெயர் (தொடங்கப்பட்ட தேதி)	வெளியிட்ட அமைப்பு	தகவல் / நோக்கம்
சஞ்சார் சாதி (டிசம்பர் 2025)	தொலைத்தொடர்பு துறை	மொபைல் சந்தாதாரர்களுக்கு அதிகாரம் அளிக்கவும், அவர்களின் பாதுகாப்பை வலுப்படுத்தவும் கொண்டுவரப்பட்ட குடிமக்கள் மைய முயற்சி
TIA போர்டல் (நவம்பர் 2025)	வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம்	இது எளிதில் அணுகக்கூடிய, நிலையான மற்றும் பயனர் நட்பு வடிவமைப்பைக் கொண்ட திறந்த மூல (Open-source) டிஜிட்டல் தளமாகும்.
MY Bharat மொபைல் செயலி (அக்டோபர் 2025)	மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்	இளைஞர்கள் தேசிய முன்னெடுப்புகளில் பங்கேற்பதை எளிதாக்கவும், அவர்களை அதிகாரப்படுத்தவும் உருவாக்கப்பட்ட தளம்
திரவியா (DRAVYA) போர்டல் (செப்டம்பர் 2025)	ஆயுஷ் அமைச்சகம் (CCRAS ஆல் உருவாக்கப்பட்டது)	இது ஆயுர்வேத பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களுக்கான டிஜிட்டல் களஞ்சியமாக (Digital Repository) செயல்படுகிறது.
சமீர் 2.0 செயலி (செப்டம்பர் 2025)	மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (CPCB)	காற்றின் தரத்தைக் கண்காணிக்கவும், தனிப் பயனாக்கப்பட்ட எச்சரிக்கைகள் மற்றும் இருப்பிடம் சார்ந்த சேவைகளை வழங்கவும் உதவுகிறது.
ஞான பாரதம் போர்டல் (செப்டம்பர் 2025)	கலாச்சார அமைச்சகம்	பண்டைய கையெழுத்துப் பிரதிகளை டிஜிட்டல் மயமாக்கவும், பாதுகாக்கவும் மற்றும் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவரவும் உருவாக்கப்பட்ட தளம்.
சஞ்சார் சாதி செயலி (22 மொழிகள்) (ஆகஸ்ட் 2025)	தொலைத் தொடர்புத் துறை	இந்தச் செயலி ஹிந்தி மற்றும் 21 பிராந்திய மொழிகளில் வெளியிடப்பட்டது, இதனால் இந்தியாவின் அனைத்துப் பகுதி மக்களையும் சென்றடைய முடியும்.
CARES 2.0 (ஜூன் 2025)	நிலக்கரி அமைச்சகம்	பி.எ.ஃ.ப் (PF) மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்காக C-DAC அமைப்பால் உருவாக்கப்பட்டது.
உமீத் (UMEED) போர்டல் (ஜூன் 2025)	சிறுபான்மையினர் விவகார அமைச்சகம்	வக்.ஃ.ப் (Waqf) சொத்துக்களை நிகழ்நேரத்தில் பதிவேற்றம் செய்யவும், சரிபார்க்கவும் மற்றும் கண்காணிக்கவும் உதவுகிறது.
SAHAV போர்டல் (ஜூன் 2025)	புவி அறிவியல் அமைச்சகம்	கடல்சார் தரவுகளை வெளிப்படைத்தன்மையுடன் நிர்வகிப்பதற்காக பிரான்சில் நடைபெற்ற 3-வது ஐநா கடல் மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
டெப்போ தர்பன் (Depot Darpan) (மே 2025)	நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு அமைச்சகம்	FCI மற்றும் CWC போன்ற அமைப்புகளால் நிர்வகிக்கப்படும் உணவு சேமிப்பு கிடங்குகளைக் கண்காணிக்கவும் சுய மதிப்பீடு செய்யவும் உதவுகிறது

PAI 2.0 போர்டல் (மே 2025)	தேசிய தகவலியல் மையம் (NIC)	தரவு சார்ந்த திட்டமிடல் மூலம் அடிமட்ட அளவிலான நிர்வாகத்தை (பஞ்சாயத்து ராஜ்) வலுப்படுத்துதல்
NITI-NCAER மாநில பொருளாதார மன்றம் (ஏப்ரல் 2025)	நிதி ஆயோக் (NITI Aayog)	1990-91 முதல் 2022-23 வரையிலான சமூக, பொருளாதார மற்றும் நிதித் தரவுகளை ஒருங்கிணைக்கும் டிஜிட்டல் களஞ்சியம்.
பிரவா (PRAVAAH) போர்டல் (ஏப்ரல் 2025)	இந்திய ரிசர்வ் வங்கி (RBI)	ஒழுங்குமுறை விண்ணப்பங்கள், சரிபார்ப்பு மற்றும் அங்கீகாரத்திற்கான ஒரு ஒருங்கிணைந்த தளம்.
ஆதார் நல்லாட்சி போர்டல் (மார்ச் 2025)	மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்	ஆதார் அங்கீகாரக் கோரிக்கைகளுக்கான ஒப்புதல் செயல்முறையை எளிதாக்குதல்.
ISPOT (SEBI போர்டல்) (மார்ச் 2025)	செபி (SEBI)	பங்குச் சந்தைகளில் ஏற்படும் தொழில் நுட்பக் கோளாறுகள் குறித்த விரிவான ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பிக்க உதவும் தளம்.

முக்கிய செயலிகள் மற்றும் இணைய தளங்கள்

சுகம்ய பாரத் செயலி

தேதி : அக்டோபர் 2025
வெளியிட்ட அமைப்பு : மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறை.
முக்கிய அம்சம் : மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகல் வசதிகளை (Accessibility) மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. பொது இடங்களில் உள்ள தடைகளை புகாரளிக்கவும், உள்ளடக்கிய உள்கட்டமைப்பை மேம்படுத்த கருத்துக்களைப் பகிரவும் இது உதவுகிறது. இது "அணுகக்கூடிய இந்தியா" (Accessible India Campaign) திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

My UPSC Interview: கனவு நனவாகும் தளம் (From Dream to Reality Portal)

தேதி : அக்டோபர் 2025
வெளியிட்ட அமைப்பு : மத்திய பொதுப்பணி ஆணையம் (UPSC)
முக்கிய அம்சம் : சிவில் சர்வீஸ் தேர்வுக்குத் தயாராகும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் செயல்முறையை அதிக வெளிப்படைத்தன்மையுடனும், ஊக்கமளிப்பதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

PM e-Vidya மொபைல் செயலி

தேதி : செப்டம்பர் 2025
வெளியிட்ட அமைப்பு : கல்வி அமைச்சகம்.
முக்கிய அம்சம் : PM e-Vidya திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து டிஜிட்டல் மற்றும் ஒளிபரப்பு கல்வி முயற்சிகளையும் அணுகுவதற்கான ஒரே நுழைவாயில். இது BISAG-N அமைப்பின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது.

ஆயுஷ் நிவேஷ் சாரதி போர்டல் (Ayush Nivesh Sarathi Portal)

தேதி : ஜூன் 2025
வெளியிட்ட அமைப்பு : ஆயுஷ் அமைச்சகம்.
முக்கிய அம்சம் : பாரம்பரிய மருத்துவத் துறையில் உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக "இன்வெஸ்ட் இந்தியா" (Invest India) அமைப்புடன் இணைந்து இது உருவாக்கப்பட்டுள்ளது.

ஸ்வாரயில் சூப்பர் (SwaRail Super)

தேதி : பிப்ரவரி 2025
வெளியிட்ட அமைப்பு : இரயில்வே அமைச்சகம்.
முக்கிய அம்சம் : இந்திய இரயில்வேயின் அனைத்து பொதுப் பயன்பாட்டுச் செயலிகளையும் ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கிறது.

பாரத்போல் போர்டல் (BHARATPOL Portal)

தேதி : ஜனவரி 2025
வெளியிட்ட அமைப்பு : மத்திய புலனாய்வு அமைப்பு (CBI)
முக்கிய அம்சம் : சர்வதேச காவல்துறை உதவியை விரைவாகப் பெறுவதற்காக நிகழ்நேரத் தகவல்களைப் பகிரும் தளம்

பாண்ட் சென்ட்ரல் போர்டல் (Bond Central Portal)

தேதி : மார்ச் 2025
வெளியிட்ட அமைப்பு : செபி (SEBI)
முக்கிய அம்சம் : கார்ப்பரேட் பத்திர சந்தையில் சிறு முதலீட்டாளர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்ட கார்ப்பரேட் பத்திரங்களுக்கான ஒரு மையப்படுத்தப்பட்ட தரவுத்தளம்.

அன்ன மித்ரா செயலி (Anna Mitra App)

தேதி : ஜூன் 2025
வெளியிட்ட அமைப்பு : உணவு மற்றும் பொது விநியோகத் துறை.
முக்கிய அம்சம் : நியாயவிலைக் கடை (FPS) டீலர்கள், உணவு ஆய்வாளர்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கு இருப்புத் தரவுகள் (Stock data) மற்றும் எச்சரிக்கைகளை நிகழ்நேரத்தில் வழங்குகிறது.

முக்கிய ராணுவப் பயிற்சிகள்

எக்சர்சைஸ் சைக்ளோன்

- ✓ 10 – 23 பிப்ரவரி
- ✓ மகாஜன் ∴பீல்ட் ∴பைரிங் ரேஞ்ச், ராஜஸ்தான்.
- ✓ இந்திய மற்றும் எகிப்து நாட்டு ராணுவங்கள் (Army)

எக்சர்சைஸ் டெசர்ட் ஹன்ட்

- ✓ 24 – 28 பிப்ரவரி
- ✓ ஜோத்பூர் விமானப்படை தளம், ராஜஸ்தான்
- ✓ இது இந்தியாவின் முப்படைகளும் (விமானப்படை, ராணுவம், கடற்படை) இணைந்து நடத்திய ஒரு ஒருங்கிணைந்த சிறப்புப் படைப் பயிற்சியாகும்

எக்சர்சைஸ் திரிசூல்

- ✓ 30 அக்டோபர் – 13 நவம்பர்
- ✓ ராஜஸ்தான் மற்றும் குஜராத்
- ✓ இந்திய முப்படைகள் (Army, Air Force, Navy)

பாஸேஜ் பயிற்சி

- ✓ 9 – 10 ஜூன்
- ✓ வடக்கு அரபிக்கடல்
- ✓ இந்தியா மற்றும் இங்கிலாந்து (UK) கடற்படைகள்

எக்சர்சைஸ் போல்ட் குருக்ஷேத்ரா

- ✓ 27 ஜூலை – 4 ஆகஸ்ட்
- ✓ ஜோத்பூர், ராஜஸ்தான்
- ✓ இந்தியா மற்றும் சிங்கப்பூர் ராணுவங்கள்

திவ்ய திருஷ்டி

- ✓ ஜூலை 2025
- ✓ கிழக்கு சிக்கிம்
- ✓ இந்திய ராணுவம் (Indian Army)

ட்ரோன் கவாச்

- ✓ 25 – 28 செப்டம்பர்
- ✓ அருணாச்சல பிரதேசம்
- ✓ இந்திய ராணுவம் மற்றும் ITBP (இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை)

கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி (சாகர் கவாச்)

- ✓ 1 – 22 பிப்ரவரி
- ✓ மேற்கு வங்கத்தின் 158 கி.மீ நீளமுள்ள கடற்கரை பகுதி
- ✓ இந்திய கடலோர காவற்படை (Indian Coast Guard)

போங்கோசாகர்

- ✓ மார்ச் 2025
- ✓ வங்காள விரிகுடா
- ✓ இந்தியா மற்றும் வங்கதேசக் கடற்படைகள்

சமுத்ர சக்தி

- ✓ 14 – 17 அக்டோபர்
- ✓ விசாகப்பட்டினம்
- ✓ இந்தியா மற்றும் இந்தோனேசியக் கடற்படைகள்

டைகர் ட்ரையம்ப்

- ✓ 1 – 13 ஏப்ரல்
- ✓ இந்தியாவின் கிழக்குக் கடற்கரை
- ✓ இந்தியா மற்றும் அமெரிக்கா (USA) ஆகிய நாடுகளின் முப்படைகள்.

எக்சர்சைஸ் இந்த்ரா

- ✓ 28 மார்ச் – 2 ஏப்ரல்
- ✓ சென்னை (தமிழ்நாடு)
- ✓ இந்தியா மற்றும் ரஷ்யக் கடற்படைகள்

எக்சர்சைஸ் வருணா

- ✓ 19 – 22 மார்ச்
- ✓ இந்தியப் பெருங்கடல்
- ✓ இந்தியா மற்றும் பிரான்ஸ் கடற்படைகள்

கொங்கன் பயிற்சி

- ✓ 5 – 12 அக்டோபர்
- ✓ மேற்கு கடற்கரை (இந்தியா)
- ✓ கடற்படை (இந்தியா மற்றும் இங்கிலாந்து)

இருதரப்பு மற்றும் பலதரப்பு ராணுவப் பயிற்சிகள்

பயிற்சியின் பெயர்	காலம்	இடம்	பிரிவு	பங்கேற்கும் நாடுகள்
ஹரிமாவ் சக்தி 2025	5–18 டிசம்பர்	ராஜஸ்தான்	ராணுவம்	இந்தியா - மலேசியா
கருடா சக்தி 2025	3–12 டிசம்பர்	பக்லோ (ஹிமாச்சல பிரதேசம்)	ராணுவம்	இந்தியா - இந்தோனேசியா
14-வது எகுவெரின் (EKUVERIN)	2–15 டிசம்பர்	திருவனந்தபுரம் (கேரளா)	ராணுவம்	இந்தியா - மாலத்தீவு
சூர்யகிரண்-XIX 2025	25 நவம்பர் – 8 டிசம்பர்	பித்தோராகர் (உத்தரகண்ட்)	ராணுவம்	இந்தியா – நேபாளம்
அஜேய வாரியர் 2025	17–30 நவம்பர்	ராஜஸ்தான்	ராணுவம்	இந்தியா - ஐக்கிய இராச்சியம் (UK)
கருடா 2025	16–27 நவம்பர்	பிரான்ஸ்	விமானப்படை	இந்தியா - பிரான்ஸ்
மலபார் 2025	10–18 நவம்பர்	குவாம் (புரயஅ)	கடற்படை	இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா
ஆஸ்ட்ரா ஹிந்த் (AUSTRAHIND)	13–26 அக்டோபர்	பெர்த் (ஆஸ்திரேலியா)	ராணுவம்	இந்தியா - ஆஸ்திரேலியா
ஜிமெக்ஸ் (JIMEX) 2025	16–18 அக்டோபர்	யோகோசுகா, ஜப்பான்	கடற்படை	இந்தியா - ஜப்பான்
IN-RoKN 2025 (முதல் முறை)	13 அக்டோபர்	பூசன் கடற்படை தளம்	கடற்படை	இந்தியா - தென்கொரியா
மைத்ரி (14-வது)	1–14 செப்டம்பர்	உம்ரோய் (மேகாலயா)	ராணுவம்	இந்தியா - தாய்லாந்து
யுத் அபியாஸ் (21-வது)	1–14 ஆகஸ்ட்	அலாஸ்கா, அமெரிக்கா	ராணுவம்	இந்தியா - அமெரிக்கா
ஸ்லினெக்ஸ் (SLINEX-12-வது)	14–18 ஆகஸ்ட்	இலங்கை	கடற்படை	இந்தியா - இலங்கை
சிம்பெக்ஸ் (SIMBEX-12-வது)	28 ஜூலை – 1 ஆகஸ்ட்	சிங்கப்பூர்	கடற்படை	இந்தியா - சிங்கப்பூர்
சக்தி (8-வது)	18 ஜூன் – 1 ஜூலை	லா கவலரி, பிரான்ஸ்	ராணுவம்	இந்தியா - பிரான்ஸ்
டெசர்ட் பிளாக்-10 (Desert Flag)	21 ஏப்ரல் – 8 மே	அல் தஃப்ரா தளம், ருயுது	விமானப்படை	பலதரப்பு (12 நாடுகள்)
டஸ்ட்லிக் (DUSTLIK-6-வது)	16–28 ஏப்ரல்	புனே, இந்தியா	ராணுவம்/விமானம்	இந்தியா - உஸ்பெகிஸ்தான்
கவாச்-XII (12-வது)	10–23 மார்ச்	டோக்'ர், கிர்கிஸ்தான்	ராணுவம்	இந்தியா - கிர்கிஸ்தான்

தர்ம கார்டியன் (6-வது)	24 பிப்ரவரி – 9 மார்ச்	ஜப்பான்	ராணுவம்	இந்தியா - ஜப்பான
கொமோடோ (KOMODO) 2025	15–22 பிப்ரவரி	பாலி, இந்தோனேசியா	கடற்படை	பலதரப்பு (30 + நாடுகள்)
எகுவெரின் (13-வது)	2–15 பிப்ரவரி	மா.ீபுஷி, மாலத்தீவு	ராணுவம்	இந்தியா - மாலத்தீவு
சூர்ய கிரண் (18-வது)	31 டிசம்பர்– 13 ஜனவரி	சல்ஜாண்டி, நேபாளம்	ராணுவம்	இந்தியா, நேபாளம்

முக்கிய நடவடிக்கைகள் மற்றும் மிஷன்கள்

ஆபரேஷன் சாகர் பந்து (டிசம்பர்): "டிட்வா" (Ditwah) சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உடனடி நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கியது.

ஆபரேஷன் அஜய் 2025 (அக்டோபர்): இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் நிலவும் மோதல் காரணமாக சிக்கித் தவிக்கும் இந்திய குடிமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றியது.

ஆபரேஷன் மேக் ராஹத் 2025 (ஜூலை): வடகிழக்கு இந்தியாவில் ஏற்பட்ட பேரழிவு வெள்ளத்தின் போது மீட்புப் பணிகளை மேற்கொண்டு அத்தியாவசியப் பொருட்களை வழங்கியது.

ஆபரேஷன் "சிந்து" (ஜூன்): பிராந்திய பதற்றங்களுக்கு மத்தியில், மோதல் மண்டலங்களிலிருந்து இந்தியக் குடிமக்களை வெளியேற்ற ஈரான் மற்றும் இஸ்ரேல் நடவடிக்கை.

ஆபரேஷன் கருணா 2025 (மே): சூறாவளியால் பாதிக்கப்பட்ட அண்டை நாடுகளுக்கு "அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை" கொள்கையின் கீழ் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கியது.

ஆபரேஷன் மகாதேவ் (மே): இந்திய ராணுவத்தின் சினார் கார்ப்ஸ், சிஆர்பிஎப் (CRPF) மற்றும் ஜம்மு காஷ்மீர் போலீஸ் இணைந்து நடத்திய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை.

ஆபரேஷன் எக்சர்சைஸ் (மே): தேசிய அளவில் குடிமக்கள் மற்றும் பாதுகாப்பு முகமைகளின் அவசரகால தயார்நிலை மற்றும் மீட்புத் திறனை மேம்படுத்தும் நடவடிக்கை.

ஆபரேஷன் நாரி சக்தி 2025 (மார்ச் - ஏப்ரல்): வெளிநாடுகளில் இன்னலுக்கு ஆளான பெண் தொழிலாளர்களை மீட்டெடுத்து மறுவாழ்வு அளித்தல்.

ஆபரேஷன் பிரம்மா (மார்ச்): மியான்மரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கியது.

ஆபரேஷன் சிந்தூர்

- ✓ **தேதி** : மே 2025
- ✓ **வகை** : ராணுவப் பதிலடி நடவடிக்கை (Counter-military operation).
- ✓ **நோக்கம்** : பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (PoK) உள்ள ஒன்பது பயங்கரவாத முகாம்கள் மீது துல்லியமானத் தாக்குதல்களை (Precision strikes) நடத்தியது.

ஆபரேஷன் பிளாக் .ீபாரஸ்ட்

- ✓ **தேதி** : மே 2025
- ✓ **வகை** : உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கை (நக்ஸலைட் எதிர்ப்பு).
- ✓ **நோக்கம்** :சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானா எல்லைகளில் நக்ஸலைட்/மாவோயிஸ்ட் நடவடிக்கைகளை ஒழித்தல்.

ஞான பாரதம் மிஷன்

- ✓ **தேதி** : ஜூன் 2025
- ✓ **வகை** : கலாச்சார மற்றும் அறிவுப் பாதுகாப்பு பணி.
- ✓ **நோக்கம்** :இந்தியாவின் பண்டைய கையெழுத்துப் பிரதிகளை ஆய்வு செய்தல், ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல்.

ஆபரேஷன் வாட்டர் ரிலீ.ப் 2

- ✓ **தேதி** : ஜூலை 2025
- ✓ **வகை** : பேரிடர் நிவாரண நடவடிக்கை.
- ✓ **நோக்கம்** : பருவமழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்களை மீட்டு நிவாரணம் வழங்குதல்.

முக்கிய ஆணையங்கள் மற்றும் குழுக்கள்

குழுவின் பெயர் (அமைக்கப்பட்ட காலம்)	தலைவர்	நோக்கம்/அதிகாரம்
மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPFs) நவீனமயமாக்கல் குழு (நவம்பர் 2025)	ஆர்.கே. மிஸ்ரா	நவீன ஆயுதங்கள், தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் அடிப்படை உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நிதித் தேவைகள் மற்றும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.
G20 உச்சிமாநாடு 2026 ஆயத்தக் குழு (அக்டோபர் 2025)	ஹர்ஷவர்தன் ஷரிங்லா	2026-ல் நடைபெறவுள்ள G20 உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவையான நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் தளவாட அம்சங்களைத் திட்டமிடுதல்.
குறைக்கடத்தி (Semiconductor) சுற்றுச்சூழல் மேம்பாட்டு கண்காணிப்புக் குழு (ஆகஸ்ட் 2025)	மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் MeitY	இந்தியாவில் குறைக்கடத்தி உற்பத்தியை மேம்படுத்தவும், "இந்தியா செமிகண்டக்டர் மிஷன்" கீழ் முதலீடுகளை ஈர்க்கவும் பரிந்துரைகளை வழங்குதல்
இரயில்வே பாதுகாப்பு மற்றும் நவீனமயமாக்கல் உயர்மட்டக் குழு (ஜூலை 2025)	அனில் குமார் லஹோட்டி	இரயில் விபத்துகளைத் தடுக்கவும், பாதுகாப்புத் தரங்களை உயர்த்தவும் மற்றும் ஒட்டுமொத்த இரயில்வே வலையமைப்பை நவீனப்படுத்தவும் நீண்டகாலத் திட்டத்தைத் தயாரித்தல்.
நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் (UCBs) புத்துயிர் குழு (ஜூன் 2025)	ஜி.எம். சுப்பிரமணியம்	நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் நிதித் தாராளத்தன்மையை வலுப்படுத்தவும், அவற்றின் ஒழுங்குமுறை கட்டமைப்பில் சீர்திருத்தங்களை பரிந்துரைக்கவும் அமைக்கப்பட்ட குழு
டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம் (DPDP) அமலாக்கக் குழு (ஏப்ரல் 2025)	நீதியரசர் (ஓய்வு) ஏ.கே. சிக்ரி	தரவு பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள தொழில்நுட்ப சவால்கள் மற்றும் சட்ட ரீதியான தெளிவற்ற தன்மைகளுக்குத் தீர்வு காணப் பரிந்துரைத்தல்.

முக்கிய புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்

- Native Nations: A Millennium in North America – கேத்லீன் துவால்
- வித்தியாசமானவர்கள், ஆனால் குறைவானவர்கள் அல்ல – அனுபம் கெர்
- Mother Mary Comes to Me – அருந்ததி ராய்
- அரசியலமைப்பு ஏன் முக்கியமானது – D.Y. சந்திரசூட்
- எம்.எஸ். சுவாமிநாதன்: இந்தியாவிற்கு உணவளித்த மனிதர் – பிரியம்பதா ஜெயகுமார்
- ஆபரேஷன் சிந்தூர் - The Fire that Silenced Terror – டாக்டர் D.C.. ராவ்

புத்தகங்கள்	ஆசிரியர்கள்
ஒரு காலத்தில் யானைகள் இங்கே வாழ்ந்தன	கீதாஞ்சலி ஸ்ரீ
Ready, Relevant and Resurgent II: Shaping a Future Ready Force	ஜெனரல் அனில் சவுகான்
Operation Sindoor: The Untold Story of India's Deep Strikes Inside Pakistan	லெப்டினன்ட் ஜெனரல் கே.ஜே.எஸ். தில்லான் (ஓய்வு)
India 5000 Years of History on the Subcontinent	ஆட்ரி ட்ருஷ்கே
Wid Fictions	அமிதவ் கோஷ்
Another Day in Landour	ரஸ்கின் பாண்ட்
(இந்தியா G 20 சிகரத்தை எட்டியது எப்படி?	அமிதாப் காந்த்

முக்கியமான தினங்கள் மற்றும் கருப்பொருள்கள்

- **மனித உரிமைகள் தினம் :** டிசம்பர் 10 - மனித உரிமைகள், நமது அன்றாட அத்தியாவசியங்கள்.
- **சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் :** டிசம்பர் 9 - ஊழலுக்கு எதிராக இளைஞர்களை ஒன்றிணைத்தல்: நாளைய நேர்மையை வடிவமைத்தல்.
- **சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினம்**: டிசம்பர் 7 - பாதுகாப்பான வானம், நிலையான எதிர்காலம்: அடுத்த 80 ஆண்டுகளுக்காக ஒன்றிணைவோம்.
- **உலக மண் தினம்**: டிசம்பர் 5 - ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண்.
- **சர்வதேச சிறுத்தை (Cheetah) தினம்:** டிசம்பர் 4 - சிறுத்தைகளையும் நமது கிரகத்தையும் பாதுகாப்போம்.
- **அடிமைமுறை ஒழிப்புக்கான சர்வதேச தினம்**: டிசம்பர் 2 - கடந்த காலத்தை அங்கீகரிப்போம், நிகழ்காலத்தை சரிசெய்வோம், கண்ணியமான எதிர்காலத்தை உருவாக்குவோம்.
- **உலக எய்ட்ஸ் தினம்:** டிசம்பர் 1 - இடையூறுகளை முறியடிப்போம், எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளை மாற்றுவோம்.
- **உலக கழிப்பறை தினம்:** நவம்பர் 19 - மாறிவரும் உலகில் சுகாதாரம்.
- **உலக நீரிழிவு தினம்:** நவம்பர் 14 - வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் நீரிழிவு நோய்.
- **அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம்:** நவம்பர் 10 - நம்பிக்கை, மாற்றம் மற்றும் நாளை: 2050-க்கு நமக்குத் தேவையான அறிவியல்.
- **ஐக்கிய நாடுகள் தினம்:** அக்டோபர் 24 - ஐக்கிய நாடுகள் சபையின் 80-வது ஆண்டு: நமது எதிர்காலத்தை இணைந்து உருவாக்குவோம்.
- **வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினம்:** அக்டோபர் 17 - குடும்பங்களுக்கு மரியாதையையும் பயனுள்ள ஆதரவையும் உறுதி செய்வதன் மூலம் சமூக மற்றும் நிறுவன ரீதியான முறைகேடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.
- **சர்வதேச கிராமப்புற பெண்கள் தினம்:** அக்டோபர் 15 - கிராமப்புற பெண்களின் எழுச்சி – பெய்ஜிங் + 30 டன் மீள்தன்மை கொண்ட எதிர்காலத்தை வடிவமைத்தல்.
- **சர்வதேச வன்முறை எதிர்ப்பு தினம்:** அக்டோபர் 2 - வன்முறைக்கு "வேண்டாம்" என்று சொல்லுங்கள்.
- **சர்வதேச அமைதி தினம்:** செப்டம்பர் 21 - அமைதியான உலகிற்காக இப்போதே செயல்படுங்கள்.

- **சர்வதேச ஜனநாயக தினம்:** செப்டம்பர் 15 - ஜனநாயக விழுமியங்களுக்கான புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய அர்ப்பணிப்பு.
- **சர்வதேச எழுத்தறிவு தினம்:** செப்டம்பர் 8 - டிஜிட்டல் யுகத்தில் எழுத்தறிவை ஊக்குவித்தல்.
- **சர்வதேச இளைஞர் தினம்:** ஆகஸ்ட் 12 - நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) உள்ளூர் மயமாக்கும் இளைஞர்கள்.
- **சர்வதேச புலிகள் தினம்:** ஜூலை 29 - பழங்குடியின மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களை மையமாகக் கொண்டு புலிகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்தல்.
- **உலக ஹெபடைடிஸ் தினம்:** ஜூலை 28 - ஹெபடைடிஸ்: அதை முறியடிப்போம்.
- **உலக இளைஞர் திறன் தினம்:** ஜூலை 15 - AI மற்றும் டிஜிட்டல் திறன்கள் மூலம் இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல்.
- **உலக மக்கள் தொகை தினம்:** ஜூலை 11 - இளைஞர்கள் விரும்பும் குடும்பங்களை உருவாக்க அவர்களுக்கு அதிகாரம் அளித்தல்.
- **சர்வதேச கூட்டுறவு தினம்:** ஜூலை 5 - கூட்டுறவு: சிறந்த உலகிற்கான உள்ளடக்கிய மற்றும் நிலையான தீர்வுகளை இயக்குதல்.
- **உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்:** ஜூன் 12 - முன்னேற்றம் தெளிவாக உள்ளது, ஆனால் செய்ய வேண்டியவை இன்னும் உள்ளன: முயற்சிகளை விரைவுபடுத்துவோம்.
- **உலக சுற்றுச்சூழல் தினம்:** ஜூன் 5 - பிளாஸ்டிக் மாசுபாட்டை வெல்வோம்.
- **உலக புகையிலை எதிர்ப்பு தினம்:** மே 31 - புகையிலை மற்றும் நிகோடின் தயாரிப்புகள் குறித்த தொழில்துறை தந்திரங்களை அம்பலப்படுத்துதல்.
- **உலகப் பத்திரிக்கை சுதந்திர தினம்:** மே 3 –AI புரட்சியின் மத்தியில் கருத்து சுதந்திரம்.
- **சர்வதேச புவி தினம்:** ஏப்ரல் 22 - பூமித் தாய் நமக்கு ஒரு செய்தியை அனுப்பும்போது...
- **உலக பாரம்பரிய தினம்:** ஏப்ரல் 18 - பேரிடர்கள் மற்றும் மோதல்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் பாரம்பரியம்.
- **உலக ஹோமியோபதி தினம்:** ஏப்ரல் 10 - கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி.
- **உலக காசநோய் தினம்:** மார்ச் 24 - ஆம்! நம்மால் காசநோயை ஒழிக்க முடியும்: அர்ப்பணிப்பு, முதலீடு, விநியோகம்.
- **சர்வதேச மகளிர் தினம்:** மார்ச் 8 - அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக: உரிமை, சமத்துவம், அதிகாரம்.
- **உலக வனவிலங்கு தினம்:** மார்ச் 3 - வனவிலங்குகளின் கணக்கிட முடியாத மதிப்பு.
- **பூஜ்ஜிய பாகுபாடு தினம்:** மார்ச் 1 - நாம் ஒன்றாக நிற்போம்.
- **சர்வதேச தாய்மொழி தினம்:** பிப்ரவரி 21 - சர்வதேச தாய்மொழி தினத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம்.
- **உலக சமூக நீதி தினம்:** பிப்ரவரி 20 - நிலையான எதிர்காலத்திற்காக நியாயமான மாற்றத்தை வலுப்படுத்துதல்.
- **உலக சதுப்பு நில தினம்:** பிப்ரவரி 2 - நமது பொதுவான எதிர்காலத்திற்காக சதுப்பு நிலங்களைப் பாதுகாப்போம்.
- **சர்வதேச தூய்மையான எரிசக்தி தினம்:** ஜனவரி 26 - மக்களுக்கும் கிரகத்திற்கும் தூய்மையான எரிசக்தி.
- **சர்வதேச கல்வி தினம்:** ஜனவரி 24 - AI மற்றும் கல்வி: தானியங்கி உலகில் மனித செயல்பாடு.
- **உலக பிரெய்லி தினம்:** ஜனவரி 4 - பார்வையற்ற மற்றும் பார்வை குறைபாடுள்ள நபர்களை சென்றடைதல்.

இந்தியாவின் முக்கியமான தேசிய தினங்கள்

- **இந்தியக் கடற்படையின் 58-வது நீர்மூழ்கிக் கப்பல் தினம்:** டிசம்பர் 8 - 1967, டிசம்பர் 8 அன்று இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவு தனது பயணத்தைத் தொடங்கியதை நினைவு கூர்கிறது.
- **கடற்படை தினம்:** டிசம்பர் 4 - (மையக்கருத்து: போர் தயார்நிலை, ஒருங்கிணைந்த, நம்பகமான மற்றும் ஆத்மநிர்பர் (சுயசார்பு) படை).
- **முப்படைகளின் கொடி நாள்:** டிசம்பர் 7 - இந்திய ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்கும், நல நிதிக்கு ஆதரவளிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

- **தேசிய மாசுக்கட்டுப்பாட்டு தினம்:** டிசம்பர் 2 - 1984 போபால் விஷவாயு துயரத்தின் நினைவாக. (2025 மையக்கருத்து: பசுமையான எதிர்காலத்திற்கான நிலையான வாழ்க்கை).
- **அரசியலமைப்பு தினம்:** நவம்பர் 26 - 1949-ல் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவு கூர்கிறது.
- **தேசிய பத்திரிக்கை தினம்:** நவம்பர் 15 - இந்திய பத்திரிகை கவுன்சில் (PCI) தொடங்கப்பட்ட நாள்.
- **ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்:** நவம்பர் 15 - இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பழங்குடியின சமூகங்களின் பங்களிப்பை கௌரவிப்பதற்காக.
- **தேசிய கல்வி தினம்:** நவம்பர் 11 - இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாள்.
- **குழந்தைகள் தினம்:** நவம்பர் 14 - பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலனை மேம்படுத்துதல்.
- **தேசிய ஒற்றுமை தினம்:** அக்டோபர் 31 - சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாள் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் செய்தியைப் பரப்புதல்.
- **காவலர் நினைவு தினம்:** அக்டோபர் 21 - 1959 அக்டோபர் 21 அன்று லடாக்கின் ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் சீனத் தாக்குதலில் கொல்லப்பட்ட 10 வீரமிக்க காவலர்களின் நினைவாக.
- **NSG நிறுவன தினம்:** அக்டோபர் 16 - தேசிய பாதுகாப்புப் படை (NSG) "பிளாக் கேட்ஸ்" (Black Cats) என்றும் அழைக்கப்படுகிறது.
- **தேசிய அஞ்சல் தினம்:** அக்டோபர் 10 - இந்திய அஞ்சல் சேவையின் பங்கு மற்றும் பங்களிப்பைக் கௌரவித்தல்.
- **விமானப்படை தினம்:** அக்டோபர் 8 - 1932-ல் இந்திய விமானப்படை நிறுவப்பட்டதை நினைவு கூர்கிறது.
- **ஆசிரியர் தினம்:** செப்டம்பர் 5 - டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள் ஆசிரியர்களின் பங்களிப்பைக் கௌரவித்தல்.
- **தேசிய விளையாட்டு தினம்:** ஆகஸ்ட் 29 - ஹாக்கி வீரர் மேஜர் தியான் சந்த் சிங்கின் பிறந்த நாள்.
- **தேசிய கைத்தறி தினம்:** ஆகஸ்ட் 7 - 1905-ல் இதே தேதியில் சுதேசி இயக்கம் முறைப்படி தொடங்கப்பட்டது.
- **தேசிய பயங்கரவாத எதிர்ப்பு தினம்**: மே 21 - முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினம் தொழிலாளர் மற்றும் தொழில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு.
- **தேசிய தொழில்நுட்ப தினம்:** மே 11 - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சாதனைகள் மற்றும் பங்களிப்புகளைக் கொண்டாட.
- **தேசிய தடுப்பூசி தினம்:** மார்ச் 16 - தடுப்பூசியின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்த.
- **தேசிய பாதுகாப்பான தாய்மை தினம்:** ஏப்ரல் 11 - கர்ப்பம், பிரசவம் மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய நிலைகளில் முறையான பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு.
- **தேசிய பாதுகாப்பு தினம்:** மார்ச் 4 - தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் தொழில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு.
- **தேசிய அறிவியல் தினம்:** பிப்ரவரி 28 - சி.வி. ராமன் "ராமன் விளைவை" (Raman Effect) கண்டுபிடித்ததைக் கொண்டாடும் வகையில்.
- **தியாகிகள் தினம்:** ஜனவரி 30 - காந்தியின் நினைவு நாளில், தேசத்தின் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துதல்.
- **தேசிய சுற்றுலா தினம்/தேசிய வாக்காளர் தினம்:** ஜனவரி 25 - சுற்றுலாவை மேம்படுத்த/இளம் வாக்காளர்களைத் தேர்தலில் பங்கேற்க ஊக்குவிக்க.
- **தேசிய பெண் குழந்தைகள் தினம்:** ஜனவரி 24 - பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த.
- **ராணுவ தினம்:** ஜனவரி 15 - வீரர்களின் தைரியம், அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது.
- **தேசிய இளைஞர் தினம்:** ஜனவரி 12 - சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில்.

திருவிழாக்கள், கண்காட்சிகள் மற்றும் கொண்டாட்டங்கள்

சர்வதேச கீதா மகோத்சவம்

- ✓ நவம்பர் 5 முதல் டிசம்பர் 5 வரை.
- ✓ குருக்ஷேத்திரம், ஹரியானா.
- ✓ பகவத் கீதையின் நித்திய செய்தியை உலகெங்கும் பரப்புதல் இதன் நோக்கம்.

மார்வார் திருவிழா

- ✓ அக்டோபர்
- ✓ ஜோத்பூர், ராஜஸ்தான்.
- ✓ ராஜஸ்தானி நாட்டுப்புற இசை, நடனம் மற்றும் கலாச்சாரக் கண்காட்சி.

ஜெய்சல்மேர் பாலைவனத் திருவிழா

- ✓ பிப்ரவரி
- ✓ ஜெய்சல்மேர், ராஜஸ்தான்.
- ✓ உள்ளூர் ராஜஸ்தானி கலாச்சாரம், கலை, இசை மற்றும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளின் சங்கமம்.

கஜுராஹோ நடனத் திருவிழா

- ✓ பிப்ரவரி
- ✓ கஜுராஹோ கோயில்கள்
- ✓ உணவு விழாக்கள், இதர பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நடன மாரத்தான் நிகழ்ச்சி

இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

- ✓ பாரத் மண்டபம், புது தில்லி
- ✓ கூட்டாண்மை மாநிலங்கள் பீகார், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம்.
- ✓ மைய நிலை: ஜார்க்கண்ட்

நைனிடால் இலக்கியத் திருவிழா

- ✓ ஏப்ரல்.
- ✓ நைனிடால், உத்தரகண்ட்.
- ✓ அம்சம்: எழுத்தாளர் விவாதங்கள், பணிமனைகள், புத்தக வெளியீடுகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள்.

மகா கும்பமேளா

- ✓ ஜனவரி - பிப்ரவரி
- ✓ பிரயாக்ராஜ், உத்திரப் பிரதேசம்.
- ✓ புனித சங்கமத்தில் நீராடுதல் மற்றும் உலகிலேயே மிகப்பெரிய மத வழிபாட்டு நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI)

- ✓ நவம்பர் 2025
- ✓ கோவா
- ✓ ஸ்பெயின் நாடு இத்திருவிழாவின் கூட்டாண்மை நாடாகவும் மற்றும் கவன ஈர்ப்பு நாடாகவும் இருந்தது.

ஆடி மகோத்சவம் 2025

- ✓ 16-24 பிப்ரவரி, புதுதில்லி

பிற முக்கியத் திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள்

- ✓ **பாரதிய பாஷா உற்சவம் 2025 (11 டிசம்பர்)** - நேஷனல் பால் பவன், புது தில்லி - "பல மொழிகள், ஒரு உணர்வு".
- ✓ **15-வது தேசிய தெருவோர உணவுத் திருவிழா (டிசம்பர்) -** தில்லி – "இந்தியாவின் உள்ளம் தொட்ட உணவைக் கொண்டாடுதல்".
- ✓ **26-வது ஹார்ன்பில் மகோத்சவம் (4 டிசம்பர்)** - நாகாலாந்து - நாகாலாந்தின் செழுமையான மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் ஒரு தனித்துவமான தளம்.
- ✓ **சாங்காய் திருவிழா 2025 (நவம்பர்)** - மணிப்பூர் - மணிப்பூரின் பிரம்மாண்டமான ஆண்டு கலாச்சாரத் திருவிழா. இது அரிதான, புருவக் கொம்புகளைக் கொண்ட "சாங்காய்" மானின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- ✓ **புஷ்கர் மேளா 2025 (அக்டோபர் - நவம்பர்)** – புஷ்கர், ராஜஸ்தான் - இது உலகின் மிகப்பெரிய மற்றும் பாரம்பரிய கால்நடை வர்த்தக கண்காட்சிகளில் ஒன்றாகும்.
- ✓ **38-வது சூரஜ்குண்ட் மேளா (பிப்ரவரி) -** ∴பரிதாபாத், ஹரியானா - கூட்டாண்மை நாடுகள்: பிம்ஸ்டெக் (BIMSTEC) நாடுகள் - மைய மாநிலங்கள்: ஒடிசா மற்றும் மத்தியப் பிரதேசம்.

New Abbreviations

- ✓ **AGS** - Advanced Geothermal Systems
- ✓ **DAJGVA** - Dharti Aaba Janjatiya Gram Utkarsh Abhiyan
- ✓ **DARVYA** - Drone Response and Aerial surveillance Tactical Interventions
- ✓ **DRAVYA** - Digitised Retrieval Application for Versatile Yardstick of Ayush
- ✓ **DRUM** - Dynamic Route Planning for Urban Green Mobility
- ✓ **i-PRAGATI** - Intelligent Progress Reporting and Grievance Addressing through Technology Initiative
- ✓ **LEAP** - Least Exposure to Air Pollution
- ✓ **LEAPS -** Logistics Excellence, Advancement and Performance Shield
- ✓ **LSDG** - Localization of Sustainable Development Goals
- ✓ **LWE** - Left Wing Extremism
- ✓ **NAFIS -** National Automated Fingerprint Identification System
- ✓ **NISAR -** NASA - ISRO Synthetic Aperture Radar
- ✓ **PETA -** People for the Ethical Treatment of Animals
- ✓ **PM – SETU** Pradhan Mantri Skilling and Employability Transformation through Upgraded IITs
- ✓ **PRAVAH -** Platforms for Regulatory Application, Validation And Authorisation
- ✓ **PVTG -** Particularly Vulnerable Tribal Group
- ✓ **QR -** Quick Response
- ✓ **SAIEE** - Synchronous All India Population Estimation of Elephants
- ✓ **SEMI** - Semiconductor Equipment and Materials Internation
- ✓ **SHAPE** - Sustainable Hospital Architecture, Planning, Infrstructure and Equipment
- ✓ **SNSPA** - Swasth Nari, Sashakt Parivar Abhiyaan
- ✓ **SoLAR** - Solar Irrigation for Agricultural Resilience
- ✓ **TEPA -** Trade and Economic Partnership Agreement

- ✓ **TIA -** Trade Intelligence and Analytics
- ✓ **UMEED** - Unified Waqf Management, Employment Efficiency and Development
- ✓ **WCM -** World Cooperative Monitor
- ✓ **WEO -** World Economic Outlook
- ✓ **WINGS -** Wildlife Information and Natural Guide Society

தேசிய செய்திகள்

- ✓ "வியாஸ்" (Vyas) செயலி மூலம் 2025-ஆம் ஆண்டின் கடல்சார் மீன்வளக் கணக்கெடுப்பு எங்கு தொடங்கப்பட்டது?
  கொச்சி (கேரளா)

- ✓ ரத்தன்மஹால் வனவிலங்கு சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
  குஜராத்

- ✓ இந்தியாவின் 94-வது ராம்சர் தளம் (Ramsar Site) எது? அது எங்குள்ளது?
  கோகாபீல் ஏரி – பீகார் மாநிலத்தின் கட்டிகார் மாவட்டம்.

- ✓ எந்த நகரங்களுக்கு அதிகாரப்பூர்வ "ராம்சர் சதுப்புநில நகரம்" சான்றிதழ் வழங்கப்பட்டது?
  உதய்பூர் மற்றும் இந்தூர்

- ✓ "பெரிய பூநாரை சரணாலயம்" எந்த மாநிலத்தில் நிறுவப்பட்டது?
  தமிழ்நாடு.

- ✓ காளி புலிகள் காப்பகம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
  கர்நாடகா.

- ✓ யானைப் பராமரிப்பாளர்களுக்காக இந்தியாவின் முதல் "பாகன் கிராமம்" எங்கு உருவாக்கப்பட்டது?
  தெப்பக்காடு (தமிழ்நாடு).

- ✓ "மஹுவதான் ஓநாய் சரணாலயம்" எந்த மாநிலத்தில் உள்ளது?
  ஜார்க்கண்ட்

- ✓ இந்தியாவின் 58-வது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது எது?
  மாதவ் தேசிய பூங்கா, மத்தியப் பிரதேசம்.

தமிழ்நாடு பட்ஜெட் 2025-26 முக்கிய அம்சங்கள்

தமிழ்நாட்டின் நிதி அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, 2025-26 நிதியாண்டிற்கான மாநில பட்ஜெட்டை மார்ச் 14, 2025 அன்று தாக்கல் செய்தார்.

பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்

- 2025-26 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) (தற்போதைய விலைகளில்) ரூ. 35,67,818 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 15% வளர்ச்சியாகும்.

- 2025-26 ஆம் ஆண்டில் செலவினங்கள் (கடன் திருப்பிச் செலுத்துதலைத் தவிர்த்து) ரூ. 4,39,293 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 10% அதிகமாகும். கூடுதலாக, மாநில அரசால் ரூ. 47,040 கோடி கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

- 2025-26 ஆம் ஆண்டிற்கான வருவாய்கள் (கடன் வாங்குதலைத் தவிர்த்து) ரூ. 3,32,325 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது 12% அதிகமாகும்.

- 2025-26 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1.2% (ரூ. 41,635 கோடி) ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டு நிலையில் இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1.5% (ரூ. 46,468 கோடி) வருவாய் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது குறைவாகும்.

- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3% (ரூ. 1,06,968 கோடி) ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில், திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி, நிதிப் பற்றாக்குறை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.3% ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்ட 3.4% ஐ விட சற்றே குறைவாகும்.

கொள்கை சார்ந்த முக்கிய அம்சங்கள்

- **நீர்வழங்கல்:** சென்னையின் அனைத்து நீர் விநியோக நிலையங்களையும் இணைத்து, நீர்வழங்கலில் சமமான விநியோகத்தை உறுதி செய்வதற்காக ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் அடுத்த மூன்று ஆண்டுகளில் ரூ. 2,423 கோடி மதிப்பிடப்பட்ட செலவில் செயல்படுத்தப்படும்.

- **நகர்ப்புற மேம்பாடு**: சென்னைக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பளவில், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், ∴பின்-டெக் வர்த்தக மண்டலங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், அத்துடன் கல்வி மற்றும் சுகாதார வசதிகளைக் கொண்ட ஒரு புதிய நகரம் உருவாக்கப்படும்.

- **ஊட்டச்சத்து:** முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நகர்ப்புற அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக 3.14 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 600 கோடி ஆகும்.

- **தொழில்:** 'தமிழ்நாடு செமிகண்டக்டர் இயக்கம் – 2030' அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 500 கோடி செலவில் செயல்படுத்தப்படும். செமிகண்டக்டர் வடிவமைப்பு நிறுவனங்களும் உள்நாட்டு ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தங்கள் வடிவமைப்பு மையங்களை அமைக்க ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாட்டின் பொருளாதாரம்

- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP): 2023-24 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (நிலையான விலைகளில்) முந்தைய ஆண்டை விட 8.2% வளர்ச்சி

அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதை ஒப்பிடுகையில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2023-24 ஆம் ஆண்டில் 9.2% வளர்ச்சி அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில், விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் முறையே 3.9%, 7.3% மற்றும் 9.3% உண்மையான வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **துறைகள்:** 2023-24 ஆம் ஆண்டில், விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்திற்கு முறையே 13%, 33% மற்றும் 54% பங்களிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது (தற்போதைய விலைகளில்).

- **தலா மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி:** 2023-24 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் தலா மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (தற்போதைய விலைகளில்) ரூ. 3,53,483 ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது முந்தைய ஆண்டை விட 13% அதிகமாகும். 2023-24 ஆம் ஆண்டில், இந்தியாவின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ. 2,15,935 ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது முந்தைய ஆண்டை விட 11% அதிகமாகும்.



2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்

- 2025-26 ஆம் ஆண்டில் மொத்தச் செலவினம் (கடன் திருப்பிச் செலுத்துதலைத் தவிர்த்து) ரூ. 4,39,293 கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 10% அதிகமாகும். இந்தச் செலவினம், ரூ. 3,32,325 கோடி வருவாய்கள் (கடன் வாங்குதலைத் தவிர்த்து) மற்றும் ரூ. 1,05,000 கோடி நிகரக் கடன்கள் மூலம் ஈடுசெய்ய முன்மொழியப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்கள் (கடன் வாங்குதலைத் தவிர்த்து), 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 12% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2025-26 ஆம் ஆண்டில் மாநிலத்தின் வருவாய் பற்றாக்குறை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 1.2% (ரூ. 41,635 கோடி) ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டு நிலையில் இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1.5% வருவாய் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது குறைவாகும். 2023-24 ஆம் ஆண்டில், மாநிலம் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1.7% (ரூ. 45,121 கோடி) வருவாய் பற்றாக்குறையைச் சந்தித்தது.

- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.0% (ரூ. 1,06,968 கோடி) ஆக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.3%) விடக் குறைவாகும். நிகரச் செலவினத்தில் 10% அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, நிகர வருவாயில் மதிப்பிடப்பட்ட 12% அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். 2023-24 ஆம் ஆண்டில், நிதிப் பற்றாக்குறை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.3% (ரூ. 90,442 கோடி) ஆக இருந்தது.

Table 1: Budget 2025-26 - Key figures (in Rs crore)

Items	2023-24 Actuals	2024-25 Budgeted	2024-25 Revised	% change from BE 24-25 to RE 24-25	2025-26 Budgeted	% change from RE 24-25 to BE 25-26
Total Expenditure	4,02,628	4,53,682	4,39,895	-3%	4,86,332	11%
(-) Repayment of debt	43,565	41,178	40,693	-1%	47,040	16%
Net Expenditure (E)	**3,59,063**	**4,12,504**	**3,99,203**	**-3%**	**4,39,293**	**10%**
Total Receipts	4,00,218	4,49,307	4,36,202	-3%	4,84,364	11%
(-) Borrowings	1,31,597	1,45,497	1,38,356	-5%	1,52,040	10%
*of which central capex loans**	5,326	5,032	5,131	2%	5,786	13%
Net Receipts (R)	**2,68,621**	**3,03,810**	**2,97,846**	**-2%**	**3,32,325**	**12%**
Fiscal Deficit (E-R)	**90,442**	**1,08,693**	**1,01,356**	**-7%**	**1,06,968**	**6%**
as % of GSDP	3.3%	3.4%	3.3%		3.0%	
Revenue Deficit	**45,121**	**49,279**	**46,468**	**-6%**	**41,635**	**-10%**
as % of GSDP	1.7%	1.6%	1.5%		1.2%	
Primary Deficit	**36,876**	**46,237**	**40,999**	**-11%**	**37,855**	**-8%**
as % of GSDP	1.4%	1.5%	1.3%		1.1%	
GSDP	**27,21,571**	**31,55,096**	**31,15,998**	**-1.2%**	**35,67,818**	**15%**

Note: BE is Budget Estimates; RE is Revised Estimates. *Central government has been providing 50-year interest-free loans to state governments for capital expenditure since 2020-21. These loans are excluded from the calculation of the state's borrowing ceiling.
Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

2025-26 ஆம் ஆண்டில் செலவினம்

- 2025-26 ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவினம் ரூ. 3,73,204 கோடியாக முன்மொழியப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 10% அதிகமாகும். இதில் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி போன்ற உறுதியளிக்கப்பட்ட இனங்களுக்கான செலவினங்கள் மற்றும் மானியங்கள், உதவிகள் போன்ற பிற இனங்களுக்கான செலவினங்களும் அடங்கும்.

- 2025-26 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு ரூ. 57,231 கோடியாக முன்மொழியப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 22% அதிகமாகும். மூலதனச் செலவு என்பது சொத்துக்களை உருவாக்குவதற்கான செலவினங்களைக் குறிக்கிறது. மூலதனச் செலவில் அதிகரிப்பைக் கண்ட துறைகளில் பின்வருவன அடங்கும்: (i) போக்குவரத்து (27% அதிகரிப்பு), (ii) எரிசக்தி (3,973% அதிகரிப்பு) மற்றும் (iii) நகர்ப்புற வளர்ச்சி (24% அதிகரிப்பு).

- 2025-26 ஆம் ஆண்டில், மாநிலத்தின் கடன்கள் மற்றும் முன்பணங்கள் ரூ. 8,858 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 27% குறைவாகும். 2024-25 ஆம் ஆண்டில், மாநிலத்தால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் அந்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட மேலும் 27% குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025-26 ஆம் ஆண்டில் எரிசக்தித் துறையில் மூலதனச் செலவு கணிசமாக அதிகரிக்கும்

2025-26 ஆம் ஆண்டில், எரிசக்தித் துறையில் மூலதனச் செலவு ரூ.124 கோடியிலிருந்து ரூ.5,068 கோடியாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 3,973% அதிகரிப்பாகும். செலவினங்களில் இந்த குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, மாநில மின் கழகங்களில் செய்யப்படும் முதலீடுகளின் அதிகரிப்பின் காரணமாகும். 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, தமிழ்நாடு மின் விநியோகக் கழகத்தில் (TNPDCL) பங்கு முதலீடு ரூ. 1,000 கோடியாக மதிப்பிடப்பட்டது, இது 2025-26 ஆம் ஆண்டில் ரூ. 5,000 கோடியாக அதிகரிக்கும் என்று வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Table 2: Expenditure budget 2025-26 (in Rs crore)

Items	2023-24 Actuals	2024-25 Budgeted	2024-25 Revised	% change from BE 24-25 to RE 24-25	2025-26 Budgeted	% change from RE 24-25 to BE 25-26
Revenue Expenditure	3,09,718	3,48,289	3,40,374	-2%	3,73,204	10%
Capital Outlay	40,500	47,681	46,766	-2%	57,231	22%
Loans given by the state	8,845	16,534	12,063	-27%	8,858	-27%
Net Expenditure	**3,59,063**	**4,12,504**	**3,99,203**	**-3%**	**4,39,293**	**10%**

Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; PRS

March 27, 2025 - 2 -

கட்டாயச் செலவினங்கள்: ஒரு மாநிலத்தின் கட்டாயச் செலவினங்களில் பொதுவாக சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துவதற்கான செலவுகள் அடங்கும். கட்டாயச் செலவினங்களுக்காக ஒதுக்கப்படும் வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு பெரிய பகுதி, மூலதனச் செலவு போன்ற பிற செலவின முன்னுரிமைகள் குறித்து முடிவெடுப்பதில் மாநிலத்தின் நெகிழ்வுத்தன்மையை கட்டுப்படுத்தக்கூடும்.

2025-26 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தனது மதிப்பிடப்பட்ட வருவாய் வரவுகளில் 62% ஆன ரூ. 2,07,054 கோடியை கட்டாயச் செலவினங்களுக்காக செலவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சம்பளத்திற்கான செலவினங்கள் (வருவாய் வரவுகளில் 28%), ஓய்வூதியம் (14%), மற்றும் வட்டி செலுத்துதல் (21%) ஆகியவை அடங்கும். 2023-24 ஆம் ஆண்டில், வருவாய் வரவுகளில் 63% உறுதியளிக்கப்பட்ட செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டது.

Table 3: Committed Expenditure in 2025-26 (in Rs crore)

Committed Expenditure	2023-24 Actuals	2024-25 Budgeted	2024-25 Revised	% change from BE 24-25 to RE 24-25	2025-26 Budgeted	% change from RE 24-25 to BE 25-26
Salaries	75,030	84,964	81,460	-4%	91,726	13%
Pension	37,697	42,509	41,437	-3%	46,214	12%
Interest payment	53,566	62,456	60,357	-3%	69,114	15%
Total	**1,66,293**	**1,89,929**	**1,83,254**	**-4%**	**2,07,054**	**13%**

Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

துறைவாரியான செலவினம்: கீழே பட்டியலிடப்பட்டுள்ள துறைகள், 2025-26 ஆம் ஆண்டில் மாநிலத்தால் துறைகளுக்காகச் செய்யப்படும் மொத்தச் செலவினத்தில் 54% ஆகும். முக்கியத் துறைகளில் தமிழ்நாட்டின் செலவினத்தை மற்ற மாநிலங்களின் செலவினத்துடன் ஒப்பிடுவது பின்னிணைப்பு 1-இல் காட்டப்பட்டுள்ளது.

Table 4: Sector-wise expenditure under Tamil Nadu Budget 2025-26 (in Rs crore)

Sectors	2023-24 Actuals	2024-25 BE	2024-25 RE	2025-26 BE	% change from RE 24-25 to BE 25-26	Budget Provisions (2025-26)
Education, Sports, Arts, and Culture	47,223	54,327	49,783	57,783	16%	▪ Rs 13,974 crore allocated towards government secondary schools ▪ Rs 14,328 crore allocated towards government primary schools
Social Welfare and Nutrition	28,155	34,548	36,182	38,096	5%	▪ Rs 13,807 crore allocated towards Magalir Urimai Thogai scheme
Transport	20,433	23,828	21,991	27,971	27%	▪ Rs 18,456 crore allocated towards capital outlay on roads and bridges
Agriculture and Allied Activities	21,231	24,232	22,513	23,964	6%	▪ Rs 8,126 crore allocated towards payment to electricity board on behalf of farmers using pump sets
Health and Family Welfare	17,773	19,730	21,525	21,348	-1%	▪ Rs 5,926 crore allocated towards allopathic urban health services
Energy	24,166	21,606	22,970	20,354	-11%	▪ Rs 7,546 crore allocated towards power subsidy for domestic consumers ▪ Rs 7,700 crore allocated towards loss funding for TANGEDCO
Rural Development	8,922	12,043	11,403	13,132	15%	▪ Rs 3,699 crore allocated towards rural employment guarantee scheme
Police	10,490	11,965	11,302	12,714	12%	▪ Rs 7,605 crore allocated towards district police
Irrigation and Flood Control	6,607	7,763	6,889	8,888	29%	▪ Rs 2,565 crore allocated towards capital outlay on major irrigation
Urban Development	7,761	6,025	5,603	7,936	42%	▪ Rs 2,000 crore allocated towards implementation of Kalaignar Nagarpura Membattu Thittam ▪ Rs 850 crore allocated towards Singara Chennai 2.0 scheme
% of total expenditure on all sectors	**55%**	**55%**	**54%**	**54%**		

Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

2025-26 ஆம் ஆண்டிற்கான வரவுகள்

- 2025-26 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வரவுகள் ரூ.3,31,569 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 13% அதிகமாகும். இதில், ரூ. 2,49,713 கோடி (75%) மாநிலத்தால் அதன் சொந்த ஆதாரங்கள் மூலம் திரட்டப்படும், மேலும் ரூ. 81,856 கோடி (25%) மத்திய அரசிடம் இருந்து வரும். மத்திய அரசிடம் இருந்து வரும் நிதி ஆதாரங்கள், மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு (மொத்த வருவாய் வரவுகளில் 17%) மற்றும் மானியங்கள் (மொத்த வருவாய் வரவுகளில் 7%) வடிவில் இருக்கும்.

- பகிர்வு: 2025-26 ஆம் ஆண்டில், மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு ரூ. 58,022 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட அதிகமாகும்.

- 2025-26 ஆம் ஆண்டில் மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும் மானியங்கள் ரூ. 23,834 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 16% அதிகமாகும். 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நிலையில், மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும் மானியங்கள் வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட 12% குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் திட்டங்களுக்காக திருத்தப்பட்ட நிலையில் மதிப்பிடப்பட்ட குறைந்த உதவி காரணமாக இந்த மானியக் குறைப்பு ஏற்பட்டுள்ளது.

- மாநிலத்தின் சொந்த வரி வருவாய்: தமிழ்நாட்டின் மொத்த சொந்த வரி வருவாய் 2025-26 ஆம் ஆண்டில் ரூ. 2,20,895 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 15% அதிகமாகும். மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சொந்த வரி வருவாயின் பங்கு 2025-26 ஆம் ஆண்டில் 6.2% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளுக்குச் சமமாகும். 2023-24 ஆம் ஆண்டின் உண்மையான புள்ளிவிவரங்களின்படி, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் சொந்த வரி வருவாயின் பங்கு 6.1% ஆக இருந்தது.

Table 5: Break-up of the state government's receipts (in Rs crore)

Items	2023-24 Actuals	2024-25 Budgeted	2024-25 Revised	% change from BE 2024-25 to RE 2024-25	2025-26 Budgeted	% change from RE 2024-25 to BE 2025-26
State's Own Tax	1,67,278	1,95,173	1,92,752	-1%	2,20,895	15%
State's Own Non-Tax	25,904	30,728	28,124	-8%	28,819	2%
Share in Central Taxes	46,072	49,755	52,492	6%	58,022	11%
Grants-in-aid from Centre	25,342	23,354	20,538	-12%	23,834	16%
Revenue Receipts	**2,64,597**	**2,99,010**	**2,93,906**	**-2%**	**3,31,569**	**13%**
Non-debt Capital Receipts	4,024	4,800	3,940	-18%	756	-81%
Net Receipts	**2,68,621**	**3,03,810**	**2,97,846**	**-2.0%**	**3,32,325**	**12%**

Note: BE is Budget Estimates; RE is Revised Estimates.
Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

- 2025-26 ஆம் ஆண்டில், மாநில ஜிஎஸ்டி சொந்த வரி வருவாயின் மிகப்பெரிய ஆதாரமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது (42% பங்கு). 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட மாநில ஜிஎஸ்டி வருவாய் 23% அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2025-26 ஆம் ஆண்டில் விற்பனை வரி/வாட் மூலம் கிடைக்கும் வருவாய், 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 7% அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருத்தப்பட்ட நிலையில், இந்த ஆதாரத்தின் மூலம் கிடைக்கும் வருவாய், 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட 6% குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2025-26 ஆம் ஆண்டில், மாநில கலால் வரியின் மூலம் கிடைக்கும் வருவாய், 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 14% அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருத்தப்பட்ட நிலையில், மாநில கலால் வரியின் மூலம் கிடைக்கும் வருவாய், 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட 2% குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2025-26 ஆம் ஆண்டில், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணங்கள் மூலம் கிடைக்கும் வருவாய், 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 9% அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணங்கள் மூலம் கிடைக்கும் வருவாய், வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட 3% குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- 2025-26 ஆம் ஆண்டில், நில வருவாய் 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 26% குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருத்தப்பட்ட நிலையில், நில வருவாய் 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட 14% குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Table 6: Major sources of state's own-tax revenue (in Rs crore)

Head	2023-24 Actuals	2024-25 Budgeted	2024-25 Revised	% change from BE 2024-25 to RE 2024-25	2025-26 Budgeted	% change from RE 2024-25 to BE 2025-26
State GST	61,960	73,788	76,277	3%	93,620	23%
Sales Tax/ VAT	60,200	69,588	65,486	-6%	70,310	7%
State Excise	19,013	23,370	22,815	-2%	26,110	14%
Taxes on Vehicles	9,375	11,560	11,998	4%	13,441	12%
Stamps Duty and Registration Fees	10,774	12,247	11,857	-3%	12,944	9%
Land Revenue	256	370	319	-14%	235	-26%
Taxes and Duties on Electricity	5,680	4,231	3,988	-6%	4,222	6%
GST Compensation Grants	4,574	0	0	0%	0	0%

Sources: Annual Financial Statement, Revenue Budget, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

பற்றாக்குறை, கடன் மற்றும் 2025-26 ஆம் ஆண்டுக்கான FRBM இலக்குகள்

தமிழ்நாடு நிதிப் பொறுப்புச் சட்டம், 2003, மாநில அரசின் நிலுவைக் கடன், வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றை படிப்படியாகக் குறைப்பதற்கான ஆண்டு இலக்குகளை வழங்குகிறது.

வருவாய் இருப்பு: இது வருவாய் செலவினங்களுக்கும் வருவாய் வரவுகளுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். வருவாய்ப் பற்றாக்குறை என்பது, அரசின் சொத்துக்களை அதிகரிக்காத அல்லது அதன் பொறுப்புகளைக் குறைக்காத செலவினங்களுக்கு நிதியளிக்க அரசாங்கம் கடன் வாங்க வேண்டியுள்ளது என்பதைக் குறிக்கிறது. 2025-26 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.41,635 கோடி (அல்லது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1.2%) என பட்ஜெட் மதிப்பிடுகிறது.

நிதிப் பற்றாக்குறை: இது மொத்த வரவுகளை விட மொத்த செலவினங்கள் அதிகமாக இருப்பதாகும். இந்த இடைவெளி அரசாங்கத்தின் கடன் வாங்குவதன் மூலம் நிரப்பப்படுகிறது மற்றும் இது மொத்தப் பொறுப்புகளின் அதிகரிப்பிற்கு வழிவகுக்கிறது. 2025-26 ஆம் ஆண்டில், நிதிப் பற்றாக்குறை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.0% ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கு, மாநிலங்களுக்கு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3% வரை நிதிப் பற்றாக்குறைக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. குறிப்பிட்ட மின்சாரத் துறை சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 0.5% வரை கூடுதல் கடன் வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டில், மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.3% ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பட்ஜெட் மதிப்பீடான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.4%-ஐ விட சற்றுக் குறைவு.

நிலுவைக் கடன்: நிலுவைக் கடன் என்பது ஒரு நிதியாண்டின் இறுதியில் உள்ள மொத்தக் கடன்களின் திரட்சி ஆகும். 2025-26 ஆம் ஆண்டின் இறுதியில், நிலுவைக் கடன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 26.1% ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டை (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 26.4%) விடக் குறைவு.

TANGEDCO-விற்கான மானியங்கள்

2019-20 மற்றும் 2025-26 ஆம் ஆண்டுகளுக்கு இடையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்திற்கு (TANGEDCO) மாநில அரசு ரூ.83,156 கோடி மானியமாக வழங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் உதய் மானியங்கள் மற்றும் அதன் இழப்புகளுக்கு நிதியளிப்பதற்கான மானியங்கள் அடங்கும். இருப்பினும், மின்சார விநியோகத்தின் ஒரு யூனிட் செலவுக்கும், ஒரு யூனிட்டிற்கு ஈட்டப்படும் வருவாய்க்கும் இடையே உள்ள இடைவெளி காரணமாக டாங்கெட்கோ தொடர்ந்து கணிசமான இழப்புகளைச் சந்தித்து வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில், இந்த வேறுபாடு ஒரு கிலோவாட்-மணிக்கு ரூ. 0.89 ஆக இருந்தது. இது மற்ற அனைத்து மாநில மின் விநியோக நிறுவனங்களின் சராசரியான ஒரு கிலோவாட்-மணிக்கு ரூ.0.47 உடன் ஒப்பிடும்போது அதிகமாகும். மாநில அரசால் வெளியிடப்பட்ட வெள்ளையறிக்கை (2021), டான்ஜெட்கோவின் இழப்புகளுக்கு அதிக செலவுகள் மற்றும் குறைந்த வருவாய் வசூல் ஆகிய இரண்டுமே காரணம் என்று குறிப்பிட்டிருந்தது. அது டான்ஜெட்கோவை முழுமையாக மறுசீரமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஆதாரம்: மின் பயன்பாட்டு நிறுவனங்களின் செயல்திறன் குறித்த அறிக்கை, பவர் ∴பைனான்ஸ் கார்ப்பரேஷன், 2024.

Figure 2: Revenue and Fiscal Deficit (% of GSDP)



Note: *Figures from 2026-27 onwards are projections. RE is Revised Estimates; BE is budget estimates.
Sources: Medium Term Fiscal Policy, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

Figure 3: Outstanding Debt (as % of GSDP)



Note: *Figures from 2026-27 onwards are projections. BE is budget estimates.
Sources: Medium Term Fiscal Policy, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

முக்கியத் துறைகளில் மாநிலங்களின் செலவினங்களின் ஒப்பீடு

கீழே உள்ள வரைபடங்கள், 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்தச் செலவினத்தில் ஆறு முக்கியத் துறைகளுக்கான செலவினங்களின் விகிதத்தை ஒப்பிடுகின்றன. ஒரு துறைக்கான சராசரி என்பது, 2024-25 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, 31 மாநிலங்கள் (தமிழ்நாடு உட்பட) அந்தத் துறையில் செய்த சராசரி செலவினத்தைக் குறிக்கிறது.

- **கல்வி:** தமிழ்நாடு தனது 2025-26 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் 13.4% கல்வியில் ஒதுக்கியுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டில் மாநிலங்கள் கல்விக்காக ஒதுக்கிய சராசரி ஒதுக்கீட்டை விடக் குறைவானது (15.0%).

- **சுகாதாரம்:** தமிழ்நாடு தனது 2025-26 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் 5.0% சுகாதாரத்திற்காக ஒதுக்கியுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டில் மாநிலங்கள் சுகாதாரத்திற்காக ஒதுக்கிய சராசரி ஒதுக்கீட்டை விடக் குறைவானது (6.2%).

- **ஊரக வளர்ச்சி**: தமிழ்நாடு தனது 2025-26 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் 3.1% ஊரக வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டில் மாநிலங்கள் ஊரக வளர்ச்சிக்காக ஒதுக்கிய சராசரி ஒதுக்கீட்டை விடக் குறைவானது (5.1%).

- **சாலைகள் மற்றும் பாலங்கள்:** தமிழ்நாடு தனது 2025-26 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் 4.7% சாலைகள் மற்றும் பாலங்களுக்காக ஒதுக்கியுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டில் மாநிலங்கள் சாலைகள் மற்றும் பாலங்களுக்காக ஒதுக்கிய சராசரி ஒதுக்கீட்டை விட அதிகமானதாகும் (4.3%).

- **விவசாயம்:** தமிழ்நாடு தனது 2025-26 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் 5.6% விவசாயத்திற்காக ஒதுக்கியுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டில் மாநிலங்கள் விவசாயத்திற்காக ஒதுக்கிய சராசரி ஒதுக்கீட்டை விடக் குறைவானது (6.3%).

- **எரிசக்தி:** தமிழ்நாடு தனது 2025-26 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் 4.7% எரிசக்திக்காக ஒதுக்கியுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டில் மாநிலங்கள் எரிசக்திக்காக ஒதுக்கிய சராசரி ஒதுக்கீட்டை விட சற்றுக் குறைவானது (5.0%).





Note: 2023-24, 2024-25 (BE), 2024-25 (RE), and 2025-26 (BE) figures are for Tamil Nadu.
Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; various state budgets; PRS.

2023-24 வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் உண்மையான செலவினங்களின் ஒப்பீடு

பின்வரும் அட்டவணைகள், 2023-24 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினங்களை அந்த ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகின்றன.

Table 7: Overview of Receipts and Expenditure (in Rs crore)

Particular	2023-24 BE	2023-24 Actuals	% change from BE to Actuals
Net Receipts (1+2)	**2,73,246**	**2,68,621**	**-2%**
1. Revenue Receipts (a+b+c+d)	2,70,515	2,64,597	-2%
a. Own Tax Revenue	1,81,182	1,67,278	-8%
b. Own Non-Tax Revenue	20,224	25,904	28%
c. Share in central taxes	41,665	46,072	11%
d. Grants-in-aid from the Centre	27,445	25,342	-8%
2. Non-Debt Capital Receipts	2,731	4,024	47%
3. Borrowings	1,33,945	1,31,597	-2%
Of which central capex loans	4,079	5,326	31%
Net Expenditure (4+5+6)	**3,65,321**	**3,59,063**	**-2%**
4. Revenue Expenditure	3,08,056	3,09,718	1%
5. Capital Outlay	44,366	40,500	-9%
6. Loans and Advances	12,900	8,845	-31%
7. Debt Repayment	43,826	43,565	-1%
Revenue Deficit	**37,540**	**45,121**	**20%**
Revenue Deficit (as % of GSDP)	1.3%	1.7%	
Fiscal Deficit	**92,075**	**90,442**	**-2%**
Fiscal Deficit (as % of GSDP)	3.3%	3.3%	

Source: Tamil Nadu Budget Documents of various years; PRS.

Table 8: Key Components of State's Own Tax Revenue

Tax Source/Head	2023-24 BE	2023-24 Actuals	% change from BE to Actuals
Stamps Duty and Registration Fees	25,567	19,013	-26%
Land Revenue	296	256	-13%
State Excise	11,819	10,774	-9%
Sales Tax/ VAT	65,860	60,200	-9%
State GST	66,967	61,960	-7%
Taxes on Vehicles	8,783	9,375	7%
Taxes and Duties on Electricity	1,890	5,680	201%

Source: Tamil Nadu Budget Documents of various years; PRS.

Table 9: Allocation towards Key Sectors

Sector	2023-24 BE	2023-24 Actuals	% change from BE to Actuals
Housing	3,667	2,624	-28%
Water Supply and Sanitation	6,418	4,993	-22%
Irrigation and Flood Control	7,755	6,607	-15%
Transport	22,306	20,433	-8%
of which Roads and Bridges	18,861	17,568	-7%
Agriculture and Allied Activities	22,971	21,231	-8%
Urban Development	8,331	7,761	-7%
Rural Development	9,413	8,922	-5%
Education, Sports, Arts, and Culture	49,700	47,223	-5%
Health and Family Welfare	18,545	17,773	-4%
Welfare of SC, ST, OBC, and Minorities	5,028	5,032	0.1%
Police	10,368	10,490	1%
Social Welfare and Nutrition	26,614	28,155	6%
Energy	8,426	24,166	187%

Source: Tamil Nadu Budget Documents of various years; PRS.

தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வு 2024-25 முக்கிய அம்சங்கள்

1. 2024-25இல், பொருளாதார வளர்ச்சிப் போக்கைப் பாதிக்கும் உலக அளவிலான சவால்களை, தமிழ்நாட்டுப் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலுடன் எதிர்கொண்டது. பெருந்தொற்றோடு சர்வதேச அரசியல் பதற்றங்களும் தீவிரமான தட்பவெப்ப மாற்றங்களும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளைப் பாதித்ததுடன் எரிசக்தி, உணவுத் துறை ஆகியவற்றில் நெருக்கடிகளை விளைவித்தன. 2023இல் உலகப் பொருளாதாரம் 3.33% உண்மை வளர்ச்சி நிலையை அடைந்தது. இந்தியப் பொருளாதாரம் 2022-23இல் 7.61%, 2023-24இல் 9.19%, 2024-25இல் 6.48% வளர்ச்சியை எட்டியது. ஒருங்கிணைந்த கொள்கை முடிவுகளின் வலுவான அடித்தளத்தோடு, தமிழ்நாடு குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார வளர்ச்சியில் மீண்டெழுந்துள்ளது 2021-22இலிருந்தே 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து எட்டிவருகிறது. 2024-25இலும் 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. தமிழ்நாட்டின் முற்போக்கான சமூகநலக் கொள்கைகளும், வலுவான உள்கட்டமைப்பு வசதிகளும், பெரும் எண்ணிக்கையிலான திறன்மிகு தொழிலாளர்களும் இம்மாநிலத்தை மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிப்பாதையில் இடம்பெறச் செய்துள்ளனர். இந்தியாவின் நிலப்பரப்பில் 4%, நாட்டின் மக்கள்தொகையில் 6% மட்டுமே கொண்டிருக்கும் தமிழ்நாடு, 2023-24ஆம் ஆண்டில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9.21% பங்களித்துள்ளது. 2023-24இல் மாநில உள்நாட்டு உற்பத்தியானது (ஜிஎஸ்டிபி) நடப்பு விலையில் ரூ.27.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது பெயரளவு வளர்ச்சி விகிதம் 13.71% ஆகவும், உண்மையான வளர்ச்சி விகிதம் 8.33% ஆகவும் உள்ளது.

3. மோட்டார் வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள், ஜவுளி, தோல்பொருள்கள் ஆகியவற்றின் முக்கிய ஏற்றுமதியாளராக விளங்குவதால், மாநிலப் பொருளாதாரமானது உலகளாவிய சந்தை நிலைகளையொட்டியே அமைந்துள்ளது; இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளைக்காட்டிலும் உலகளாவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையே பெரிதும் சார்ந்திருப்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

4. தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியானது தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தேசிய சராசரியைவிடவும் அதிகமாகவே இருந்து வருகிறது. 2022-23இல் ரூ.2.78 லட்சமாக இருந்தது இது தேசிய சராசரியான ரூ.1.69 லட்சத்தைக் காட்டிலும் 1.64 மடங்கு அதிகமானதாகும். இதன் காரணமாக, தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு நான்காம் இடம் வகிக்கிறது. மாநிலத்தின் தனி நபர் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் தேசிய சராசரியைவிட மேலே உள்ளது.

5. பெருநகரமொன்றை மட்டும் மையமாகக் கொண்டு இயங்கும் மகாராஷ்டிரம், கர்நாடகம், மேற்குவங்காளம் போன்ற மாநிலங்களைப் போலன்றி, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது மாநிலம் முழுவதுமுள்ள நகர்ப்புர மையங்களில் பரவலாக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற நகரங்கள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்குவதோடு நகர்ப்புர-ஊரக இடைவெளிகளைக் குறைக்கவும் உதவுகின்றன.

6. 2023-24இல், சேவைத் துறை (மூன்றாம் நிலை) யானது மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்புக்கூட்டலில் (ஜிஎஸ்விஏ) 53.63% பங்களித்தது அதற்கடுத்து இரண்டாம் நிலைத் துறை (33.37%), முதன்மைத் துறை (13%) பங்களித்துள்ளன. வளர்ந்த பொருளாதாரங்களைப் போலவே, மாநிலத்தின் இரண்டாம் நிலைத் துறையின் பங்கு 5% அளவில் அதிகரித்தால், வேலைவாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும்.

7. அதிகம் தொழில்மயமாக்கப்பட்ட, நகரமயமாக்கப்பட்ட பொருளாதாரமான தமிழ்நாடு, 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது. தற்போதைய ஆற்றலுடன், காலநிலை மாற்றம், மக்கள்தொகை மாற்றங்கள், தொழில்நுட்பச் சீர்குலைவு, மாறிவரும் வேலைவாய்ப்புச் சூழல்கள் போன்ற சவால்களை வியூகம் சார்ந்த திட்டமிடல் வாயிலாக வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழ்நாடு இந்த இலக்கை எட்டும். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வளர்ச்சியைப் பரவலாக்குவதற்குக் கிராமப்புறத் தொழில்முனைவோரை வளர்த்தெடுப்பதில் தமிழ்நாடு கவனம் செலுத்த வேண்டும். இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துதல், வேலையில் பெண்கள் பங்கேற்பதை ஊக்குவித்தல், வளர்ந்துவரும்

தொழில்நுட்பங்கள் உள்பட உயர்மதிப்பு உற்பத்தி மற்றும் சேவைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தமிழ்நாடு அதன் மக்கள்தொகை சார்ந்த அனுகூலங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (ஐடிஇஎஸ்), தளவாடங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற துறைகளை விரிவுபடுத்துவதற்கான வணிகச் சூழலை உருவாக்கி, குறைகடத்தி (செமிகண்டக்டர்) மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் துறைக்கான கொள்கைகளுடன் தமிழ்நாடு ஏற்கெனவே இந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது நம்பிக்கை அளிக்கிறது.

8. புவிசார் அரசியல் பதற்றங்கள் காரணமாகவும், காலநிலை மாற்றம் காரணமாகவும் உலகளாவிய பணவீக்கம் அதிகரித்து, 2022இல் 8.6% ஆகவும், 2023இல் 6.7% ஆகவும் இருந்தது. இந்தியாவின் சில்லறை வர்த்தகப் (சிபிஐ) பணவீக்கம் 2022-23இல் 6.7% ஆகவும், 2023-24இல் 5.4% ஆகவும் இருந்ததோடு 2024-25இல் (ஜனவரி 2025 வரை) 4.9% ஆக உள்ளது. தமிழ்நாட்டிலும் அதைப் போலவே 2022-23இல் 6% என்றிருந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கம், 2023-24இல் 5.4% ஆகவும், 2024-25இல் (ஜனவரி 2025இல்) 4.8% ஆகவும் குறைந்துள்ளது. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் பணவீக்கமான 4.85% ஐவிடத் தமிழ்நாட்டின் சராசரிப் பணவீக்கம் 5.7% என அதிகமாக இருந்தபோதும், 2021-22 முதல் மாநிலத்தின் சில்லறை வர்த்தகப் பணவீக்கம் கணிசமாகக் குறைந்துவருகிறது. குறிப்பாக, 2023-24இல் 20 முக்கிய இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு 8ஆவது குறைந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கத்தைக் கொண்டிருந்தது.

9. தமிழ்நாட்டில் 2019-20இல் 6% என்றிருந்த நகர்ப்புரப் பணவீக்கம் 2024-25இல் 4.5% ஆகக் குறைந்துள்ளது (ஜனவரி 2025 வரை): கிராமப்புறப் பணவீக்கம் 5.4% ஆக அப்படியே உள்ளது. இப்படியாக, கிராமப்புறப் பணவீக்கம் மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பணவீக்கத்தையும் இயக்குகிறது. உணவு மற்றும் பல்வகைப் பொருள்கள் கிராமப்புறப் பணவீக்கத்துக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்குகின்றன.

10. பணவீக்கம் பெரும்பாலும் பணவியல் தொடர்பான நிகழ்வுதான் என்றாலும், மக்களின் வாங்கும் சக்தியைப் படிப்படியாக அது குறைத்துவிடுவதால் மக்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பிட்ட தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மின்சாரம் ஆகியவற்றை மானிய விலையில் வழங்குவதன் வாயிலாகவும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாகப் பொருளாதார ஆதரவு வழங்குவதன் மூலமும் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்கிறது.

11. தமிழ்நாட்டின் விவசாயம் பெரும்பாலும் பருவமழையை நம்பித்தான் நடைபெறுகிறது. விவசாயம் ரூ.1.5 லட்சம் கோடி (ஜிஎஸ்விஏவில் 6%) பங்களித்து, ஐந்தாவது பெரிய துறையாகத் திகழ்கிறது. மொத்தப் பயிரிடப்பட்ட பரப்பளவில், நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு, தினை வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள் 62% ஆகவும், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி போன்ற உணவு தானியமல்லாத பயிர்கள் 38% ஆகவும் உள்ளன. பயிர்ப் பரப்பில் நெல் தொடர்ந்து முதன்மை நிலை வகித்துவருகிறது. 2019-20இல் மொத்தப் பயிர்ப் பரப்பில் 32.1% ஆக இருந்த நெல்லின் பங்கு 2023-24இல் 34.4% ஆக அதிகரித்துள்ளது.

12. வேளாண் புள்ளிவிவரங்கள் ஒரு கண்ணோட்டம் (2024) அறிக்கையின்படி, தமிழ்நாடு எண்ணெய் வித்துகள், நிலக்கடலை, கரும்பு உற்பத்தித்திறனில் முதலிடத்திலும், மக்காச்சோள உற்பத்தித்திறனில் இரண்டாம் இடத்திலும், நெல் உற்பத்தித்திறனில் மூன்றாம் இடத்திலும் உள்ளது. வணிக விவசாய விரிவாக்கம், தமிழ்நாட்டின் முதன்மைப் பயிர்களின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு ஆகியவை ரசாயன உரங்களையும் நிலத்தடிநீரையும் அதிகமாகப் பயன்படுத்துவதன் வாயிலாக எட்டப்படுகின்றன. மாநிலத்தின் உர நுகர்வு 2019-20இல் 9.65 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 2023-24இல் 10.68 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. விவசாய மின் நுகர்வு 13,811 மில்லியன் யூனிட்டிலிருந்து 17,957 மில்லியன் யூனிட்டாக அதிகரித்துள்ளது.

13. தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தரும் முக்கியமான அமைப்பாக விவசாயக் கடன் திகழ்கிறது. பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் வாயிலாக வழங்கப்படும் கடன் 2019-20இல் ரூ.1.83 லட்சம் கோடியிலிருந்து 2023-24இல் ரூ.3.58 லட்சம் கோடியாக அதிகரித்து, வணிக வங்கிகள் வழங்கும் விவசாயக் கடனில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. தற்போதைய சந்தை விலையுடன், நெல்லுக்கு ரூ.105 (ஒரு குவிண்டாலுக்கு), கரும்புக்கு ரூ.215 (ஒரு டன்னுக்கு)

கூடுதல் ஊக்கத்தொகையாகத் தமிழ்நாடு அரசு வழங்குகிறது. எதிர்பாராத இயற்கைப் பேரிடர்களால் பயிரிழப்பு ஏற்பட்டால், வேளாண் காப்பீட்டுத் திட்டமானது விவசாயிகளுக்கு நிதியுதவி அளித்துப் பாதுகாக்கிறது. வேளாண் வணிகத்தையும் உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதையும் எளிதாக்கும் விதமாக, 284 ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள், 525 சேமிப்புக் கிட்டங்கிகள். 395 பரிவர்த்தனைக் கொட்டகைகள், 421 உலர்த்தும் இடங்கள், 863 வணிகக் கடைகள், 268 குளிர்பதனக் கிடங்குகள் என 19,856 மெட்ரிக் டன் அளவில் மொத்தக் கொள்ளளவைத் தமிழ்நாடு கொண்டுள்ளது.

14. பழங்கள், காய்கறிகள், தோட்டப் பயிர்கள், அலங்காரச் செடிகள், மருத்துவப் பயிர்கள் ஆகியவற்றுக்கான தேவை அதிகரித்துவருவதால், தமிழ்நாட்டில் விவசாய வளர்ச்சியின் முக்கிய உந்துசக்தியாகத் தோட்டக்கலைத் துறை மாறியுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கான மொத்தப் பரப்பளவு 2023-24இல் 16.3 லட்சம் ஹெக்டேர் அளவை எட்டியது. மாநிலத்தில் ஏராளமான கால்நடைகள், கோழி வளங்கள் உள்ளன. இவை, சிறு குறு விவசாயிகளுக்கும் நிலமற்ற தொழிலாளர்களுக்கும் முக்கியமான வாழ்வாதாரமாகத் திகழ்கின்றன. 2023-24இல் கால்நடைத் துறையின் மொத்த மாநில மதிப்புக்கூட்டல் (ஜிஎஸ்விஏ) ரூ.1.35 லட்சம் கோடியாக இருந்தது. இது, தமிழ்நாட்டின் மொத்த ஜிஎஸ்விஏவில் 5.41% பங்களித்துள்ளது. இந்தியாவின் முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும், இறைச்சி உற்பத்தியில் ஆறாம் இடத்திலும் உள்ளது. மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பு ஜிஎஸ்விஏவுக்கு 1%க்கும் குறைவான பங்களிப்பை அளிக்கும்வேளையில், தமிழ்நாடு 1.34 லட்சம் டன் மீன் பொருள்களை ஏற்றுமதிசெய்து, 2023-24இல் ரூ.6,854 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியது.

15. நிலத்தடிநீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம் போன்ற சவால்களைத் தமிழ்நாடு சமாளித்தால் விவசாயத்திலும் அது சார்ந்த துறைகளிலும் விரைவான வளர்ச்சியை அடைய முடியும். காலநிலைக்கேற்ற செயல்பாடுகள், இயந்திரமயமாக்கல், அறுவடைக்குப் பிந்தைய மதிப்புக் கூட்டல் ஆகியவை இந்தத் துறைகளில் வருமானத்தைக் கணிசமாக உயர்த்தும்.

16. தமிழ்நாடு மிகச்சிறந்த தொழில்துறை ஆற்றல் மையமாக உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை 11.90% பங்களிக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் நாட்டில் முன்னணியில் உள்ளது. உதயம் (Udyam) இல் பதிவுசெய்யப்பட்ட 35.56 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் (MSMEs), தமிழ்நாடு 2023-24இல் தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. “இந்தியாவின் டெட்ராய்ட் என்றழைக்கப்படும் இம்மாநிலத்தில், மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்களை உற்பத்திசெய்யும் 1,500 தொழிற்சாலைகள் உள்ளன. மேலும் ஜவுளி, தோல் பொருள்கள், மின்னணு உற்பத்தி ஆகியவற்றுக்கான முதன்மை மையமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. மோட்டார் வாகன உற்பத்தி, ஆடைகள், தோல் பொருள்கள் ஆகியவற்றில் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. ஜவுளி, இயந்திரங்கள், மின்னணுத் தயாரிப்புகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது. பொறியியல்சார் உற்பத்திப் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், ஆயத்த ஆடைகள், பருத்தி நூல், கைத்தறிப் பொருள்கள், தோல் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதிலும் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. 2023-24இல், தமிழ்நாட்டின் மொத்தத் தொழிலாளர்களில் 33.31% (15.97% உற்பத்தி, 17.2% கட்டுமானம்) தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

17. 2021-22 மற்றும் 2023-24க்கு இடையில், உற்பத்தித் துறை 8.33% ஆகவும், கட்டுமானத் துறை 9.03% ஆகவும் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்து உபகரணங்கள், ரப்பர் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள், மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள், ரசாயனங்கள் உள்படப் பல்வேறு துணைத் துறைகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

18. 2024-ஆம் ஆண்டில் உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 14.55 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கு, தமிழ்நாடு தனது பணியாளர்களுக்குத் தொழில்துறை 4.0 தொழில்நுட்பங்கள் சார்ந்து மறுதிறன் பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

19. 2019-20 முதல் 2023-24 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் தொழில்துறைக்கு வர்த்தக வங்கிகள் அளித்துள்ள கடன் ரூ.25 லட்சம் கோடியிலிருந்து ரூ.3.01 லட்சம் கோடியாக

உயர்ந்துள்ளது. அந்நிய நேரடி முதலீடு ரூ.5,909 கோடியிலிருந்து ரூ.20,157 கோடியாக அதிகரித்துள்ளது.

20. தமிழ்நாட்டின் சேவைத் துறையானது வர்த்தகம், பழுதுபார்ப்பு, ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், போக்குவரத்து, சேமிப்பகம், தகவல் தொடர்பு, நிதிச் சேவைகள், மனை வணிகம் (ரியல் எஸ்டேட்) மற்றும் பல துறைகளை உள்ளடக்கியது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், கல்வி, சுகாதாரம், நிதி, சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்குத் தொழில்கள் ஆகியவற்றில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. விரைவான நகரமயமாக்கலால், போக்குவரத்து, வீட்டு வசதி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் ஆகிய உள்கட்டமைப்பு சேவைகளுக்கான தேவையானது அதிகரிக்கிறது. 2023-24ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் நகர்ப்புரப் பணியாளர்களில் 54.63% பேர் சேவைத் துறையில் பணிபுரிந்தனர். இது தேசிய சராசரியான 58.07%க்கு அருகில் உள்ளது. இவர்களில் 16.28% பேர் வர்த்தகம் மற்றும் மோட்டார் வாகனப் பழுதுபார்ப்புப் பணிகளிலும், 7.53% பேர் போக்குவரத்து மற்றும் சேமிப்பகங்களிலும், 6.28% பேர் தகவல் தொடர்புத் துறையிலும், 5% பேர் கல்வித் துறையிலும், 4.86% பேர் தங்குமிடம் மற்றும் உணவு சேவைகளிலும், 2.84% பேர் நிதி மற்றும் காப்பீட்டு சேவைகளிலும், 11.84% பேர் இதர சேவைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

21. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு சேவைத்துறையானது மீண்டெழுந்துள்ளது. 2021-22 மற்றும் 2023-வலுவாக 7.97% 24க்கு இடையிலான காலகட்டத்தில் இத்துறை வளர்ந்துள்ளமைக்கு, மனை வணிகத் (ரியல் எஸ்டேட்) துறை (9.41%), வர்த்தகம், பழுதுபார்ப்பு, ஹோட்டல்கள், உணவகங்கள் (7.98%), போக்குவரத்து மற்றும் சேமிப்பகங்கள் (7.67%) ஆகியவற்றின் வளர்ச்சியே காரணமாகும்.

22. தமிழ்நாட்டின் கடன்-வைப்பு விகிதம் (சிடிஆர்) இந்தியாவின் மூன்று முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இது தமிழ்நாட்டின் உயர் பொருளாதாரச் செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது. 2019-20ஆம் ஆண்டில் 109.2% ஆக இருந்த சிடிஆர் 2023-24இல் 117.7% ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவின் சிடிஆர் இதே காலகட்டத்தில் 76.5%இலிருந்து 79.6% ஆக உயர்ந்துள்ளது. பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள் சேவைத்துறைக்கு வழங்கிய கடன் அளவு 2019இல் ரூ.2.86 லட்சம் கோடியாக இருந்தது. இது 2023-24ஆம் ஆண்டில் ரூ.4.46 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

23. வங்கிக் கட்டமைப்பைப் பொறுத்த அளவில் 24,390 தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களைக் கொண்டு நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. டிஜிட்டல் வங்கி சேவை மற்றும் யுபிஐ பரிவர்த்தனை ஆகியவற்றின் எழுச்சி மாநிலத்தின் நிதிப் பரிவர்த்தனை முறைகளைப் பெரிதும் மாற்றியுள்ளது. இது விரைவான, தடையற்ற பரிவர்த்தனைகளை உறுதிசெய்ததுடன் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் நிதி உள்ளாக்கத்துக்கும் வழிவகுக்கிறது.

24. பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நிலைத்தன்மைக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கம் மிக முக்கியக் காரணியாகும். 2019-20ஆம் ஆண்டில் 15 முதல் 59 வயதுடைய தனிநபர்களுக்கான தமிழ்நாட்டின் தொழிலாளர் பங்கேற்பு விகிதமானது அகில இந்திய சராசரியான 56.9% உடன் ஒப்பிடும்போது, 63.3% ஆக இருந்தது. 2023-24இல் இது 64.6% ஆக உயர்ந்து தேசிய சராசரியான 64.3%ஐக் கடந்துள்ளது.

25. பல்வேறு சமூகக் குறியீடுகளில், முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு உள்ளது. இது சமூக முன்னேற்றக் குறியீடு (எஸ்பிஐ) மற்றும் உயர்கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம் (ஜிஇஆர்) ஆகியவற்றில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. மேலும், குறைவான குழந்தை இறப்பு விகிதம், குறைவான பிறப்பு விகிதம், குறைந்த வறுமை நிலைகள் ஆகியவற்றில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (எஸ்டிஜி) குறியீட்டிலும் சுகாதாரக் குறியீட்டிலும் மூன்றாமிடத்தில் உள்ளது.

26. சமூகத் துறைக்கான செலவினங்களைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. 2019-20இல் ரூ.79,859 கோடியாக இருந்த ஒதுக்கீடு, 2023-24ஆம் ஆண்டில் ரூ.1.16 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முக்கியமான முன்னெடுப்பாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது மாணவர்களின் வருகை அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதிசெய்துள்ளது.

அதைப் போலவே மகளிர் மேம்பாட்டுக்கெனக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணத் திட்டம் உள்ளிட்ட முன்னெடுப்புகளையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ளது.

27. 2005-06 முதல் 2022-23 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் வறுமை நிலை(ஹெச்சிஆர்) 36.54%இலிருந்து வெறும் 1.43% என வெகுவாகக் குறைந்துள்ளது. அதே வேளையில், அகில இந்திய அளவில் வறுமை நிலை 55.34%இலிருந்து 11.28% ஆகக் குறைந்துள்ளது. 2023-24இல் முக்கியமான மாநிலங்களில் ஊரகப் பகுதிகள் மற்றும் நகர்ப்புரங்களில் சராசரி தனி நபர் நுகர்வுச் செலவில் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பிடித்தது. தனிநபர் ஆண்டு வருமானத்தில் நான்காவது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது.

28. இந்தியாவிலேயே அதிகக் கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, தொடக்கக் கல்வி, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இலவசக் கல்வி, விலையில்லாப் பாட நூல்கள், கல்வி உபகரணங்கள், மிதி வண்டிகள் விநியோகம், மதிய உணவுத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மாணவர்கள் ஈடுபாட்டுடன் தொடர்ந்து வகுப்புகளுக்குச் செல்வதை உறுதிசெய்கின்றன. தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 58,722 பள்ளிகளில் 1.29 கோடி மாணவர்கள் பதிவுசெய்துள்ளனர். இது நாட்டின் மொத்த மாணவர் சேர்க்கையில் 5.24% ஆகும். தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் மொத்த மாணவர் பதிவு (ஜிஇஆர்) விகிதம் 98.4% ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 97.5% ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 82.9% ஆகவும் உள்ள நிலையில், தேசிய அளவில் இந்த விகிதம் முறையே 91.7%, 77.4% மற்றும் 56.2% ஆக உள்ளது. தமிழ்நாட்டில் தொடக்க மற்றும் உயர்நிலைக் கல்வியில் ஆசிரியர் மாணவர் விகிதம் தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது. நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின்படி பள்ளிக் கல்வித்தரநிலைக் குறியீட்டில் கேரளாவுக்கு (82.2%) அடுத்த நிலையில் தமிழ்நாடு (73.4%) உள்ளது. மேல்நிலைக் கல்வியைத் தொடர முடியாமல் இடைநிற்றல் வீதம் தமிழ்நாட்டில் 4.5% ஆக உள்ள நிலையில், தேசிய சராசரி 12.6% ஆக உள்ளது.

29. நாட்டிலுள்ள சிறந்த 50 ஆராய்ச்சி நிறுவனங்களில் மூன்று நிறுவனங்களைக் கொண்டு உயர் கல்வியிலும் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், தேசிய அளவில் சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 8 மாநிலப் பல்கலைக்கழகங்களும் சிறந்த 100 கல்லூரிகளில் நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இடம்பெற்றுள்ளன. மாநிலத்தில் உள்ள பல பல்கலைக்கழகங்கள் என்ஏஏசி அங்கீகாரத்தில் உயர்ந்த தர வரிசையைப் (ஏ++/ஏ+/ஏ) பெற்றுள்ளன. இந்தியாவிலே அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்ப நிறுவனங்களைக் (506 பொறியியல் கல்லூரி, 492 பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்) கொண்டு, உற்பத்தித் துறைக்கும் சேவைத் துறைக்கும் அதிக திறன்மிகு பணியாளர்கள் கிடைப்பதை உறுதிசெய்கிறது.

30. ஐந்தாவது தேசியக் குடும்ப நல சுகாதாரக் கணக்கெடுப்பின்படி பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் மாநிலம் சிறப்பாகச் செயல்படுகிறது. வாழ்நாள் எதிர்பார்ப்பில் முக்கிய மாநிலங்களில் மூன்றாம் இடம் வகிக்கிறது. மருத்துவச் சுற்றுலாவுக்கு உகந்த இடமாகவும் வளர்ந்துள்ளது. 2023-24ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சுகாதார உள்கட்டமைப்பானது, 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,336 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 372 அரசுப் பொது மருத்துவமனைகள், 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

31. கல்வித் துறையில் அனைத்து நிலைகளிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்ததிலும் பொது சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தியதிலும் வெற்றிகரமாக விளங்கும் தமிழ்நாடு, புதிய சுகாதாரத் திட்டங்கள், மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக வயது முதிர்ந்தவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண வேண்டும்.

32. தமிழ்நாடு கவனம்கொள்ள வேண்டிய ஒன்றாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. அண்மைய ஆண்டுகளில் பெரும்புயல்கள் (2016இல் வர்தா, 2017இல் ஒக்கி, 2018இல் கஜா, 2023இல் மிக்சாங் மற்றும் 2024இல் /பெங்கல்) மற்றும் வெள்ளம் (குறிப்பாக 2015 மற்றும் 2017) உள்ளிட்ட தீவிர வானிலை நிகழ்வுகளை மாநிலம் அதிகம் அனுபவித்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு +0.68 டிகிரி செல்சியஸ் அதிகரிப்புடன் சராசரி வெப்பநிலை மாற்றத்தில் மேல்நோக்கிய நிலை காணப்படுவதோடு, மாநிலத்தில் மழைப் பொழிவு குறைந்துள்ளதும் தெரியவந்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தின் கால நிலை ஆய்வு நிலையத்தின் அறிக்கை, வட கிழக்குக் கடலோரப் பகுதிகள் தீவிர வானிலை நிகழ்வுகளால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை எனவும், வடகிழக்குப் பருவமழையின்போது, பெருவெள்ளம், சூறாவளி,

கடல் மட்டம் உயர்வு, நீண்ட நாள்களுக்கு நீர் தேங்குவதால் விவசாயத்தில் ஏற்படும் கடும் சேதம் போன்ற பாதிப்புகளை எதிர்கொள்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளது. அடர்ந்த காடுகள் காரணமாகக் கரியமில வாயு குறைவாக வெளிப்படுவதால் ஒப்பீட்டளவில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் குறைந்த பாதிப்பை எதிர்கொள்கின்றன. அதே வேளையில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் பாதிப்புக்குள்ளாவதால் வறட்சி அதிகரித்து, விவசாய உற்பத்தியைப் பாதிக்கிறது.

33. தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவை உருவாக்கியுள்ள தமிழ்நாடு அரசு, காலநிலை மாறுபாடுகளின் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்கூட்டியே தயாராகும் அணுகுமுறையைக் கையிலெடுத்துள்ளது. 2023-30 ஆண்டுக்கான தமிழ்நாடு காலநிலை மாற்றச் செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளதோடு காலநிலை மாறுபாடுகளை எதிர்கொள்ள ரூ.1000 கோடி பசுமை நிதியமும் உருவாக்கப்பட்டுள்ளது. நிதி ஆயோக்கின் எஸ்டிஜி 13 (காலநிலைச் செயல்பாடு) குறியீடு 2023-24 அறிக்கையில் தமிழ்நாடு 81 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. தேசிய சராசரியான 67ஐவிட இது அதிகமான அளவில் உள்ளது.

34. தமிழ்நாடு அதன் 2023-30 செயல்திட்டத்தின் வாயிலாகக் காலநிலை சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளது. கரியமில உமிழ்வுக் குறைப்பு, நீடித்த வேளாண்மை, சிறப்பான நீர் மேலாண்மை உள்ளிட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. நகர்ப்புற வெள்ளங்கள், வெப்ப அலைகள், மற்றும் பல்லுயிர் இழப்பு ஆகியவற்றை எதிர்கொள்ளப் பசுமை உள்கட்டமைப்பும் கடலோரச் சுற்றுச் சூழல் பாதுகாப்பும் தேவைப்படுகின்றன.

35. தமிழ்நாட்டின் நடுத்தரக் கால வெற்றியானது அதன் உழைக்கும் வயதினரை முடுக்கிவிடுவதையும் நீடித்த வளர்ச்சி குறித்த கவனத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளையுமே சார்ந்துள்ளது. காலநிலை மாற்றங்களுக்குத் தீர்வு காணவும், தொழிலாளர்களின் தேவை-விநியோகச் சமநிலையின்மையினைச் சரிசெய்யவும் புதுமையான மற்றும் ஒருங்கிணைந்த கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்துவதன் மூலம் இந்தியப் பொருளாதாரப் பரப்பில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்க முடியும்.

தமிழ்நாடு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 முக்கிய அம்சங்கள்

தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் 2025-2026 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் பிற விவசாயத் துறைகளை உள்ளடக்கிய ரூ. 45,661 கோடி மொத்த ஒதுக்கீட்டை அவர் முன்மொழிந்தார்.

அதன் முக்கிய அம்சங்கள்:

- 42 கோடி ரூபாய் செலவில், வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயக் கணக்காளர்களைக் கொண்டு நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாய ஆலோசனைகளை வழங்க 1000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- நெல் உற்பத்தியை அதிகரிக்க 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிர்ச் சேதங்களிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, 841 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- 2024-25 அரவைப் பருவத்தில் 1 லட்சத்து 30 ஆயிரம் கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு 349 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்க 297 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 3 லட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் கோடை உழவுக்காக 24 கோடி ரூபாய் உழவு மானியமாக வழங்கப்படும்.
- நுண்ணீர்ப்பாசனத் திட்டம் - 3 லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு 1,168 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் முதன்முறையாக முந்திரி வாரியம் அமைக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- முதன்முறையாக, 20 உழவர் சந்தைகள் உள்ளூர் ஆன்லைன் வர்த்தகத் தளத்துடன் (ஆன்லைன் வீட்டு விநியோகம்) இணைக்கப்பட்டு, நுகர்வோர் புதிய காய்கறிகளை நேரடியாகத் தங்கள் வீடுகளுக்குப் பெறும் வகையில் வழிவகை செய்யப்படும்.
- நல்லூர் வரகு (கடலூர்), வேதாரண்யம் முல்லை (நாகப்பட்டினம்), நாத்தம் புளி (திண்டுக்கல்), ஆயக்குடி கொய்யா (திண்டுக்கல்), மற்றும் கப்பலப்பட்டி கரும்பு முருங்கை (திண்டுக்கல்) போன்ற விவசாயப் பொருட்களுக்கு புவியியல் குறியீடு (GI) பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- 17,000 விவசாயிகள் பயனடையும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்திற்கு 215 கோடி 80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 63 ஆயிரம் மலைவாழ் பழங்குடியினருக்காக மலைவாழ் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த 22 கோடி 80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 15 திட்டக் கூறுகளைக் கொண்ட முதலமைச்சரின் "பூமியைக் காப்போம், மனிதர்களைக் காப்போம்" திட்டத்தைச் செயல்படுத்த 142 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2,338 கிராமப் பஞ்சாயத்துக்களில் தன்னிறைவை அடைவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் உன்னத முயற்சியாக, கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 269 கோடி 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.
- ஆரம்ப ஒதுக்கீடாக ரூ. விவசாய விளைபொருட்களுக்கான 100 மதிப்புக்கூட்டும் அலகுகளை அமைப்பதற்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு அலகுக்கு அதிகபட்சமாக ரூ. 1 கோடியே 50 லட்சம் மானியம் வழங்கப்படும்.
- 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ. 50 கோடியே 79 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

- மக்காச்சோள விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க, 1,87,000 ஏக்கர் பரப்பளவில் ரூ. 40 கோடி ஒதுக்கீட்டில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

- நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துக்களைப் பயிரிடும் 90,000 விவசாயிகள் பயனடையும் வகையில், ரூ. 108.6 கோடி மதிப்பில் எண்ணெய் வித்துக்கள் இயக்கம் செயல்படுத்தப்படும்.

- தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் ரூ.52 கோடியே 44 லட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

- இயற்கை விவசாயத்தைப் பரப்புவதற்காக ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆதி திராவிட மற்றும் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் வழங்க ரூ.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களை ஊக்குவிக்க, ரூ.12.5 கோடி ஒதுக்கீட்டில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

- நிலையான மகசூலை உறுதி செய்ய, தரமான விதை உற்பத்திக்கு ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.12 கோடியே 21 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் பருத்தி உற்பத்தி விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

- "தமிழ்நாடு வேளாண் காடுகள் கொள்கை" - அதிக மதிப்புள்ள மரங்களை வளர்ப்பது, அவற்றை பதிவு செய்வது, வெட்டுவது மற்றும் விற்பனைக்கு எடுத்துச் செல்வது போன்ற அனைத்து நடைமுறைகளையும் எளிதாக்குவதன் மூலம் பசுமையான தமிழ்நாட்டை உருவாக்குதல்.

- ரூ. 125 கோடி மதிப்பில் ஊட்டச்சத்து வேளாண் இயக்கம்.

- ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம் ரூ. 35 கோடியே 26 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

- 130 வேளாண் இயந்திர வாடகை மையங்களை அமைக்க ரூ. 10 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- காவேரி, வெண்ணாறு, வெள்ளாறு வடிநிலப் பகுதிகள் மற்றும் கல்லணைப் பகுதிகளில் உள்ள "சி" மற்றும் "டி" கால்வாய்களில் மீதமுள்ள 2,925 கிலோமீட்டர் நிலப்பரப்பில் ரூ. 13.80 கோடி ஒதுக்கீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- முதலமைச்சரின் சூரிய சக்தி பம்ப் செட்டுகள் திட்டம் ரூ. 24 கோடி செலவில் 1000 விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

- நெல், மக்காச்சோளம், வாழை, நிலக்கடலை மற்றும் உளுந்து போன்ற பயிர்களின் சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கலைச் செயல்படுத்த, ரூ. 3 கோடி ஒதுக்கீட்டில் 1,500 ஏக்கர் பரப்பளவில் இயந்திரமயமாக்கல் செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்படும்.

- ரூ. 20 கோடி மதிப்பீட்டில், 9 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.

- ரூ. 39.20 கோடி செலவில், 56 ஒழுங்குமுறை விற்பனை நிலையங்கள் புதிதாக மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் ஒருங்கிணைக்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் தேசிய அளவில் வர்த்தகம் செய்து கூடுதல் வருமானம் ஈட்ட முடியும்.

- ரூ.8 கோடி மதிப்பீட்டில் 50 உழவர் சந்தைகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- ஒவ்வொரு பகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது சேகரிப்பு மையங்களில் விவசாய வர்த்தகம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ரூ.10 லட்சம் வரை உற்பத்தி சார்ந்த கடன்கள் வழங்கப்படும்.

- விவசாயத்தில் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக, வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் பெயரில் ரூ.1 கோடி ஒதுக்கீட்டில் விருது (டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி) வழங்கப்படும்.